


29 ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com




நதி: 29 | பாலம்: 01 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 01, 2019

# மாலியில் சமாதான முன்னெடுப்புக்களில் கனடா!

மாலியில் ஐக்கிய நாடுகள் சபை எடுத்து வரும் சமாதான முன்னெடுப்புகளில் கனடாவின் பங்கு முக்கியமானதாகும் என கனேடியப்பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கூறினார். மாலியில் உள்ள Gao என்னும் இடத்தில் அமைந்துள்ள கனேடிய இராணுவப்படையினர் தங்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் பணியினரைக் கொண்ட விமானப்படைத்தளத்திற்கு இரகசியமாக வைக்கப்பட்டிருந்த திடீர் பயணத்தை மேற்கொண்ட கனேடியப்பிரதமர் அங்கு இதனைத் தெரிவித்தார்.



கனேடியப்பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, பாதுகாப்பு அமைச்சர் Harjit Sajjan மற்றும் இராணுவப்படையினரின் தலைமை நிர்வாகி (CDS) ஜெனரல் Jonathan Vance உடன் 2018 டிசம்பர் 22இல் இராணுவ விமனத்தில் மாலிக்கு இப்பயணத்தை மேற்கொண்டிருந்தார். பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்பயண விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

ஜஸ்ரின் ரூடோ, Harjit Sajjan மற்றும் Jonathan Vance மூவரும் கனேடிய இராணுவவீரர்களுக்கு தமது கையால் Turkey இரவு உணவு பரிமாறி நத்தார்தின வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்தனர். இரவு உணவு விருந்தின் பின்னர் இராணுவ வீரர்களுக்கு உரையாற்றிய கனேடியப் பிரதமர், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணியில் கனடாவிற்கு மிகப்பெரிய வரலாறு உள்ளது. இதை நான் பல கனேடியர்களிடம் இருந்து நேரடியாகக் கேட்டுள்ளேன். இது நாங்கள் நல்லவர்களாகவும் பண்பானவர்களாகவும் (Nice and Polite) இருப்பதால் மட்டும் எம்க்கு கிடைத்த விடயமல்ல, உலகெங்கிலும் தேவைப்படும் இடத்தில் குறிப்பிடத்தக்க மற்றும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த (Significant and Positive) நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம். எமது திறனை அமைதி காக்கும் பணியில் நாங்கள் எப்போதும் தொடர்ந்தும் நிரூபித்து வந்திருக்கிறோம் என்றார்.

2018 யூலையில் இருந்து கனடா ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் பணியில் மாலியில் ஈடுபட்டுள்ளது. கனேடிய இராணுவ வீரர்கள் 250 பேருடன் 4 ஆயுதம் தரித்த உலங்குவானூர்திகள், 2 பயணிகள் உலங்குவானூர்திகள் உட்பட 8 உலங்குவானூர்திகளும் இந்த அமைதிகாக்கும் பணியில் மாலியில் ஈடுபட்டுள்ளன. தற்போதைய உடன்படிக்கையின்படி கனடாவின் இந்த அமைதிகாக்கும் பணி 2019 யூலையில் நிறைவு பெறும். அடுத்த தொகுதி அமைதி காக்கும் படைவீரர்களை Romania அனுப்ப உள்ளது. அவர்கள் வருவது 2019 செப்ரெம்பர் மாதம் வரை தாமதப்படும் என்று கூறப்படுவதால், ஐக்கிய நாடுகள்சபை கனடாவின் பணியை Romania இராணுவம் வரும்வரை நீடிக்குமாறு கேட்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

காயமடையும் ஐக்கியநாடுகள் சபை அமைதிகாக்கும் இராணுவவீரர்களையும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்களையும் அவ்விடங்களில் இருந்து உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச்செல்வது மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவது இவையே மாலியில் உள்ள கனேடிய இராணுவத்தின் பணியாகும்.

மாலியில் ஐக்கிய நாடுகள்சபை இந்த அமைதிகாக்கும் பணியில் 2013ஆம் ஆண்டில் இருந்து ஈடுபட்டுள்ளது. அங்கு இதுவரை 175 ஐக்கியநாடுகள் சபையின் அமைதி காக்கும் படைவீரர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 2018ஆம் ஆண்டில் மட்டுமே 22பேர் உயிர் இழந்தனர்.

மாலியில் உள்ள ஐக்கியநாடுகள் சபையின் Gao விமானப்படைத்தளத்தில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் கனேடியப் பிரதமர் கனடாவின் இந்த அமைதிகாக்கும் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மாலியின் மிகப் பரந்த கவனிப்பாரற்றுக் கிடக்கும் நிலப் பரப்புகளில் நகரும் கருவிகள் மற்றும் துருப்புக்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதும் கனேடிய இராணுவத்தின் பணிகளில் சில என்றார். கனடாவின் மிகவும் திறமையான தொழில்முறைத் தேர்ச்சி பெற்ற

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் - 525

## குடும்ப ஆதன முகவர் (Family Realtor)



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

அனேகரின் வாழ்வில் மிகப்பெரிய முதலீடு எனக் கொள்வது ஆதன முதலீடேயாகும். பொதுவாக குடும்ப வைத்தியர், குடும்ப பல் வைத்தியர், பொருளாதார ஆலோசகர் போன்ற குடும்ப தேவைகளிற்கு எனப் பிரத்தியேகமாக இருக்கும்போது, வாழ்வின் முக்கிய முதலீடு செய்யும்போது குடும்ப அல்லது தனியான ஆதன முகவரை வைத்திருப்பதில் என்ன தவறு? இதனைப் பற்றிப் பலரும் பெரிதாகக் கவனத்தில் கொள்வதாகத் தெரிவதில்லை. காலத்திற்கு காலம், ஆதனத்திற்கு ஆதனம் புதிய வெவ்வேறான முகவர்களை தமது தேவைக்காகப் பாவிப்பதனை, குறிப்பாக இந்தக் காலத்தில் காணக்கூடியதாக உள்ளது. உங்களுக்கு ஆதனம் சம்பந்தப்பட்ட போதியளவு அறிவு இல்லாமலிருந்தால் அல்லது குடும்பத்தில் ஆதன முதலீட்டில் அனுபமிக்கவர்கள் இருக்காவிட்டால் அனுபவமிக்க ஆதன முகவரை உங்கள் பக்கம் வைத்திருப்பதால் எதிர்காலத்தில் பல நன்மைகள் கிடைக்கும்.

ஓர் ஆதன முகவரின் தொடர்பு இன்று ஆதனம் வாங்குதல் விற்றலுடன் முடிவதில்லை. மறுதலையாக வாங்குதல் விற்றலுடன் ஆரம்பமாகின்றது. ஆதனமுகவருக்கும் வாங்குபவருக்குமான தொடர்பு நீண்ட காலமாகும். தகுந்த, தரமான, அனுபவமிக்க, நேர்மையான முகவரை எவ்வாறு கண்டுபிடித்தல். உங்களுக்கு தெரிந்தவர் பலருடன் தொடர்புகொண்டு அவர்கள் மூலம் தெரியப்படுத்தப்படுவரே




சிறப்பாகலாம். பொதுவான Social Media மூலம் தெரிவு செய்யப்படுபவர் உங்களின் நீண்ட கால தொடர்பிற்கு எவ்வாறு உதவுவார்(?) சில விதிவிலக்குகள் காணப்படலாம். உங்களுக்கு தெரிந்தவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 4-5 முகவர்களில் இருவரைப்பற்றி விசாரித்து அவர்களில் ஒருவரை உங்கள் குடும்ப ஆதன முகவராகத் தெரிவு செய்யலாம். ஒருவரைத் தெரிவு செய்யும்போது கீழேயுள்ள ஐந்து குணாதியங்களை (Qualities) மனதில் கொள்ளவும்.

1. நேர்மை (Honesty) - விற்று, வாங்கல் நிலை வரும்போது நேர்மையான முகவர் நியாயமான அறிவுறுத்தலை வழங்குவார். எதிர்கால நோக்கமே முக்கியம். அதனடிப்படையிலேயே நேர்மையானவர் அறிவுரை வழங்குவார்.




2. அபிப்பிராயம் (Reputation) - ஆதனச் சந்தையில் பல முகவர்கள் இருப்பார்கள். நல்ல அபிப்பிராயம் உள்ளவருடன் தொழில் புரியும்போது பலவிதமான நன்மைகள் ஏற்படும். ஏற்கனவே தனது பெயரிற்குக் களங்கம் ஏற்படுத்தியவர் தமது தொழிலில் சிறப்பாக இருப்பாரா என்று கேள்வியே? ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து அவரின் குணாதிசயங்களை அறியமுடியும்.

3. Out of Box - சில ஆதனமுகவர்கள், தமது வாடிக்கையாளருக்காக (Client) மிகவும் சிரத்தையுடன் செயல்படுவார். குறிப்பிட்ட பகுதியில் ஆதனங்கள் சந்தையில் இல்லாத போதும், இவர்கள் தானாக முன்வந்து, குறிப்பிட்ட பகுதியில் ஆதனத்தை கண்டு பிடிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. சந்தையில் இல்லாத ஆதனங்களையும் அறியும் வாய்ப்புக்களையும் கொண்டிருப்பார். குறிப்பாக வியாபார நிலையங்கள், கட்டிடங்கள் பொதுவாகச் சந்தைக்கு வருவது குறைவு. இப்படியானவர்களினால் இவ்வாறான ஆதனங்களைக் கண்டு

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# MORTGAGE

- ⇒ $35,000.00 வரை Personal Loan (பெர்சனல் லோன் ) தேவையா?
- ⇒ In 24 hours $50,000.00 வரை 2nd மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒ Unlimited Private 2nd Mortgage தேவையா?- No Income Verification
- ⇒ மோட்கேஜ் பலன்ஸ் கட்டாது வீட்டினை பறி கொடுக்கும் நிலையில், அடுத்து என்ன செய்வதென யோசிக்கிறீர்களா?
- ⇒ Refinance / Renewal (ரிபைனான்ஸ் / ரினிவல்) செய்ய வேண்டுமா?
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா வேண்டுமா?

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**நீங்களும் வெல்லலாம் $100,000***

எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.

**அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும் ...**

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**



**ஜெ(Jey) இராசதுரை** MBA. BBA (Hon). AMP

Team Leader/Mortgage Agent/Real Estate Broker

**Cell : 416 - 624 - 4843**

RIGHT AT HOME REALTY INC.

1504 Markham Road,
Toronto ON M1B 2V9
(Markham Road & HWY 401)

MORTGAGE ALLIANCE Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- ஆதித்தன் -

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டதா?

தமிழ் தேசியக் கூட்டமைப்பை தொடர்ந்து விமர்சித்தும் குற்றம்சாட்டியும் வருகின்ற தமிழ் கட்சிகள் சில நடைபெற்று முடிந்த அரசியல் குழப்பம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்த நிலைப்பாடு குறித்தும் கடுமையாக விமர்சித்து வருகின்றன. குறிப்பாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியன கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து எவ்விதமான பேரம் பேசுதலுமின்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்தமை தவறானது எனவும், இது தமிழ் மக்களுக்கு செய்யப்பட்ட துரோகம் எனவும் அக்கட்சியினர் கூறுகின்றனர்.

சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி அனந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ள முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரான அனந்தி சசிதரன் போன்றோர் இவ்வாறான குற்றச்சாட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது சுமத்துகின்றனர்.

தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதை தவிர்த்து ஐக்கிய தேசியக் கட்சிக்காக நீதிமன்றத்தை நாடியுள்ளரெனவும், இது தமிழ் மக்களுக்கு செய்துள்ள துரோகம் என்றும் அனந்தி சசிதரன் கூறுகின்றார்.

கூட்டமைப்பு தவறான பாதையில் செல்கின்றது என்று கூறும் இவர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு கூட்டணியை உருவாக்க முடியாமலுள்ள நிலையில், கூட்டமைப்பிற்கு எதிராக கருத்துக் கூறுவதில் ஒற்றுமைப்பட்டுள்ளனர். இதில், தற்போது தனிக் கட்சியொன்றை ஆரம்பித்திருக்கும் முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மட்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை இது தொடர்பில் கடுமையாக விமர்சிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விக்னேஸ்வரன் முன்னாள் நிதியரசர் என்ற படியினால் அவர் நாட்டின் அரசமைப்பு மீறப்பட்ட தருணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதனால் அவர் இப் பிரச்சினை தொடர்பில் மௌனம் காத்திருக்கலாம்.



நாட்டின் அரசியலமைப்பிற்கு எதிராகவும், சட்டத்தை மீறியும் ஓர் காரியம் நடைபெறுகின்ற போது ஒரு பொறுப்புள்ள கட்சி எதைச் செய்ய வேண்டுமோ அதனையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்துள்ளது. நன்மைக்கும் தீமைக்குமிடையே பேரம் பேசி இலாபம் பெறமுடியாது. அது ஒரு மோசமான காரியமாகவே பார்க்கப்படும். பெரும்பான்மையான தமிழ் மக்களின் கருத்தும் இவ்வாறே அமைந்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் குழப்ப நிலைக்கு யார் காரணம் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அதற்கு என்ன காரணம் என்பது தான் இன்னும் மக்களால் புரிந்து கொள்ள முடியாமலுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பக்க காரணங்களைக் கூறி நியாயப்படுத்த முற்பட்டாலும் கூட மக்கள் அதனை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை. ஆனால், நடைபெற்ற விடயம் தவறானது என்பதுதான் பெரும்பாலான மக்களின் நிலைப்பாடு.

நடைபெற்ற ஜனநாயக மீறலுக்கு எதிராகவே சிறுபான்மை கட்சிகள் யாவும் ஒன்றிணைந்தன. தங்களுக்குள் காணப்படும் முரண்பாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு, ஓர் அராஜகத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் அவை ஒன்றிணைந்து செயற்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோடிக் கணக்கான பணத்திற்கு விலை பேசப்பட்ட போதும், பிரதான முஸ்லிம் கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றிலிருந்து எவருமே விலைபோகவில்லை. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியில் இருந்தும் எவரும் விலைபோகவில்லை. சாதாரண தேர்தல் காலங்களில் கட்சித் தாவல் என்பது சாதாரணமாகவே நடைபெறுவது வழக்கம். ஆனால், நாட்டின் அரசியலமைப்பை பாதுகாக்கும் தருணமொன்றில் இவர்கள் யாவருமே உறுதியாக நின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து (புளொட் அமைப்பைச் சார்ந்த) மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மட்டுமே மஹிந்த தரப்பினிடம் விலைபோனார். எனினும், நாட்டில் நடந்த பாரிய ஜனநாயக மீறலுக்கும், அரசமைப்பு மீறலுக்கும் தீர்வினை ஏற்படுத்தும் பணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்கு பிரதானமானதாகும். கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவில்லாமல் போயிருந்தால் நிலைமை மோசமானதாகவே அமைந்திருக்கும்.

இதற்காக தெற்கிலுள்ள சிங்கள புத்திஜீவிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை இன்று பாராட்டுகின்றனர். சர்வதேச நாடுகள் இப்பிரச்சினையில் கூட்டமைப்பின் வகிபாகத்தை பாராட்டுகின்றனர். (இடதுசாரி கடும்போக்காளர்களாகக் கருதப்படும் ஜே.வி.பியினர் இவ்விடயத்தில் எடுத்த நிலைப்பாடு காரணமாக அவர்கள் மீதான மதிப்பும் உயர்ந்துள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.)

கூட்டமைப்பு இரு தரப்பினரிடமும் பேரம் பேசியிருக்க வேண்டும், பேரத்தை ஏற்றுக் கொள்ளும் தரப்பிற்கு ஆதரவளித்திருக்க வேண்டும் என்று கூறுகின்ற தமிழ் கட்சிகள் தமிழ் மக்கள் எதற்காக 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்திற்கு ஆதரவளித்தனர் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஸவை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகவே அவர்கள் வாக்களித்தார்கள். மைத்திரிபால சிறிசேனவையும், ரணில் விக்கிரமசிங்கவையும் ஆட்சிக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக அல்ல.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டமைப்பின் தலைவர்களை அழைத்து, தங்களுக்கு ஆதரவளிக்காவிட்டாலும் பரவாயில்லை. நடுநிலையாக இருக்குமாறு கேட்டுக்கொண்ட போது, கூட்டமைப்பின் தலைமை இவ்வாறான கருத்தையே மைத்திரியிடம் தெரிவித்ததாக சுமந்திரன் கூறியுள்ளார். ஒன்று - நடைபெற்ற விடயம் அரசமைப்பிற்கு பாதகமானது அதற்கு ஆதரவளிக்க முடியாது என்பது. இரண்டாவது - தமிழ் மக்களால் வெறுக்கப்பட்ட, வெளியேற்றப்பட்ட ஒருவரை மீண்டும் களத்திற்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட முடியாது என்பது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை யாரும் தவறென்று விமர்சிக்க முடியாது.

மஹிந்தவுடன் ஒரு பேரம் பேசுதல் நடைபெற்று, அதனை அவர் ஏற்றுக்கொண்டு, அவர் மீண்டும் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் நிலை ஏற்பட்டிருந்தாலும்கூட அவர் ஏற்றுக் கொண்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவார் என்பதற்கு என்ன உறுதி? கடந்த அவரது ஆட்சிக் காலம் எல்லோருக்கும் ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

“ரணில் மேற்குலகம் விரும்புகின்ற ஒருவர். எதனையும் மறுதலிக்காமலும், அதே வேளை, நடைமுறைப்படுத்தாமலும் ஒரு இரட்டைப் போக்கை கொண்டவர்- இதனால், மஹிந்த ராஜபக்ஸ ஆட்சிக்கு வந்தால் கடுமையான போக்கை கடைப்பிடிப்பார்- சர்வதேசத்தின் கருத்துக்களை மறுதலிப்பார்- பொறுப்புக் கூறலை

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 40



குரு அரவிந்தன்

கனடாவின் முதற்குடி மக்களில் ஓர் இனத்தவரான, இலைமறை காயாக லபரடோர் பகுதியில் வாழ்ந்த இன்னு இனமக்கள் தொடக்க காலத்தில் முதற்குடி மக்களாக அரசால் அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள் காடுகளில் மறைந்து வாழ்ந்ததாலும், ஐரோப்பிய தோல் வியாபாரிகளின் கண்ணில் படாமலும் நீண்ட காலம் வாழ்ந்ததால் இன்னு இனம் என்று ஓர் இனம் இருந்ததை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களின் நீண்டகாலப் போராட்டத்தின் பின்தான் 2002ஆம் ஆண்டு மத்திய அரசால் முதற்குடி மக்களில் ஓர் இனமாக அவர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். 2008ஆம் ஆண்டு 2200 இன்னு இனமக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததற்கான பதிவுகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

1950ஆம் ஆண்டு இவர்களை மீளக்குடியேற்ற அரசு முயன்றபோது, அவர்களின் பாரம்பரிய நிலங்களை அவர்கள் இழக்க வேண்டி வந்தது. அதுமட்டுமல்ல பாரம்பரிய தொழில்களையும் கைவிட வேண்டி வந்தது.

அடுத்த தலைமுறைக்கு கல்வி அறிவைக் கொடுக்கும் நோக்கத்தோடு 1960களில் அப்பகுதிகளில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பாரம்பரிய தொழில்களான வேட்டையாடுதலைத் தடுத்து, அடுத்த தலைமுறைப் பிள்ளைகளுக்குக் கல்வி அறிவைக் கொடுப்பதே அரசின் முக்கிய நோக்கமாக இருந்தது. நல்லது ஒன்றை நினைக்க அது வேறு வழியில் செயற்பட்டு தீமைகளைக் கொண்டு வருவதுபோல, கல்வி அறிவை ஊட்டுவதற்காகப் பெற்றோரிடம் இருந்து பிள்ளைகள் பிரிக்கப்பட்டதால், பிள்ளைகளின் பெற்றோர் பேசிய இன்னு மொழியும், அவர்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களும் அடுத்த தலைமுறைக்குச் சென்றடைய முடியாமற் போய் விட்டது. பெற்றோரிடம் இருந்து கல்வி அறிவை ஊட்டுவதற்காகப் பிரிக்கப்பட்ட பிள்ளைகளும் சில அதிகாரிகளால் தவறான வழியில் வழிநடத்தப்பட்டதால் அது இன்னு இனத்தைப் பெரிதும் பாதித்தது. இன்றுவரை இன்னு இனத்தவர்களின் குற்றச்சாட்டுகளில் தங்கள் அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் பாதிக்கப்பட்டதே முக்கிய குற்றச்சாட்டாக இருக்கின்றது.

பாரம்பரிய வேட்டையாடுதல் தடுக்கப்பட்டதால், சிறு குடிசைகளில் வாழ்ந்த இன்னு இனத்தவர்கள் அரச உதவி பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதனால் அரசை நம்பியிருக்க வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். ஏனைய முதற்குடி மக்களைப் போலவே, பாரம்பரிய நிலங்களில் இருந்து றிசேவ் பகுதிகளுக்கு இவர்களின் இடங்கள் மாற்றப்பட்டதால் புதிய சூழலை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கனடாவில் ஏனைய முதற்குடி மக்கள் எதிர் கொண்ட பிரச்சனைகளையே இவர்களும் புதிய குடியேற்றங்களில் எதிர்கொள்ள வேண்டி வந்தது. இதன்காரணமாக அளவுக் கதிகமாக மதுபானம் அருந்துதல், போதை வஸ்து பாவனை, குடும்ப அங்கத்தவர்



INNU Traders

மீதான வன்முறைகள், குழந்தைகளின் வளர்ப்பில் கவனமின்மை போன்ற நிலை அப்பகுதி குடியேற்ற மக்களிடையே ஏற்பட்டது. இன்னு இனமக்கள் பரம்பரையாக வாழ்ந்த பகுதிகளில் புதிதாகத் தொடக்கப்பட்ட தொழிற்சாலைகள், சுரங்கக வேலைகள் போன்றவற்றின் தொழிற்பாடுகள் காரணமாக இன்னு இன மக்கள் இடம் பெயர்ந்ததால், அவர்களின் பாரம்பரிய நிலங்களில் இருந்து அவர்கள் பிரிக்கப்பட்டனர்.

மேற்கு லபரடோரில் உலேகம் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1950களில் சுரங்க வேலைகள் அங்கு ஆரம்பிக்கப் பட்டதும் இவர்களின் இடப்பெயர்வுக்கு ஒரு காரணமாகும். இதைவிட 1969ஆம் ஆண்டு சேர்ச்சில் போல்ஸ் என்ற அணைக்கட்டுப் பகுதியில் தேங்கியிருந்த நீர் பெருக்கெடுத்ததால் இப்பகுதியில் வாழ்ந்த இன்னு இனமக்கள் தங்களின் நிலங்களை மட்டுமல்ல ஆடம்பரப் பொருட்களையும், வேட்டைக்குரிய பாரம்பரிய ஆயுதங்களையும் இழக்க வேண்டி வந்தது. 1980களில் இப்பகுதியில் விமானப் படை விமானங்கள் அடிக்கடி பயிற்சியில் ஈடுபட்டதால், மிருகங்களும், பறவைகளும் அந்த இடத்தைவிட்டு விலகிச் சென்றதால், தங்களுடைய பாரம்பரிய வேட்டை முறைகள் பாதிக்கப்பட்டதாக இன்னு இனமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் எழுந்தன.

இப்படியான ஒரு நிலையில் ஓரளவு படித்த இன்னு இனமக்கள் ஒன்று சேர்ந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். கியூபெக் மாகாணத்தில் அற்ரிக்காமிக் மொன்ராக்நெயிஸ் என்ற பெயரிலும், நஷ்காபி மொன்ராக்நைஸ் என்ற பெயரில் லபரடோரிலும் 1970களின் ஆரம்பத்தில் அரசியற் செயற்பாட்டுக் குழுக்களை இவர்கள் ஆரம்பித்தனர். குடியிருப்புத் திட்டத்தை வலுப்படுத்தல், பாரம்பரிய வேட்டையாடுவதற்கு உதவி செய்தல், நவீன வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற துறைகளில் இவர்கள் கவனம் செலுத்தினர். வேட்டையாடுதல் முற்றாகக் கைவிடப்படாததால் பனிக்காலத்தில் சில இன்னு இனமக்கள் தங்கள் வதிவிடங்களை விட்டு நீண்டகாலத்திற்கு வெளியே செல்கின்றனர். நவீன கருவிகளைப் பாவிக்கவும், குறிப்பாக விமானத்தில் செல்லவும், சினோமொபைல் வண்டிகளில் செல்லவும், செல்போன்களில் செய்திகளைப் பரிமாறவும் கூடிய வகையில் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இருக்கின்றனர். மதுபானம் அருந்துவதால் ஏற்படும் தீங்குகள் பற்றிய விழிப்புணர்வு இவர்களிடையே வெற்றிகரமாகச் செயற்படுத்தப் பட்டதால் தற்போது அதனால் ஏற்படும் குற்றங்கள் குறையத் தொடங்கி விட்டன. தங்கள் இனத்தவர்களுக்கான சொந்தப் பாடசாலைகளையும் ஆரம்பித்து நடத்தத் தொடங்கி இருக்கின்றனர்.

அரசியலில் ஈடுபாடு கொண்ட இன்னு இனக்குழுவினர் தமது மக்களுக்காக உள்ளூர் மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் தேவைப்படும்போது குரல் கொடுக்கின்றர். பாரம்பரிய நிலங்களைப் பாதுகாக்கவும் உதவி செய்கிறார்கள். குறிப்பாக உலோக சுரங்கத் தொழிலில் முதலாளிகளிடம் இருந்து நிலங்களை மீட்டெடுக்கவும், மின்சார சபையிடம் இருந்து தங்கள் நிலங்களுக்கான நட்ட ஈடுகளைப் பெறுவதற்கும், நெடும்சாலை போடுவதற்காக அரசால் எடுக்கப்பட்ட காணிகளை இழந்தவர்களுக்கு அதற்கான நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இவர்கள் உதவுகின்றனர். இவர்களுக்கு ஓரளவு அரசநிதி கிடைப்பதால் மாகாண அரசுடன் சேர்ந்து குடியிருப்பு திட்டங்கள், சுகாதார வசதிகள், கல்வி வசதிகள் போன்றவை இன்னு இனமக்களுக்குக் கிடைப்பதற்கு உழைக்கின்றர். இத்தகைய வசதிகளும், உதவிகளும் மத்திய அரசிடம் இருந்து கிடைத்தாலும், லபரடோர் எல்லையில் வாழும் சில இன்னு இனத்தவர்கள் இத்திட்டத்தின் கீழ் வராததால் ஏனைய முதற்குடி மக்களுக்குக் கிடைப்பது போல, இவர்களுக்கு இத்தகைய உதவிகள் கிடைப்பதில்லை.

இன்னு இனமக்களின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் ஏனைய முதற்குடி மக்களைப் போலவே மிருகத்தோல் வியாபாரத்திற்காக வட அமெரிக்காவுக்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் இவர்களைத் தங்களுக்கு இசைவான பெயர்களைச் சொல்லியே அழைத்தனர். சென். லோரன்ஸ் பிரெஞ்சு குடியேற்றத்தில் இருந்தவர்களை 'மலைவாசிகள்' என்று அழைத்தனர். அதன்பின் வந்த ஐரோப்பியர்கள் இவர்களை நஷ்காபி என்று அழைத்தனர். நஷ்காபி என்றால் நாகரிகம் அடையாதவர்கள் என்று பொருள்பட்டது. 20ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் வாழ்ந்த எல்லோரையும் பொதுப் பெயராக மொன்ராக்நெயிஸ் நஷ்காபி என்று அழைக்கத் தொடங்கினர். ஆனால் 1980களில் இன்னு இனத்தவர்கள் ஓரளவு கல்வியறிவு கொண்டதால், தங்கள்




Innu - aimun Language

இனத்தை இன்னு என்று அழைக்கத் தொடங்கினர். இன்னு என்றால் 'மனிதர்' என்று அவர்களின் மொழியில் அர்த்தமாகும். கிட்டத்தட்ட கிழக்கே போறல் காடுகளில் வாழ்ந்த கிரி இனத்தவர்களின் கலாசாரம், பண்பாடு போலவே இன்னு இனத்தவர்களின் கலாசாரம், பண்பாடுகளும் ஒன்று பட்டனவாக இருக்கின்றன.

மிருகத்தோலால் செய்யப்பட்ட கூடாரங்களில் வாழ்ந்த இவர்கள், கரிபோ, மூஸ், மான் போன்ற மிருகங்களை வேட்டையாடியும், சிலர் மரக்கறி வகைகளைப் பயிரிட்டும், மீன்பிடித்தும், மேபிள் பாணியைத் தயாரித்தும் தங்கள் சீவனத்தை நடத்தினர். கிரி மொழியோடு தொடர்புடைய இன்னு மொழியையே இவர்கள் பேசினார்கள். இன்யூட் இனமக்கள் அப்பகுதியில் வாழ்ந்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

1st & 2nd MORTGAGES... that meets your needs
MORTGAGE ALLIANCE
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
• Commercial Mortgages.
• Construction Mortgages
• Secured Credit line
• Consolidate 1st, 2nd, 3rd mortgages
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பம் தீர்ந்தது - பனிப்போர் தொடர்கிறது!

**- விகிர்தன் -**

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் உருவான அரசியல் குழப்பநிலை சுமார் 52 நாட்களுக்குப் பின்னர் தணிவடைந்தது. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலமாக இக்குழப்பநிலை முடிவிற்கு வந்தது. ஆனாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தரப்பினரிடையிலான பனிப்போர் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

கடும் பிடிவாதத்திலிருந்த ஜனாதிபதி மைத்திரி உயர்நீதிமன்ற தீர்ப்பின் பின்னர், தான் விரும்பியவாறு எதனையும் செய்ய முடியாத நிலையில், அதிரடியாக அவரால் பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஸவை நீக்கிவிட்டு, அமைச்சரவையினையும் கலைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும், ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கப் போவதில்லை என்று அடம்பிடித்தார் ஜனாதிபதி. பின்னர் ரணிலையே பிரதமராக நியமிக்கும் நிலையும் ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் கைச்சாத்திட்டாலும் ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்கப் போவதில்லை என்று தெரிவித்தது தனது தனிப்பட்ட அரசியல் நிலைப்பாடு என்றும், அந்த நிலைப்பாட்டில் இன்றுவரை எவ்வித மாற்றமும் இல்லாத போதிலும் நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்கும் ஜனநாயகத்திற்கும் மதிப்பளிக்கும் தலைவர் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு தான் அழைப்பு விடுத்ததாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் புதிய பிரதமர் மற்றும் நிகழ்விற்கு வருகை தந்திருந்த ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்து, அமைச்சர்கள் நியமனத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் பரிந்துரைக்கப்பட்ட சிலரை ஜனாதிபதி மைத்திரி தவிர்த்திருக்கின்றார். அமைச்சுப் பதவி தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியினால் 35 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில்



விக்ரமசிங்கவுக்கும் இடையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சமரச பேச்சுவார்த்தையொன்றும் இடம்பெற்றது. எனினும், அந்த பட்டியலிலிருந்து ஆறு பேர்களது பெயர்களை ஜனாதிபதி நீக்கிவிட்டார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை மீறி புதிய அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளும் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார். சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்திலும் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனது கட்சியிலிருந்து ஐ.தே.க அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளும் உறுப்பினர்கள் தொடர்பில் அக்கட்சியின் தலைவராகவுள்ள ஜனாதிபதி மைத்திரி எடுத்த தீர்மானத்தை எவரும் விமர்சிக்க முடியாது. இதேவேளை, அவர்கள் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டாலும் கூட அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்காது. ஏனெனில் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது.

மேலும், சில முக்கிய அமைச்சுக்களை தம் வசமே வைத்துக்கொள்ளவும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளமையும் முரண்பாடுகளையே ஏற்படுத்தியுள்ளது. சட்டம் ஒழுங்கு அமைச்சையும், ஊடக அமைச்சையும் அவர் தம்வசம் வைத்திருக்க தீர்மானித்தமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இறுதியில் சட்டம் ஒழுங்கு அமைச்சை தானே வைத்திருக்கப் போவதாக ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார். தன்னைக் கொலை செய்வதற்கான சதி தொடர்பான விசாரணை முடிவடையும் வரை பொலிஸ் அதிகாரத்தை தன்வசம் வைத்திருக்க அவர் தீர்மானித்துள்ளார் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறுகின்றார்.

தன்னைக் கொலை செய்வதற்கான சதி முயற்சிகள் குறித்து நேர்மையான விசாரணைகளை முன்னெடுக்காததன் காரணமாகவே ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தை கலைத்ததாக சிறிசேன பேட்டிகளில் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆக, அமைச்சர்களை நியமிப்பதில் ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம், முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியினரிடமிருந்த சட்டம் ஒழுங்கு அமைச்சை தனது கையில் வைத்துள்ளமை என்பன ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்குமிடையே தொடர்ந்து இழுபறி நிலையினையே ஏற்படுத்தி வருகின்றது.

இவற்றை விடவும், தொடர்ந்தும் ஜனாதிபதி மைத்திரி பல சந்தர்ப்பங்களில் பிரதமர் ரணிலை குறிவைத்து தாக்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. தன்னைக் கொலை செய்வதற்கான சதிமுயற்சியில் ரணில் தொடர்புபட்டுள்ளார் என்பதான கருத்தை அவர் இன்னமும் வெளிப்படுத்தி வருகின்றார். இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்ற நிலையில் அதற்கும் ரணில் விக்ரமசிங்க மீதே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

ஜனாதிபதியின் இவ்வாறான நடவடிக்கைகள் மற்றும், கருத்துக்களுக்கு எதிர்வினையாற்றும் விடயத்தில் பிரதமர் ரணில் சற்று அடக்கமாகவே நடந்து கொள்கின்றார். ஆனால், ஐ.தே.கவின் நடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது கருத்துக்களுக்கு சுடச்சுட பதிலளித்து வருகின்றனர். நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதியும், பிரதமர் தரப்பும் இவ்வாறு முரண்பாடான நிலைப்பாட்டிலேயே இருந்தால், அது நாட்டின் நிர்வாகத்தை சீராக கொண்டு செல்வதில் தொடர்ந்தும் சிக்கல்களையே ஏற்படுத்தும்.

இதற்கு ஒரேயொரு தீர்வு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதேயாகும். நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று மஹிந்த தரப்பினர் கோரிக்கை விடுக்கின்ற போதும், அதற்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே பொருத்தமானது.

அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். மஹிந்தவின் ஆதரவாளராக இருந்தபோதும் அண்மைக் காலத்தில் நடுநிலையான கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் ஒருவராக குமார வெல்கம காணப்படுகின்றார். சிக்கலான நிலமையில் இருந்து மீள நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி தேர்தலிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் ஜனாதிபதி சட்டத்தை மீறியுள்ளார் என்பதுடன் அதிகாரத்தையும் தவறான முறையில் பயன்படுத்தியவராக மாறியுள்ளார் என்கின்ற குற்றச்சாட்டை பலரும் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட்டுள்ளமை உயர் நீதிமன்ற தீர்ப்பின் ஊடாக வெளிப்பட்டுள்ளமையால் அவரின் குடியுரிமை பறிபோவதற்கு வாய்ப்புள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. நாட்டை ஆட்சி செய்யும் ஜனாதிபதி அரசியலமைப்பு தொடர்பாக நன்கு அறிந்திருந்தும் அதற்கு முரணான வகையில் செயற்படுவாராயின் அவருக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் அரசியலமைப்பின் 38ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி சுட்டிக்காட்டுகின்றது.

நடைபெற்ற குழப்பகரமான விடயங்களுக்கு என்னதான் நியாயப்பாடுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னரும் தற்போதும் கூறி வந்தாலும் உயர் நீதிமன்றின் தீர்ப்பின் பின்னர் மக்கள் மத்தியில் அவர் ஒரு குற்றவாளியாகவே பார்க்கப்படுகின்றார். ஜனாதிபதி தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிட நேர்ந்தாலும் அவருக்கான வெற்றிவாய்ப்பை மக்கள் வழங்குவார்களா என்பது சந்தேகமே.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரி தற்போது மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருப்பதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது அவர் தனது குடும்பத்தினருடன் தனிப்பட்ட பயணமாக தாய்லாந்திற்கு சென்றுள்ளார். அவர் அங்கு ஒரு வார காலம் தனது குடும்பத்தினருடன் தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கும் தீர்மானத்தை அவர் தாய்லாந்தில் தனது குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து வெளிப்படுத்தக்கூடும் என்றும் ஊகங்களாக சில தகவல்கள் வெளிவந்துள்ளன.


29ஆவது ஆண்டு
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| நுட்பக: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | பிரசாந்தி அருள்தாசன் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com




விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்

**கிழக்கு அரங்கு பாற்கடலைக் கடைதல்**

பாகவதப் புராணக் கதையை விளக்கும் முகப்புப் பட்டை அங்கோர் வாட்டில் உள்ள சித்திரங்களில் மிகவும் புகழ் வாய்ந்தது. அமுதத்தை எடுக்கும் பொருட்டு தேவர்களும், அசுரர்களும் பாற் கடலைக் கடைகிறார்கள். பாற்கடலை கடைவதின் நோக்கம், இழந்து போன சரஸ்வதியின் மூலத்தையும் அதிர்ஷ்ட கடவுளான லட்சுமியையும், இந்திரனின் வெள்ளை யானையையும், அழகு மங்கை யர்களையும் திரும்பப் பெறுவதே. இவற்றை மீட்டெடுப்பது செழுமையின் அடையாளமாகும். இது விஷ்ணுவின் இரண்டாவது அவதாரமான கூர்ம அவதாரத்தின் போது நிகழ்ந்தது.

இக்காட்சி மூன்று அடுக்குகளாகப் பிரிக் கப்பட்டுள்ளன. கீழ் அடுக்கில் பல கடல் வாழ் மிருகங்கள் செதுக்கப்பட்டு பாம் பினால் கரை அமைக்கப்பட்டிருக்கிறது. நடு அடுக்கின் ஒரு பகுதியில் 92 அசுரர் கள் அடுத்த பக்கத்தில் 82 தேவர்களின் வரிசை. இவர்கள் இருவரும் இணைந்து பாம்பினால் பாற்கடலைக் கடைகிறார்கள். அனுமன் உதவி செய்கிறார். கூர்ம அவ தாரம் எடுத்த விஷ்ணு மந்தார மலைக்கு அடித்தளமாக தனது முதுகைத் தருகிறார். கடலின் ஆழத்தில் அவர் அமர்ந்திருக் கிறார். வாசுகிப் பாம்பு நீண்ட கயிறாக செயல்படுகிறது. அசுரர்கள் பாம்பின் தலையையும் தேவர்கள் பாம்பின் வாலையும் பிடித்திருக்கிறார்கள்.



தேவர்களையும் அசுரர்களையும் மூவர் இயக்குகிறார்கள். விஷ்ணுவுக்கு மேலே இந்திரன், இடதுபக்க கடைசியில் அனுமன், கடையும்போது பல பெண் பூதகணங்கள் தோன்றுகின்றன.

விஷ்ணு மீண்டும் மனித அவதாரத்தோடு தோன்றுகிறார். பாற்கடலைக் கடைவதற்கு 1000 ஆண்டுகள் ஆனதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்திரனின் வாகனமாகிய மூன்று தலை யானை, அப்சரஸ்கள், லட்சுமி போன்ற உருவங்களும் காட்சி யளிக்கின்றன. கடையும்போது பாம்பு விஷத்தைக் கக்குகிறது. விஷம் தேவர் களையும் அசுரர்களையும் அழிக்கும் என்று நினைத்த பிரம்மன் விஷத்தைக் குடிக்குமாறு சிவனை வேண்டுகிறார். சிவன் விஷத்தைக் குடிக்கிறார். அதன்பிறகு அமுதம் வெளி வருகிறது. அமுதத்தை முழுவதுமாகப் பற்றிக்கொள்ள அசுரர்கள் ஓடுகிறார்கள். அப்போது விஷ்ணு மீண்டும் மாயா என்ற அவதாரம் எடுத்து அசுரர்கள் பறிக்க முயன்ற அமுதத்தை மீட்கிறார்.

கிழக்கு அரங்கின் மத்தியில், 18ஆம் நூற் றாண்டின் ஆரம்பத்தில் புத்தமடமாக இருந்த அங்கோர் வாட்டைப் பற்றிய சுவா ரசியமான கல்வெட்டு இருக்கிறது. ஆளு நர் ஒருவர் சிறிய கல்லறையைக் கட்டி அதில் இறந்துபோன தனது மனைவி, குழந்தைகளின் எலும்புகளைப் புதைத்து வைத்ததாக அது குறிக்கிறது. இந்தக் கல்லறை மோசமான நிலையில் காட்சியளிக்கிறது.

கிழக்கு அரங்கிலும், வடக்கு அரங்கின் தெற்குப் பகுதியும் அநேகமாக பிற்காலத்தில் உருவாகி இருக்கலாம். ஒருவேளை 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில் உருவாகியிருக்கலாம். மைய முகப்புப் பட்டையை நோக்கி அசுரர்களின் படை செல்கிறது. நடுவில் நான்கு கரம் கொண்ட விஷ்ணு கருடனின் தோள் மீது அமர்ந்திருக்கிறார். அழிவு தொடர்கிறது. விஷ்ணு எதிரிகளை வெட்டிச் சாய்க்கிறார். அசுரர்களின் தலைவனை வீரர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். மற்றும் வீரர் களின் ஒரு கூட்டம் படைத் தலைவனோடு தொடர்கிறது.

**வடக்கு அரங்கு**

அசுர மன்னனான பானானை வென்ற விஷ்ணு, இரண்டு வீரர்கள் சூழ கருடனின் தோள் மீது விஷ்ணு கிருஷ்ண அவ தாரத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்குப் பின்னால் பல கைகள் கொண்ட இந்திரன் காண்டாமிருக வாகனத்தில் அமர்ந்திருக் கிறான். நகரத்தைச் சுற்றியுள்ள மதில் சுவர் தீப்பிடித்து கிருஷ்ணன் முன்னேறி வருவதைத் தடுக்கிறது. கங்கையின் தண் ணீரால் தீயைக் கருடன் அணைக்கிறது. காண்டாமிருகத்தின் மீது அமர்ந்திருக்கும் அசுரன் பானா எதிர் திசையிலிருந்து வருகிறான். வலதுபுற கோடியில் கிருஷ்ணன் (ஆயிரம் தலைகளோடு) கைலாய மலைமீது தனது மனைவி

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

**JOBS! JOBS! JOBS!**

**TEMP EMPLOYMENT AGENCY**



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator




Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TBC Toronto Business College

You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை



Second Career candidates & International Students Welcome

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH , 2019

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH , 2019

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Immediate Job Opportunities
Accredited by the National Association of Career Colleges
STARTS JAN. 7TH , 2019

PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH , 2019

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma

PART TIME COURSES
WINDOWS 2010, WORD 2016, EXCEL 2016
POWER POINT 2016 , ACCESS 2016
QUICK BOOKS 2017
SAGE 50 ACCOUNTING 2017
SAGE 300 2017 , AUTO CAD
FIRST AID & CPR
FOOD HANDLER CERTIFICATION

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Placement Assistance
- Ample Free Parking

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# மாலியில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இராணுவவீரர்களைக் கொண்ட இந்தக்குழு (Extraodinarily professional group) பக்கபலமாக உள்ளதால் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையினரும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்களும் தமது பணியை எந்தவித தயக்கமும் இன்றி திறம்படச் செய்கின்றனர். எந்த ஒரு அசாதாரண சம்பவம் நடந்தாலும்



கனேடிய இராணுவம் அவர்களைப் பாது காப்பாக மீட்பதற்கு எந்நேரமும் தயா ராகவே நிற்கின்றனர் என்றார். மாலியி லுள்ள கனேடிய இராணுவக் குழுவுக்குத் தலைமை தாங்கும் கேணல் Chris Mckenna ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் மற்றைய நாடுகளில் இருந்து வந்துள்ள அமைதிகாக்கும் படைவீரர்கள், சமாதானப் பயிற்றுவிப்பாளர்கள், எந்த ஒரு சம்பவம் நடைபெற்றாலும் கனேடிய இராணுவத்தின் மருத்துவ உதவி மிகவிரைவில் தமக்கு கிடைக்கும் என நம்புகின்றனர். அதனால் தங்களால் இயன்ற முழுஅளவிலான பணியை அவர்கள் நம்பிக்கையுடன் இன் னும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான உத்தரவாதத்தை இது அளிக்கிறது என்றார்.

மாலியின் உள்நாட்டுக் கலவரம் மாலியின் ஜனநாயகமுறையில் தெரிவு செய்யப்பட்ட அரசை 2012இல் இராணுவப்புரட்சிமூலம் இராணுவம் கவிழ்த்த போதில் இருந்தே ஆரம்பமானது. பிரான்ஸ் இடம் இருந்து 1960ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த இந்த நாட்டின் அரச கருமமொழியாக பிரஞ்மொழி இருக்கிறது. ஆபிரிக்காவில் உள்ள நாடுகளில் எட்டாவது பெரிய நாடான மாலியின் சனத்தொகை 18.5 மில்லியன். இங்கு 95%ஆனவர்கள் முஸ்லீம்களாக இருந்தாலும் மாலியில் 10இற்கும் மேற்பட்ட இனக்குழுமங்களும், அரசால் அங்கீகரிக்கப் பட்ட 13 மொழிகளும் உள்ளன.

2012இல் நடைபெற்ற இராணுவப்புரட்சியின் பின்னர் மாலியின் வடபகுதியில் உள்ள Tuareg இனக்குழுமத்தினர் கலவரங்களைத் தொடங்கி மாலிநாட்டின் வடபகுதியை தமது



கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இவர்கள் மாலி நாட்டுச் சனத்தொகையில் 1%. இவர்களது கட்டுப்பாட்டுக்குள் இந்தப் பகுதி முற்றாக வர முன்னர் அல்கைடா மற்றும் வெளியுலகத் தீவிரவாதக்குழுக்கள் இவர்களுக்குள் ஊடுருவி நாட்டில் கல வரத்தை தீவிரமாக்கின. விரைவில் நாட்டின் வடபகுதியில் உள்ள மூன்று பிரதேசங்கள் வெளியுலக இஸ்லாமிய தீவிரவாதிகளின் கைவசமானது. பிரான்ஸ் நாட்டின் இராணுவ உதவியுடன் சர்வதேச இராணுவம் 2013 ஜனவரியில் மாலியின் வடபிரதேசத்தில் உள்ள மூன்று பிரதேசங்களையும் தீவிர வாதிகளிடம் இருந்து மீட்டது. அதன்பின்னர் 2013 ஒகஸ்ட் இல் நடைபெற்ற தேர்தலில் ஒரு ஜனநாயக அரசு தெரிவு செய்யப் பட்டாலும் வடபகுதியில் உள்ள தீவிரவாதக் குழுக்களால் தொடர்ந்தும் கலவரங்கள் ஏற்பட்டன.

2015 யூனில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் மாலி நாட்டு ஜனநாயக அரசுக் கும் வடக்கில் உள்ள தீவிரவாதிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. மூன்று வருடங்கள் சென்றும் இவ் உடன் படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல விடயங்கள் இருபகுதி யினராலும் கடைப் பிடிக்கப்படவில்லை. வடபகுதியில் உள்ள தீவிரவாதக்குழு உல கில் மற்ற இடங்களில் உள்ள இஸ்லாமிய தீவிரவாதக்குழுக்களுடன் சேர்ந்து அவ்வப் போது மாலியின் மத்திய பகுதியிலும் மற்றும் நகர்ப் புறங்களிலும் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

கடந்த மாதம் பிரான்ஸ் இராணுவத்தால் தீவிரவாதிகளின் ஜிஹாத் தலைவரான Amado Koufa கொல்லப்பட்டார். மாலி நாட்டு ஜனநாயக அரசுக்கு நாட்டில் சமா தானத்தைக் கொண்டுவர இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என ஐக்கிய நாடுகள் சபை கருதுகிறது.



மாலி அரசின் படைகள் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் தன்னிச்சையாக பொதுமக்களைக் கைது செய்வதும், சித்திரவதை செய்வதும், மரணதண்டனை விதிப்பதுமாக பல தவறுகளைச் செய்கிறது என மனித உரிமை இயக்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. 2018இல் வெளியிடப்பட்ட Human Rights Watchஇன் அறிக்கையில் இவ்விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கனேடியப் பிரதமர் நான்கு மணித்தியாலங் கள் மாலியில் இருந்தபோது மாலி நாட்டு அரசுத் தலைவர் Soumeylou Boub eye Maigaயையும் சந்தித்து உரையாடினார். அவர் தனது உரையாடலின்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மனிதாபிமான உதவிகளில் முதலீடு செய்யவேண்டிய அவசியத்தையும் மாலி அரசு சமாதான முன்னெடுப்புக்களை செய்வதற்கான வழி முறைகள் பற்றியும் உரையாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனங்கள் சிதறப்பட்ட நிலையில் வாகனம் செலுத்தினால் இறுக்கமாகும் தண்டனைகள்!

## (New Distracted Driving Law)




2019 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து கவனங்கள் சிதறப்பட்ட நிலையில் வாகனம் செலுத்தி பிடிபடுபவர்களுக்கு மாகாண அரசு வழங்கும் தண்டனை அதிகரித்துள்ளது. 2013 ஓகஸ்ட் 13இல் கவனங்கள் சிதறப்பட்ட ஒரு வாகன சாரதியினால் பேருந்து தரிப்பு நிலையத்தில் நின்ற தமிழ் பெண் ஒருவர் விபத்தில் பலியானதை தொடர்ந்து இச்சட்ட திருத்த மூலம் அவரது பெயரில் முதலில் அமல்படுத்தப்பட்டது. விபத்தினை உருவாக்கிய சாரதிக்கு மூன்று வருட சிறை விதிக்கப்பட்டது.

மனோரஞ்சனா கனகசபாபதி திருத்த சட்டப் பிரிவு 78 (Manoranjana Kanagasabapathy act sec 78 amended) இல் இவை பற்றிய விரிவான தகவலைப் பெறலாம். இது பற்றிய ஒரு கட்டுரை 2013 நவம்பர் 15இல் 'விளம்பரம்' பத்திரிகையில் வெளியானது. www.vlambaram.com எனும் இணைய தளத்தினுள் சென்று முன்னைய பத்திரிகைகளைப் படிக்கலாம். புதிய வருடத்திலிருந்து இதற்குரிய தண்டனை பின்வருமாறு மேலும் இறுக்கமாகிறது என மாகாண அரசு வெளியிட்டுள்ளது.

முதல்முறை கவனங்கள் சிதறிய நிலையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால்:

- $1000 வரை பணத்தண்டனை
- மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்
- மூன்று நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் ரத்துச் செய்யப்படும்.

தொடர்ந்து ஐந்து வருடத்தினுள் இரண்டாம் முறையும் பிடிபட்டால்:

- $2000 வரை பணத்தண்டனை
- ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்
- ஏழு நாட்கள் சாரதி அனுமதி பத்திரம் ரத்துச் செய்யப்படும்.

தொடர்ந்து ஐந்து வருடத்தினுள் மூன்றாம் முறையும் பிடிபட்டால்:

- $3000 வரை பணத்தண்டனை
- ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்
- முப்பது நாட்கள் சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகும்.

ரத்து செய்யப்பட்ட சாரதி அனுமதி பத்திரத்தினை மீண்டும் செயல்பட வைப்பதற்கு தற்போது உள்ள கட்டணம் $198 ஆகும்.

G(1) & G(2) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் M(1) & M(2) அனுமதிபத்திரம் வைத்திருப்பவர்கள் (Motor cycle licence holder) கவனம் சிதறிய நிலையில் வாகனம் செலுத்தி:

- முதல் முறை பிடிபடும்போது முப்பது நாட்கள் சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகும்.
- ஐந்து வருடத்தினுள் இரண்டாம் முறையும் பிடிபடும்போது 90 நாட்கள் சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகும்.
- மூன்றாம் முறையும் பிடிபடும்போது G அனுமதிபத்திரம் என்ற வீதிப் பரீட்சைக்கு தோற்றவும் முடியாது. நிரந்தரமான அனுமதிப்பத்திரம் பெறவும் முடியாது.

புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் என்ற தண்டனைகள் இவர்களுக்கு இல்லை.

பின்வரும் நிகழ்வுகளை கவனங்கள் சிதறவிட்டு வாகனம் செலுத்தும் குற்றங்களாக ஒன்ராரியோ மாகாண போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

- எந்தவொரு மின்கணினி சாதனங்களையும் வாகனம் செலுத்தும்போது கையில் வைத்திருத்தல். (Simply Holding an elec tronic device in your hand)
- வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசியினை கையில் வைத்துப் பேசுதல். கைத்தொலைபேசியினூடாக செய்திகளை பரிமாறுதல்.(Using a cellular phone to talk or text)
- வாகனம் செலுத்தும் நேரம் படங்களை மற்றும் வீடியோக்களை பார்வையிடல். (Check maps & look videos)
- வாகனம் செலுத்திக் கொண்டு ரேடியோவினை இயக்குதல். (Switch playlists & adjust radios , CD)
- வாகனம் செலுத்திக் கொண்டு சாப்பிடுதல், நீராகாரம் அருந்துதல். (Eating & Drinking)
- வாகனம் செலுத்திக் கொண்டு புத்தகங்கள் & பத்திரங்கள் படித்தல். (Reading books & documents)
- வாகனம் செலுத்திக் கொண்டு ஓர் இடத்தினை GPSஇல் தட்டச்சு செய்தல் (Type destination in GPS)
- சிவப்பு நிற சைகையில் நிற்கும்போது மற்றும் வீதியில் இயங்கு நிலையில் நிற்கும் போதும் இதே மீறல்களை மேற்கொண்டால் குற்றமாக கருதப்படும்.



வாகனத்தினை பின்பக்கம் தொடர்வோருக்கு சிரமங்கள் எவையுமில்லாது, வீதியோரமாகப் பாதுகாப்பாக நிறுத்திவிட்டு மேலே குறிப்பிட்ட செயல்பாடுகளை தொடர்ந்தால் அவை குற்றமாகக் கருதப்படமாட்டாது.

## கனடிய தகவல் தொடர் 298


**TUTORING**

Math / Science / English

Over 8 years of Experience (M.Sc., Mathematics)

- Discounted rates for Grades 1 to 6: $55/month.

- Grade 9:MPM-1D
- Grade 10:MPM-2D
- Grade 11:MCR-3u(Functions)
- Grade 12:MHF-4U(Advanced Functions)
- Grade 12:MCV-4U(Calculus and Vectors)

University Courses for: York,Rayerson,UOFT,UOIT Waterloo and McMaster

University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra

* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session

University Calculus and Linear Algebra

Call today to find out more!

Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
Δ University: Calculus-1, Calculus-2, Calculus -3

PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329


## நாமும்...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

பிடிக்கும் ஆர்வம் காணப்படும்.

4. தொடர்பாடல் (Communication) - தகுந்த வினாக்களைக் கேட்பதன் மூலம் தரமான தொடர்பாடலை உருவாக்கலாம். இதன்மூலம் ஆதனமுகவருக்கும் வாங்குபவர், விற்பவர்கள் பற்றிய நல்லதெளிவு ஏற்படும். அத்துடன் ஆதனமுகவர் தகுந்த அறிவுறுத்தலை வழங்குவதற்கு வழிசமைக்கும். சிறந்த கலந்துரையாடல் முக்கியம்.




5. அனுபவம், ஆற்றல் (Expertise) - ஒரு முதலீடுபற்றிய நிறைய அனுபவமிக்கவரே தகுந்த ஆலோசனைகளை வழங்கமுடியும். ஒரு முதலீட்டில், (சொந்த வீடு, மனை அல்லது வியாபார நோக்கம்) அனுபவமிக்கவர் தேவைக்கேற்ப அறிவுறுத்தலாம். முதலீட்டில் ஏற்படும் நன்மை, தீமை, ஆதாயம், நட்டம், நீண்டகால முதலீடு வளர்ச்சி (Appreciation), எதிர்கால திட்டங்கள் பற்றி சிறப்பாக ஆலோசனைகளை வழங்க முடியும். மேலும் வாங்கல், விற்றலில் நிகழும்போது தகுந்த சட்டத்தரணி, அடமானக்கடன் பெற்றுத்தருபவர், வீட்டு ஆய்வாளர், காப்புறுதி முகவர் போன்றோரையும் தொடர்புபடுத்துவதில் நேர்மையாகவும், திறமையாகவும் செயற்படுவார். இவ்வாறு தகுந்த முகவரைத் தெரிவுசெய்து, அவருடன் தொடர்ச்சியான தொடர்பை வைத்திருப்பதன் மூலம் இருவரும் நன்மை அடையலாம் என்பது எனது நீண்டகால அனுபவம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் நீக்கும் இயற்கை – 40



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பர வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு நிறைந்த ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்தினைத் தெரிவித்துக்கொண்டு இந்த இதழுக்கான தொடர்கட்டுரையை ஆரம்பிக்கின்றேன்.

காலையில் அருகம்புல் சாற்றைக் குடிப்பதால் நாங்கள் உற்சாகமாக இருக்கலாம் என்று சித்த மருத்துவத் தகவல் தெரிவிக்கின்றது. இது புற்று நோய்க்கும் நல்ல மருந்து. நரம்புத் தளர்ச்சியைக் குறைக்கும். மூட்டு வலிகள் நீங்கும். சளி, ஆஸ்துமா போன்ற பிரச்சினைகளுக்கு நல்லது. வயிற்றுப் புண்ணுக்கு நல்லது. நீரிழிவு நோயாளிகள் தமது உடலில் உள்ள சர்க்கரையின் அளவைக் குறைப்பதற்கு அருகம்புல் சாற்றைக் குடிக்கலாம். இரத்த அழுத்தம் குறைய உதவும்.

புற்றுநோய்க்கு வெண்பூசனிக்காய் மருந்தாகும். தைரொய்ட்டுக்கு எலுமிச்சை மருந்தாகும். இருதயக் கோளாறுக்கு வாழைக்காய் மருந்தாகும். ஆதரற்றீஸ் நோய்க்கு தேங்காய் மருந்தாகும். இரத்த அழுத்தத்திற்கு வெண்டக்காய் மருந்தாகும். ஆஸ்த்துமா நோய்க்கு முருங்கைக்காய் மருந்தாகும். நீரிழிவு நோய்க்கு பீர்க்கங்காய் மருந்தாகும். சிறுநீரகக் கோளாறிற்கு கத்தரிக்காய் மருந்தாகும். வாய் துர்நாற்றம் நீங்க ஏலக்காய் உதவும். பித்தம் நீங்க நெல்லிக்காய் உதவும். மணத்தக்காளி வாந்திக்கு மருந்தாகும். தேனுடன் இஞ்சி சேர்த்து உண்ண இரத்தம் தூய்மையாகும். வெந்தயக் கீரை இருமலைக் குணமாக்கும்.

திராட்சைப் பழவிதை ரத்தக்குழாய்களின் வீக்கம், அடைப்பு ஆகியவற்றைக் குறைக்கின்றது. கொலஸ்ரோலைக் குறைக்கிறது. சிறுநீரகக் கோளாறுகளுக்கு மருந்தாகின்றது. நினைவாற்றலை வலுப்படுத்தும். மார்பகப் புற்றுநோய், புரோஸ்டேட் புற்றுநோய் போன்றவை வராமல் தடுக்கின்றது.

கருவுற்ற பெண்களுக்கு குங்குமப்பூவைப் பாலில் கலந்து மூன்றாம் மாதம் தொடக்கம் கொடுத்துவர கருவுற்ற தாய்க்கும், சிசுவுக்கும் எதிர்ப்புச் சக்தி உண்டாகும். ஒரு லீற்றர் தண்ணீரை எடுத்து 100 கிராம் ஓமம் எடுத்து கரைத்து அரைவாசியாகும் மட்டும் கொதிக்க வைத்து அதனுடன் பனை வெல்லம் சேர்த்து அருந்தினால் வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், சீரணக் கோளாறு ஆகியவற்றிற்கு நிவாரணம் கிடைக்கும்.

ஓமம், சீரகம் சமவளவில் கலந்த கலவையும் வயிற்றுவலிக்கு மருந்தாகும். கற்பூரவல்லி இலைச்சாறு, சர்க்கரை, நல்லெண்ணெய் ஆகியவற்றைக் கலந்து நெற்றியில் பற்று போட்டால் தலைவலி குறையும். மிளகாய், இஞ்சிக் கலவை புற்றுநோயை விரட்டும்.



அதிகமாகப் பச்சரிசி சாப்பிடுவதால் ரத்த சோகை ஏற்படும். தேங்காயை அளவோடு சாப்பிட்டால் நல்லது. அதிகமாகச் சாப்பிட்டால் சளி, பித்தம், வறட்டு இருமல், நெஞ்சு எரிச்சல் ஆகிய பிரச்சினைகள் உண்டாகும். மாங்காயை அதிகம் சாப்பிட்டால் இடுப்பு வலி, பித்தம், சளி ஆகியவை உண்டாகும். கோதுமையை அதிகம் சாப்பிட்டால் பித்தம் கூடும். வயிற்றில் மந்தம் ஏற்படும். காப்பியை அதிகம் குடித்தால் நரம்புத்தளர்ச்சி ஏற்படும். கண்ணெரிச்சல் ஏற்படும். தேநீர் குடிப்பதால் சுறுசுறுப்பு ஏற்படும். அதிகமாகக் குடித்தால் ஆண்களுக்கு விந்துவின் வீரியம் குறையும். பசியின்மை ஏற்படும். உப்பு அதிகமாகச் சாப்பிட்டால் மூட்டுப் பிரச்சினை ஏற்படும். வெங்காயம் அதிகமாகச் செயற்பட்டால் தலைவலி உண்டாகும்.

இப்பொழுது எலுமிச்சம்பழத்தில் (Lemon) உள்ள மருத்துவக் குணங்களைக் கவனிப்போம். நாங்கள் குடிக்கும் தேநீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்தால் தலைவலி குணமாகும். எலுமிச்சம் பழத்தை தேனுடன் கலந்து குடித்து வந்தால் கல்லீரல் வலுவடையும். உடலுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். இரவில் நித்திரைக்குச் செல்வதற்கு அரைமணி நேரம் முன்பாக எலுமிச்சம்பழச்சாறு கலந்த நீரைக் குடிப்பதனால் உடலில் உள்ள நச்சு வெளியேற்றப்படுவதோடு அதிகமானளவு விட்டமின் 'சி' யும் தூண்டப்படும் என்று கூறப்படுகின்றது. இதனால் நல்ல தூக்கமும் இருக்கும். உடலில் உள்ள செல்களை துரிதமாகச் செயற்பட வைக்கும். ஹோர்மோன் வளர்ச்சி நன்றாக இருக்கும். இன்சோமேனியா எனப்படும் தூக்கமின்மை பிர்ச்சினைக்கும் இது நிவாரணம் கொடுக்கும். எலுமிச்சம்பழம் கலந்த நீரைக் குடிப்பதனால் உடலில் உள்ள கலோரி குறைக்கப்படும். நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமாகும். உடலில் உள்ள பக்ரீரியாக்கள் அழிக்கப்படும். உடலில் செரிமானத்திற்கு உதவும். உடலில் உள்ள சோம்பல்தன்மை நீங்கும். காலநிலைக்கு ஏற்றவாறு குளிர்நீரிலும், மென்சூடான நீரிலும் எலுமிச்சம் பழச்சாற்றை கலந்து குடிக்கலாம். மாதவிலக்கின்போது உடலில் உள்ள வலியைக் குறைக்கும். எலுமிச்சம்பழச் சாற்றின் நீர் 2 முதல் 3 வரை இருக்கும். வாதம், முடக்குவாதம் ஆகிய நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படும். உடலில் உள்ள பித்தத் தன்மையைக் குறைக்கும். நுரையீரல் தொற்றுக்களைக் குறைக்கின்றது. சிறுநீரகத்தில் கற்கள் உருவாவதைத் தடுக்கின்றது. உடற்பருமன் கொண்டவர்கள், கொலஸ்ரோல் பிரச்சினை உள்ளவர்கள், நீரிழிவு நோயாளர்கள் எலுமிச்சம்பழம் கலந்த நீரைக் குடித்து வந்தால் பலன் கிடைக்கும். தொண்டை வலியை நீக்கும், வாந்தி வராமல் தடுக்கும் தன்மை கொண்டது. நெஞ்சு எரிச்சலுக்கு நிவாரணம் கொடுக்கும். கண் வலிக்கும் இதனைக் குடிப்பது நல்லது. உடலின் அழகு கூடும். வாய் நாற்றத்தைக் குறைக்கும். உடலில் உள்ள வாயுத்தன்மையைக் குறைக்கும். உடலில் பசியை ஏற்படுத்தும். வீக்கத்தைக் குறைக்கும்.

எலுமிச்சம்பழச்சாற்றை தேனுடன் கலந்து முகத்தில் பூசி ஐந்து நிமிடம் கழித்து கழுவி வர முகத்தில் உள்ள கருமை நிறம் நீங்கும். தலையில் உள்ள பொடுகுகளைப் போக்குவதற்கு தலையில் பொடுகு உள்ள இடத்தில் எலுமிச்சம்பழச் சாற்றைப் பூசி விட்டு எண்ணெய் பூசி முழுக வேண்டும். இதனால் பொடுகு குறைந்து விடும். அரைத்த சீகைக்காய் வைத்து முழுகும் பொழுது அரைத்த சீகைக்காய் வைத்து கழுவிவிட்டு எலுமிச்சம்பழச்சாற்றையும் வைத்து முழுகினால் கூந்தல் மென்மையாக வரும். எலுமிச்சம்பழத்துண்டை உப்பில் தோய்த்து முகத்துக்கு தேய்த்து கழுவினால் முகத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி பளபளப்பாகும். சருமத்துவாரங்களில் உள்ள அழுக்குகளும் நீங்கும். உடலில் முதுமைத்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)




**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

## pH அல்லது potential of Hydrogen என்றால் என்ன?

pH அல்லது potential of Hydrogen என்பது ஒரு திரவத்தின் அமிலம்(acid ) அல்லது காரம் (alkaline) எவ்வளவு என்பதைக் காட்டும் அளவாகும். pH அளவு கூடக் கூட அதிக காரம் (alkaline) இருப்பதாக அர்த்தமாகும். pH அளவு குறைவாக இருந்ததென்றால் அதிக அமிலம்(acid ) உள்ளது என்றும் அர்த்தமாகும். pH அளவு 0 முதல் 14 வரை உள்ளது. 7 என்பது நடுநிலையில் இருப்பது. ஏழுக்கு மேலே உள்ள எந்த அளவும் காரம்(alkaline) இருப்பதாகக் கருதப்படும். ஏழுக்குக் கீழே உள்ள எந்த அளவும் அமிலம் இருப்பதாகக் கருதப்படும் அளவு.

### மனித ரத்தத்தின் pH எவ்வளவு இருக்க வேண்டும்?

மனித ரத்தத்தின் சிறிது (alkaline) இருத்தல் வேண்டும். அதாவது pH 7.35 முதல் 7.45 வரை இருக்கலாம். இந்த அளவுக்கு மேலோ அல்லது கீழோ இந்த அளவு இருந்தால் வியாதிக்கு அறிகுறியாகும்! ரத்தத்தின் pH 6.8க்குக் கீழோ அல்லது 7.8க்கு மேலோ போனால் உயிரணுக்கள் (cells) செயல்படுவதை நிறுத்துகின்றன. ஆகவே உடல் எப்போதும் pH அளவு சமச்சீராக வைத்திருக்கவே முயற்சிக்கிறது.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சன் நினைவேந்தல்!

**- கண்ணன் -**

எளிய மனிதர்களின் வாழ்க்கையில் நடைபெறும் யதார்த்தமான சம்பவங்களை தனக்கே உரிய பாணியில் எழுதி மானுடம் பேசும் உயர்ந்த படைப்புகளை தமிழ் மொழிக்கு அளித்தவர், பிரபஞ்சன். தீவிர இலக்கியப் பத்திரிகைகள் தவிர, 'ஆனந்த விகடன்', 'குமுதம்' போன்ற வெகுஜன பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதி தமிழகத்தில் பிரபல எழுத்தாளராகத் திகழ்ந்தார். கடந்த 57 ஆண்டுகாலமாக இலக்கியப் பணிகள் ஆற்றிவந்த பிரபஞ்சன், கடந்த டிசம்பர் 21 அன்று காலமானார்.

'வானம் வசப்படும்', 'மகாநதி', 'மானுடம் வெல்லும்' ஆகிய நாவல்களும், 'ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள்', 'நேற்று மனிதர்கள்' ஆகிய பிரபஞ்சனின் சிறுகதை தொகுதிகளும் புகழ் பெற்றவை. நாவல்கள், சிறுகதைகள் தவிர ஏராளமான கட்டுரைகளும் எழுதியுள்ளார். சமீபத்தில் நுரையீரல் புற்றுநோய்த் தாக்குதலுக்கு ஆளான பிரபஞ்சன் சிகிச்சைப் பலனின்றி காலமானார்.

புதுவையில் பிறந்த பிரபஞ்சன் இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். கடலூர், சென்னை திருவல்லிக்கேணி போன்ற இடங்களை தனது வாசஸ்தலமாக கொண்டு வாழ்ந்து வந்தாலும் எப்போதும் புதுவையோடு தொடர்பில் இருந்தார். தனது மண்ணின் மைந்தனுக்கு எழுத்தாளர்கள், படைப்பாளிகள், வாசகர்கள் எனப் புடைசூழ 21 குண்டுகள் முழங்கி மரியாதையுடன் வழியனுப்பி வைத்துள்ளது புதுவை அரசு.

தமிழகத்தின் மூத்த பத்திரிக்கையாளர்கள், மூத்த எழுத்தாளர்கள், திரைத்துறை படைப்பாளிகள் எனப் பலர் பிரபஞ்சனின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். புதுச்சேரி - பாரதி வீதியில் அமைந்துள்ள பிரபஞ்சனின் பூர்வீக வீட்டின் முன் டிசம்பர் 23ஆம் திகதி நடைபெற்ற இறுதியஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள் பேச்சின் சுருக்கம் இங்கே.

பி.என்.எஸ். பாண்டியன், பத்திரிக்கையாளர் (பிரபஞ்சனின் இறுதி நாட்களில் அவரோடே இருந்தவர்): "பள்ளி செல்லும் நாட்களில் இருந்தே பிரபஞ்சன் சாரை தெரியும். நான் ஒரு பள்ளி மாணவன் எனப் பார்க்காமல் அப்போதே எனக்குத் தெரிந்த விடயங்களைக் கேட்டு அறிந்துகொள்வார். இருவருமே புதுச்சேரிக்காரர்கள் என்பதால் ஊர்ப் பாசம் எங்களுக்குள் ஒட்டிக்கொள்ள இருவருக்குமான பிணைப்பு அதிகமானது. அவர் மூலமாகத்தான் நவீன இலக்கியத்தின் மீது எனக்கு ஆர்வம் வந்து, அது சார்ந்த படிப்புகளைப் படித்து, இன்று நான் பத்திரிகையாளனாக மாறவும் காரணமாக அமைந்தது. அவரது எழுத்துகளை அவரோடு இருந்தே வாசித்திருக்கிறேன்.



பணி சூழலினால் சென்னையிலேயே தங்கி விட்ட பிரபஞ்சன் சார், புதுச்சேரி பக்கம் வரும்போதெல்லாம் என்னைத்தான் உதவிக்கு அழைப்பார். காலையில் வாக்கிங் செல்வதில் துவங்கி இரவு வரை அவருடனே பொழுதுகள் கழியும். அப்போதெல்லாம், "உங்களை மிஸ் செய்கிறேன் சார். புதுச்சேரியிலேயே தங்கி விடுங்கள்" எனச் சொல்வேன். லேசான புன்னகையோடு 'பார்க்கலாம்' என சொல்லிவிடுவார்.

பிரபஞ்சன் சாரியின் மனைவியும் சில ஆண்டுகளுக்கு முன் தவறிவிட்டதோடு, அவரது மகன்களும் பிரான்ஸ் நாட்டில் இருந்த காரணத்தினால் தனி ஒருவராகத்தான் வாழ்ந்து வந்தார். அந்த சூழலில் தான் கடந்த ஆண்டு 'பாண்டியன் இனி நமக்கு பாண்டிச்சேரிதான்' எனச் சொல்லி சென்னையில் இருந்து வந்துவிட்டார். அந்த நாட்கள் இனிமையாகக் கழிந்து கொண்டிருக்கப் புதுச்சேரியில் பிரபஞ்சன் சருக்கு விழா எடுத்துக் கொண்டாடினோம். அதற்குப் பிறகு ஞாபக மறதி, பசியின்மை மாதிரியான சிக்கல்கள் பிரபஞ்சன் சாருக்கு வந்தது. ஒரு மெடிக்கல் ரெஸ்ட் எடுத்துப் பார்த்திடலாம் என நான் சொல்ல பிரபஞ்சன் சாருக்கு மருத்துவ பரிசோதனைகள் நடந்தன. அதில் அவருக்கு புற்றுநோய் இருப்பதும் தெரிய வந்தது.

அப்போது கூட, "கேன்ஸர்லாம் பெரிய விஷயமே இல்லையாம். ஓர் எழுத்தாளர் எட்டு வருஷம் புற்றுநோயோடு போராடி இருக்கார்னு நான் படிச்சிருக்கேன்" என்றார். சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்து தீவிர சிகிச்சை பிரிவில் மருத்துவம் பார்த்த பிறகு அவரது உடல் எழுச்சி பெற்றதால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் வீட்டுக்கு அழைத்து வந்தோம். அந்த வேளையில்தான் கடந்த பதினைந்து நாட்களுக்கு முன்னர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மீண்டும் மருத்துவ மனையில் அனுமதித்து சிகிச்சை கொடுத்தும் அது கைகொடுக்காமல் போனது." (விம்மி அழுகிறார்)

நாராயணசாமி, புதுச்சேரி முதலமைச்சர்: "எதற்காகவும் யாருக்காகவும் தனது கருத்துகளை சமரசம் செய்துகொள்ளாமல் பதிவு செய்யும் அசல் மனிதர், பிரபஞ்சன். புதுச்சேரி மண்ணின் மைந்தனான அவர் புதுச்சேரியின் வரலாற்றை விரிவாக தனது எழுத்தின் மூலம் ஆவணப்படுத்திய படைப்பாளி. வரலாறு சார்ந்த கட்டுரைகள் மற்றும் கதைகள் என அவர் எழுதிய அனைத்துமே முறையான ஆய்வுக்கு பின்னர் உண்மைத் தன்மையோடு எழுதப்பட்டவை. அவருடைய இழப்பு தமிழ் சமூகத்துக்கும் புதுச்சேரி மாநிலத்துக்குக்கும் பேரிழப்பாகும்."

தொல்.திருமாவளவன், தலைவர், விடுதலை சிறுத்தைகள் கட்சி: "பிரபஞ்சன் காலமானார் என்ற தகவல் எனக்கு தெரிய வந்ததும் பேரதிர்ச்சி கொண்டேன். பிரபஞ்சனின் கதை, கவிதை, நாவல்களை நாட்டுடைமையாக்க வேண்டிய கடமை புதுச்சேரி, தமிழக அரசாங்கங்களுக்கு உள்ளது."

எஸ். ராமகிருஷ்ணன், எழுத்தாளர்: "பிரபஞ்சன் அவர்கள் ஒரு நிறைவான வாழ்க்கையைத்தான் வாழ்ந்து மறைந்திருக்கிறார். அவரது ஒவ்வொரு சொல்லிலும் எழுத்திலும் நம்மோடு வாழ்ந்து வருகிறார். அவரது இறப்புக்கூட அவரின் விருப்பப்படிதான் அமைந்தது. எழுத்தாளர்களுக்குக் கிடைக்கின்ற மிக அரிய மரியாதைகளில் ஒன்றான அரசு மரியாதை அவருக்கு கிடைத்திருப்பது உணர்ச்சி பூர்வமான ஒன்று. துப்பாக்கி குண்டுகள் முழங்க அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. அதற்குத் தகுதியான எழுத்தாளர் அவர்."

ரவிக்குமார், எழுத்தாளர்: "சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், பெண்கள் சார்பாகத்தான் பிரபஞ்சனின் எழுத்துகள் பேசும். எப்போதுமே இளம் எழுத்தாளர்களை மனதாரப்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

BEST DEAL FROM ROGERS
ROGERS™
✔ High Speed Unlimited Internet
Free advanced WiFi Modem
$49.99
150 mbps speed
✔ Home phone/Internet Digital Basic TV
$84.99
✔ Tamil Channels
Starting From
$8.00
✔ Home Phone
$9.99
Students Internet Offer is Back
Call for the Best Deal
150 இற்கு மேற்பட்ட தமிழ் அலைவரிசைகளின் பொதி
மாதம் $15 மட்டுமே !
Wallmount குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும்
தமிழில் தொடர்புகளுக்கு:
SANJAY : 416.315.2917



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# வயிற்றுப் பொருமல் குணமாக எளிய சிகிச்சை முறைகள்

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



நம் உடலில் ஜீரண உறுப்புக்களில் கோளாறுகள் ஏற்படுவதாலும் உடலுக்கு ஒத்துக்கொள்ளாத உணவு வகைகளைச் சில நேரங்களில் சாப்பிட நேருவதாலும் பசியின்மையாலும் ஜீரணம் சரிவர ஆகாமல் வயிற்றில் தொல்லை கொடுக்கக்கூடும். இதன் காரணமாக வயிறு கனமாகத் தெரிதல், வயிற்றில் பொருமல், வயிற்றில் வலி ஆகியன உண்டாகக்கூடும். தொடக்க நிலையிலேயே இதைச் சரிப்படுத்தாவிட்டால் பேதி, கடுமையான வயிற்றுவலி ஆகியன ஏற்பட வாய்ப்புண்டு.

அவரவர் தங்கள் ஜீரண சக்தி எவ்வளவு என்பதைத் தீர்மானித்துக்கொண்டு அதற்கேற்ற அளவில் உண்பது என்ற பழக்கத்தைக் கடைப்பிடிப்பது அடிப்படையான விடயமாகும். பசியின் அடையாளமாக நாவில் நீர் ஊறுதல், வயிறு லேசா இருத்தல், பசியெடுக்கும் உணர்வு ஆகியன தெரிந்த பின்னரே சாப்பிடுவது நல்லது. முன்னர் உண்ட உணவு செரிமானமான பின்னரே மீண்டும் சாப்பிடுவது நல்ல பழக்கமாகும்.

ஜீரண சக்தியை அறிந்து கொண்டு இரைப்பை கொள்ளும் அளவையும் அறிந்து அதை நான்கு சமபாகங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அந்த நான்கு பங்கில் இரண்டு பங்கை உணவு போன்ற கனமான பொருட்களுக்கென ஒதுக்கிக்கொண்டு மற்றொரு பகுதியைக் காலியாகவே விட்டு விடுவது மிக நல்ல நடைமுறையாகும்.



உணவு உண்ணும்போது நடுநடுவே சிறிது சிறிதாகத் தண்ணீரைப்பருகுதல் வேண்டும். உணவு வகைகளில் துவரை, உளுந்து, பயறு வகைகள், கடலை, பட்டாணி, கொள்ளு முதலியவை வயிற்றில் வாயுப் பொருமலை ஏற்படுத்துவன என்பதால் ஜீரண சக்தி குறைவாக இருப்பவர்கள் மேற்கண்டவற்றைத் தவிர்த்து விடுவது அவசியம்.

வயிற்றுப் பொருமல் அல்லது வயிற்று உப்புசம் என்னும் இக்குறையுள்ளவர்கள் உப்பு, சீரகம், இஞ்சி ஆகிய மூன்றையும் சிறிதளவு சமமாக எடுத்து அம்மியில் வைத்து அரைத்தெடுத்து அதிலிருந்து நெல்லிக் காயளவு எடுத்துச் சாப்பிட்டால் அது குணமாகும். மேலே வெந்நீர் குடிக்க வேண்டும்.

சாதம் வடிக்கும் கஞ்சியில் சிறிது மஞ்சள் தூளையும் சிறிது பனங்கற்கண்டையும் சேர்த்துச் சூடாக சாப்பிட்டால் வயிற்றுப் பொருமல் குணமாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றிலும் வகைக்கு 10 கிராம் ஏலம், சாதிக்காய் இரண்டும் வகைக்கு 5 கிராம் ஆகியவற்றுடன் 100 கிராம் இஞ்சியையும் சேர்த்து இரண்டு ரம்ளர் தண்ணீரில் போட்டு அடுப்பில் வைத்து பாதியாய்ச் சுண்டும்வரை காய்ச்சியெடுத்து ஆறவைத்து போத்தலில் எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு தினமும் காலையில் ஒருவேளை மட்டும் வெறும் வயிற்றில் இந்தத் தூளில் இரு தேக்கரண்டி அளவு எடுத்து சிறிது தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுப்பொருமல் குணமாகும்.

சிறிதளவு ஓமத்தை எடுத்து சிறிது தண்ணீர் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்தெடுத்து பசும்பாலில் கலந்து பருகிவந்தால் வயிற்றுப்பொருமல் குணமாகும். கீரை வகைகளில் எல்லாக்கீரைகளிலும் சிறிது சிறிது எடுத்துக் கழுவித்தண்ணீரில் போட்டு அடுப்பில் வேகவைத்து சமைத்துச் சாப்பிட்டு வந்தால் வயிறு தொடர்பான எல்லாவிதமான நோய்களும் குணமாகும்.

நாயுருவிச் செடியைப் பறித்துவந்து நன்கு சுத்தம் செய்து ஒரு பாத்திரத்தில் போட்டு சிறிது தண்ணீர் விட்டுக் காய்ச்சி இறக்கி வடிகட்டி போத்தலில் எடுத்துப் பத்திரப் படுத்தி வைத்துக்கொண்டு தினமும் காலையில் ஒருவேளை மட்டும் வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் வயிறு தொடர்பான எல்லாவித நோய்களும் குணமாகும். ஒரு ரம்ளர் ஆட்டுப்பாலை எடுத்து ஒரு சிறிய மாதுளம் பிஞ்சை அரைத்து உருண்டையாக உருட்டி எடுத்துக்கொண்டு அந்தப் பாலையும், உருண்டையையும் உட்கொண்டு வந்தால் சில நாட்களில் வயிறு தொடர்பான எல்லா நோய்களும் குணமாகும்.






## புதுமைகள் பூக்கட்டும் தமிழர் வாழ்வில்!

பூக்கள் சொரிந்து புன்னகைமலர
புதிய ஆண்டினை வரவேற்போம்
பாக்கள் பாடிப் பரவசமடைந்து
பத்தொன்பதாம் ஆண்டுக்கு வரவுசொல்வோம்
ஏக்கம் தீர்ந்து எம்மினம்வாழ
ஏற்றதீர்வினைத் தாவென வேண்டி
ஆக்கம் நிறைந்த ஆண்டேவாவென
அனைவரும் வாழ்த்தி வரவேற்போம்

பதினெட்டாம் ஆண்டுக்கு விடைதருவோம்
பத்தொன்பதாம் ஆண்டுக்கு விருந்திடுவோம்
பதினெட்டாம் ஆண்டினை அனுப்பிவிட்டு
பாரினைக்காத்திடும் பகலவனாய் வருகின்ற
புதியஆண்டினை வரவேற்போம் இங்கு
புதுமைகள் பூக்கட்டும் தமிழர்வாழ்வில்
அதிசயம்போல நன்மைகள் நடக்கட்டும்
ஆளுமையுள்ள ஆண்டாய் மலரட்டும்!




சொந்த மண்ணில் வாழ்விழந்தோம்
சோகமே நெஞ்சில் நாம்சுமந்தோம்
எந்தஉரிமையும் கிட்டாமல் நாங்கள்
எளிய வாழ்வினைத் தொடர்கின்றோம்
பாந்தமாய் மலர்கின்ற பத்தொன்பதே
பாசமாய் எம்மை அணைத்திடுவாய்
குந்தகம் வாராது குறைகளகலும்
கும்பிட்டோம் குதூகலத்தைத் தந்திடுவாய்!

நாடுநாடாய் ஓடியோடி நாங்கள்
நாய்படாத பாடெல்லாம் பட்டோமே
மாடுமனை காணிநிலம் பறிகொடுத்தோம்
மனிதஉயிர் கணக்கின்றி இழந்தோம்
ஈடுசெய்ய முடியாத இழப்பெல்லாம்
இங்குநாம் இழந்தோமே இன்னுமென்ன
தேடுகின்ற நல்லமைதி வேண்டுகின்றே
தேடிவரும் புதியஆண்டை வரவேற்போம்!

கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.






- கனி -
416.261.1348

விளம்பரம் வாசகர்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து. 2019ஆம் ஆண்டு மன நிறைவு தரும் நல்லாண்டாக அனைவருக்கும் அமைய வேண்டும் என இறைவனை வேண்டிக் கொண்டு தொடருகின்றேன்.

### கூடியம் குகைகள்

கீழடியின் சிக்கல்கள் சிலரிடம் ஏற்படுத்திய தாக்கத்தினால் உண்டான தேடலில் வெளிப்பட்ட கூடியம் குகைகள் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைக்கு வந்து விட்டோம். தமிழர்களின் பழைமை யின் உண்மைத் தன்மையின் ஆரம்பம் இதுவெனக் கூறலாம். சென்ற தடவையில் அல்லிக்குல்லி மலைக்குன்று பற்றியும் அது தோன்றிய விதம் பற்றியும் அறிந்து கொண் டோம். அல்லிக்குல்லி மலை தோன்றிய வேளையிலேயே அதாவது எட்டு மெய்யிரம் (எட்டு மில்லியன்) ஆண்டு முன்னரே கூடியம் குகைகளும் தோன்றி விட்டன என்பதையும் அறிந்திருந்தோம். அவ்விடத்தில் இருந்து எமது தேடலைத் தொடருவோம்.

'சேர் றொபேர்ட் புறுஸ் பூட்' அவர்களின் பரிந்துரையின்படியோ அல்லது வேறு காரணங்களினாலோ தெரியாது 1962-1963 காலப்பகுதியில் இந்திய மத்திய தொல்லியல் துறையினரின் அனுசரணை யுடன் 'திரு. கே. டீ. பனர்ஜி' என்ற தொல்லியலாளர் அல்லிக்குல்லிப் பகுதியில் கள ஆய்வுகள் செய்கிறார். அவ்வேளை-யில் இரண்டு கூடியம் குகைகளை அவர் கண்டு பிடிக்கிறார். அல்லிக்குல்லி மலைக் குன்றுப் பகுதியில் 16 குகைகளாவது இருக்க வேண்டும் எனக் குறிப்புகள் இருந்த போதிலும் பனர்ஜி அவர்களால் இரண்டு குகைகளை மாத்திரமே கண்டு பிடிக்க முடிகிறது. ஆனால் அவ்விரு குகைகளும் மனித வரலாற்றுக் குறிப்பில் ஆழமான பதிவுகளை உண்டாக்கிவிட்டன, அதனைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்த தமிழர்களுக்குத் தெரியாமலே. இனி இவ் விரு குகைகளும் எங்களுக்குத் தரும் முக்கிய தகவல்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

வண்டல் மண்ணினால், கூழாங்கற்கள் இயற்கையால் குழைத்து ஒட்டப்பட்டு அமைந்துள்ள இக்குகைகளின் மேற்புறத் தில் இருந்து கூழாங்கற்கள் எக்கணமும் பொறிந்து கீழே விழுந்து விடுமோ என்ற அச்சத்தைக் காட்டிக் கொண்டே 8 மெய் யிரம் ஆண்டாக ஊறுபடாது இருக்கும் இக்குகைகளில் இருந்து பர்னஜியும் குழு வினரும் ஏராளமான, வரலாற்றுக்கு முந்திய மனிதர் பாவித்த கல்லாயுதங்களைக் கண்டெடுத்தார்கள். அவை அங்கிருந்து அகற்றப்பட்டு, இந்தியாவின் அருங் காட்சி யகங்களில் இப்போது வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்லாயு தங்களின் காலம் கணிக்கப்பட்ட போது அவை நூறாயிரம் ஆண்டு பழைமை யானவை என்பது தெரியவந்தது. இக்காலக் கணிப்பிற்கு அப்பகுதியில் அக்கல்லாயுதங் களுடன் கண்டெடுக்கப்பட்ட கரித்துண்டுகள் போன்றவற்றில் காபன் காலக் கணிப்பு செய்தே அத்துல்லியமான காலம் கூறப் பட்டது எனக் கூறுகின்றார்கள்.



அருகில் உள்ள படத்தில் கூடியம் குகை ஒன்றி-னையும் அதனைப் பார்க்கச் சென்ற சிலரையும் காணலாம்.



கூடியம் குகை ஒன்றின் இன்னொரு படம் இது.

இரண்டில் ஒரு குகை மற்றையதை விடச் சற்றுப் பெரியதாக இருந்தது. இக்குகைகள் ஒரு நிரந்தரத் தங்குமிடமாக இல்லாமல், காலத்திற்குக் காலம் வந்து போகுமிடமாக இருந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. எவரொருவராலும் சிறிதளவேனும் செப்பனிடப்படாமல், முற்றிலும் இயற்கை யின் அமைவில் அமைந்த இக்குகையில் 200 முதல் 500 வரையிலான மனிதர்கள் தங்கியிருந்திருக்கலாம் எனக் கூறுகிறார் கள். படத்தில் தெரிகிறதல்லவா, குகைக் குள்ளேயே பகுதி பகுதிகளாக உட்தள்ளிய வண்ணம் அமைந்திருக்கும் இடங்கள். கூகுளிற் சென்று இதுபோன்ற ஏராளமான படங்களைக் காணலாம். நூறாயிரம் ஆண்டு முன்னர் வாழ்ந்தவர்கள் பாவித்த இடமென்பதால், இது தனியவே கோமோ சேப்பியன்களாகிய மனிதர்களின் கைவண் ணப் பகுதியாகவே இருக்க வேண்டும். அதிலும் மூளைவிகாரம் ஏற்பட்டுத் தங் களின் அறிவினைத் துரிதமாக வளர்த்துக் கொள்ளும் தன்மையைப் பெற்ற காலத் திற்கும் முன்னவர்களாகவே இவர்கள் இருந்திருக்க வேண்டும். எனவே தங்களது நகர்வுப் பாதையில் சிறிது காலத்திற்குத் தங்கிய ஓரிடமாக இது இராது, அவர்களின் அக்கால வாழ்க்கை அமைந்த இடமாகவே இதனைக் கருத வேண்டும். மேலும், ஏரா ளமான கல்லாயுதங்கள் எடுக்கப்பட்ட தாலும், இவ்விடத்தில் பெரும்பாலும் காணப் பட்ட குவாட்சு வகைக் கற்களும் கூழாங்கற் களும் உடைப்பதற்கு இலகுவானவையாக இருப்பதாலும் இவ்விடத்தை அவர்கள் கிட்டத்தட்ட அவர்களது ஆயுதங்கள் தயாரிக்கும் இடமாகவே பாவித்திருக்கலாம் எனக் கருதுகிறார்கள். எனவே இம்மனி தர்கள் ஏதோ ஓர் அறிவியல் வளர்ச்சி ஏற்படும் வரையிலும் இங்கு தொடர்ச்சியாக வாழ்ந்திருக்கலாம் என நம்பலாம். அதற் கான பாதுகாப்புக்கள் நிறைந்த இடமாகவும் இது உள்ளதல்லவா.

இவற்றினூடாக நூறாயிரம் ஆண்டாக மனித வாழ்வியற் தொடர்ச்சி தமிழ்நாட்டுப் பகுதிகளில் இருந்துள்ளது என்பது 1963 களில் உறுதியாக்கப்படுகின்றது. மேலும், இவர்களின் வழியில் தமது அறிவியல் மேம்பாட்டால் வந்தவர்கள்தான் தமிழர்கள் என்பதுடன் தமிழரது தொன்மையையும் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இக்காரணங்களினால்தானோ என்னவோ, இவ்விட ஆய்வுகள் எல்லாம் அம்மட்டிலேயே நிறுத்தப்பட்டு விட்டனவோ என எண்ணவும் தோன்றுகின்றது.

இக்கூடியம் குகைகள் பற்றிய விபரங்கள் பெரிய அளவில் இல்லாதுவிடினும், ஓரள வுக்கு வெளியில் வரத் தொடங்கியுள்ளன. பலர் கூடியம் குகைகளுக்குச் சென்று பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். இக்குகை களுக்குச் செல்வது ஒரு சுவாரசியமான அனுபவமாகக் கூடச் சிலர் கூறுகின் றார்கள். ஆனாலும், இப்படியாகப் பார்க்கச் செல்பவர்களால், குகைகளுக்கும் அதன் சூழலுக்கும் ஏற்படும் இடையூறுகளும் பலவுள்ளன. இவை பற்றிய விபரங்களை அடுத்த தடவையில் பார்ப்போம்.

2019, தை 14இல் வருகின்ற தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் விளம்பரத்தின் ஊடாக இப்போதே கூறி மகிழ்கிறேன்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

நடைமுறைப்படுத்த மாட்டார்- எனவே, அவரைக் கொண்டு வந்தால் இலங்கை மீதான சர்வதேச நெருக்குதல்கள் அதிகரிக்கும் இந்த நெருக்குதல்கள் போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும்- தமிழ் மக்களின் பிரச்சினை தீர்விற்கும் அது வழிசமைக்கும்"

இப்படி ஒரு கருத்தை கூட்டமைப்பை விமர்சிக்கும் கட்சிகள் தெரிவித்து வருகின்றன. இதனை வெளிப்படையாகவோ, அறிக்கைகள் ஊடாகவோ வெளிப்படுத்தாமல் விட்டாலும் தனிப்பட்ட முறையில் உரையாடுகின்றபோது இப்படியொரு கருத்தை இக்கட்சிகளின் உறுப்பினர்கள் கூறுகின்றனர். இதுவும் ஒரு தவறான கண்ணோட்டமே. மஹிந்த ராஜபக்ஸ போரை மூர்க்கமாக நடத்திய போது, மக்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டபோது உதவிக்கு வராத இந்த நாடுகள் மஹிந்தவிற்கு நெருக்கடி கொடுத்து தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத்தரும் என்று நம்பலாமா?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது குறையே இல்லை, அக்கட்சி விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது என்று யாரும் கூற முடியாது. விமர்சனத்திற்குரியதான நடைமுறைகள் அக்கட்சியிடம் உள்ளன. அக்கட்சி மீதான விமர்சனம் அறிவுபூர்வமான



தாக, மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். அவ்வாறாக அமையும் போதுதான் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் கூட்டமைப்பிற்கு எற்படும். 'முன்னால் சென்றால் கடிக்கும் - பின்னால் சென்றால் உதைக்கும்' பிராணியைப் போன்று விமர்சனங்களும், குற்றச்சாட்டுக்களும் அமையக் கூடாது.

# கனடாவின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

தாலும், இன்யூட் மொழிக்கும் இன்னு மொழிக்கும் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை. 1999ஆம் ஆண்டு 'சவைவல் இன்ரநாஷனல்' என்ற குழுவினர் லபரடோர் இன்னு இனத்தவர்கள் பற்றி ஓர் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டிருந்தனர். அதில் கனடிய அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இன்னு இனத்தவர்களின் இடப்பெயர்வு எவ்வளவு தூரம் அந்த இனத்தைப் பாதித்திருந்தது என்பதைப் பற்றி விரிவாக எழுதப் பட்டிருந்தது. பழைய வாழ்க்கை முறையில் இருந்து புதிய இடம் வேறுபட்டதால் அவர்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் பற்றி எல்லாம் அதில் குறிப்பிடப் பட்டிருந்தன. 2000ஆம் ஆண்டு டேவிஸ் இன்லெட் குடியிருப்பு பகுதியில் இருந்த சிலர் தங்கள் விருப்பத்தின் பெயரில் அரசின் உதவியுடன் நெருஸிஸ் (Natuashish) என்ற இடத்தில் குடியமர்த்தப் பட்டனர்.

# அதிசயக்...

09 ஆம் பக்கத்தொடர்ச்சி

பார்வதியுடன் அமர்ந்திருக்கும் சிவனின் முன்பு முட்டியிட்டவாறு அமர்ந்திருக்கிறார்.

### அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் யுத்தம்

21 பிராமண தெய்வங்கள் பாரம்பரியமான வாகனத்தில் ஊர்வலம் செல்கின்றன. ஒரு தேவர் அசுரனோடு மோதுகிறார். பின் புலத்தில் இருசாராரும் போரிடுகிறார்கள். எதிரிகள் தொடராக செல்கிறார்கள். ஒரு யக்ஷனின் தோள் மீது அமர்ந்த குபேரன் வில் அம்போடு காட்சியளிக்கிறான். அதற்கு போர்க் கடவுளான ஸ்கந்தன் பல தலைகளோடும் கரங்களோடும் மயில் மீது அமர்ந்திருக்கிறார். இந்திரன் அவனது வாகனமாகிய யானை மீது நின்று கொண்டிருக்கிறான். விஷ்ணு கருடனின் தோள் மீது அமர்ந்திருக்கிறார். ஓர் அசுரன் வாளைச் சுழற்றுகிறான். நீதிக் கடவுளான எமன் எருது இழுக்கும் தேரில் வாளும் கேடயமும் ஏந்தியவாறு வீற்றிருக்கிறான். வில்லை வளைக்கும் சிவன், அன்னத்தின்



மீது அமர்ந்த பிரம்மா. குதிரைகள் இழுக்கும் தேரில் சூரியன், ஐந்து தலை நாகம் மீது வருணண்.

தொடரும்

# இன்னல்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

தோற்றம் ஏற்படுவதைத் தடுக்கும். எலுமிச்சம்பழச்சாற்றினைக் கூந்தலுக்குப் பூசிக் கழுவினால் கூந்தல் நறுமணம் பெறும். எலுமிச்சம்பழத்தை கடுகு எண்ணெய்யில் தோய்த்து நகங்களுக்குப் பூசிவந்தால் நகங்கள் அழகாக இருக்கும்.

எலுமிச்சம்பழச்சாற்றை வெறும் வயிற்றில் குடிக்கக் கூடாது. அல்சர் உள்ளவர்களுக்கு அதிக பாதிப்பைக் கொடுக்கும். அதிகமாகக் குடித்தாலும் கூடாது.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள்.



மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

# பிரபஞ்சன்...

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

பாராட்டிக் கொண்டாடும் வழிகாட்டி பிரபஞ்சன். அவருடைய படைப்புகளை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திடம்தான் உள்ளது.


கே. சந்துரு, ஓய்வுபெற்ற நீதிபதி: "நானும் பிரபஞ்சனும் நாற்பது ஆண்டுகால நண்பர்கள். எழுத்தாளர்களுக்கும் அவரது படைப்புகளுக்கும் கௌரவம் கொடுத்து வரும் கேரளா, கர்நாடக அரசைப் போல இங்குள்ள அரசும் தமிழ் எழுத்தாளர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். பிரபஞ்சனின் படைப்புகள் அனைத்தும் அது போல கவுரவிக்கப்பட வேண்டும்."

இளம்பிறை, கவிஞர்: "ரவிக்குமார் இங்கு குறிப்பிட்டதுபோல் பிரபஞ்சன் எழுத்துகள் எப்போதுமே பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் தான் நிற்கும். நான் கல்லூரி மாணவியாக இருந்த போதே பிரபஞ்சனிரிடம் பேசியது உண்டு. வடசென்னையில் நடைபெற்ற எத்தனையோ இலக்கிய நிகழ்வுகளில் எழுச்சியோடு பிரபஞ்சன் பேசுவதை பார்க்கவே நான் சென்றதும் உண்டு. யாராக இருந்தாலும் ஒரேவித அன்போடும் பாசத்தோடும்தான் நடந்து கொள்வார். அவர் இல்லாதது தமிழ் படைப்பாளிகளின் உலகத்திற்கு மாபெரும் இழப்பு. பெண்




எழுத்தாளர்கள், பெண் கவிஞர்கள் எல்லோருக்கும் பிரபஞ்சன் தான் குரு."

## விளம்பரத்தை விரும்பியே வாழ்த்துவோம்



29 விளம்பரம் VLAMBARAM



புலம்பெயர்ந்து வாழும் தமிழர்தம்
புகழுக்கும் அவர்தம் தொழிலுக்கும்
நலம்விளைய வேண்டுமென எண்ணி
நல்லதோர் இதழாம் 'விளம்பரம்'
பயன்பெறத் தொடக்கி வைத்து
பாங்குடன் பணிகள் செய்தீர்
வலம்வரும் விளம்பரஇதழில் பல
வகைவகையாய் செய்தி தந்தீர்!

விளம்பரத்தால் நடத்தும் வியாபாரம்
வீணாகிப் போவதுண்டோ? இதழில்
அளவுடன் விளம்பரங்கள் இன்னும்
அறிவான கட்டுரைகள் கவிதைகள்
வளமுடன் வாழ்வதற்கு அறிவுரைகள்
வண்ணம்மிகு நிழற்படங்கள் சேர்ந்த
இளமைமிகு விளம்பரஇதழை மாதம்
இருமுறை வெளிக்கொணர்ந்தீர் வாழ்க!

இருபத்தெட் டாண்டுகள் நிறைவுற்று
இருபத்தொ ன்பதுக்குள் புகுந்திடும்
பெருமைமிகு விளம்பரஇதழை தமிழர்
பேணிக் காத்திடுதல் வேண்டும்!
விரும்பியே வாழ்த்துவோம் நெஞ்சுருகி
விளைவதுயாவும் பயனுற வேண்டும்!
கரும்பாய் இனிக்கும் தமிழர்தம்வாழ்வு
கனடா மண்ணிலும் வளமுறவேண்டும்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்கார் - திரை விமர்சனம்



ஞா. ஆரணி

அமெரிக்காவில் ஒரு பெரிய நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) சுந்தர் ராமசாமி (விஜய்). இந்தியாவிற்கு அவர் வரப்போகிறார் எனச் செய்தி வந்தவுடன், இந்தியாவில் இருக்கும் பல்வேறு நிறுவனங்கள் தங்களை அவர் வாங்கி பின்னர் மூடிவிடுவாரோ என அஞ்சுகின்றன. ஆனால்



சுந்தர் தேர்தலில் வாக்கு அளிக்கவே தான் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கின்றேன் என்றும், வாக்களித்தவுடன் மறுபடியும் அமெரிக்காவிற்கு திரும்பிவிடுவேன் எனக்கூறுகின்றார்.

ஆனால் வாக்கு அளிக்கப்போகும் போது சுந்தர் தனது வாக்கை வேறு ஒருவர் கள்ளத்தனமாக ஏற்கனவே அளித்துள்ளார் என அறிகிறார். எனவே சுந்தரும் இந்தியச் சட்டத்தை ஆராய்ந்து தனது வாக்கு அளிக்கும் உரிமையை நீதிமன்றத்தில் கேட்கிறார். ஒரு வாக்கில் என்ன பெரிதாக இருக்கிறது என எல்லோரும் கேட்கின்றர்.

இதற்கு இடையில் சுந்தரின் அக்காவின் முன்னாள் கணவரின் தங்கை நிலா (கீர்த்தி) ஓர் அரசியல்வாதியின் மகளாக அறிமுகப் படுத்தப்படுகிறார்.

சுந்தர் சட்டத்தின் மூலமாக அந்தத் தேர்தலில் வெற்றி அடைந்தவரின் பதவி ஏற்பைத் தடுத்து நிறுத்துகிறார். சுந்தருக்காக மீண்டும் அவருக்கு மட்டும் வாக்களிப்பு நடைபெறும் வேளையில் இந்த வழக்கினால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுகிறது. பல ஆயிரம் மக்கள் தங்களது வாக்குகளும் கள்ளத்தனமாக மற்றவர்களால் போடப்பட்டதாகவும், அவர்களும் தமக்கு வாக்கு அளிக்க உரிமை வேண்டும் எனவும் நீதி கேட்கின்றனர். இவ்வாறு ஒரு வாக்கு பல்லாயிரம் வாக்குகளாக மாறி தேர்தலின் தீர்ப்பை முழுதாக மாற்றக் கூடிய தன்மை ஏற்படுகிறது. இரண்டு கிழமையில் தேர்தல் மறுபடி நடக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. எவ்வாறு நிலைமை தீவிரமாகி சுந்தரே தேர்தலில் போட்டியிடுமளவிற்கு மாறுகிறது எனப்படத்தை பார்த்து அறியுங்கள்.

தொழிலதிபரான சுந்தர், வணிகத்திற்கும் அரசியலுக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை என்றும், இரண்டிற்கும் Brandஉம் அதை Market செய்யும் முறையிலும்தான் எதிரிகளை வீழத்த முடியும் என்கிறார். இவ்வாறே அவர் தனக்கு எதிராக தேர்தலில் நிற்கும் கோமளவல்லியை (வரலஷ்மி) எதிர்க்கிறார்.



அரசியலைப்பற்றி நிறையக் கருத்துக்கள் இப்படத்தில் உணர்த்தப்படுகின்றன. ஒரு வாக்கு மிக முக்கியமானது, அதை அளிப்பது மக்களின் பொறுப்பு என்கிறார் சுந்தர். கட்சியைத்தாண்டி மக்களது நலத்திற்கு வேலை செய்பவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்படத்தில் தேர்தலில் வேட்பாளர்களாக அறிமுகப் படுத்தப்படுகின்றனர். அத்தோடு ஜனநாயகத்திற்கு முதல் எதிரி ‘தங்களை எதிர்க்க யாருமில்லை’ என்ற எண்ணம்தான் என்கிறார் சுந்தர். தான் எப்பொழுதும் வெளியிலிருந்து அரசாள்பவர்களைக் கேள்வி கேட்பேன் என்று சுந்தர் கூறுகிறார்.

ஒருவிரல் புரட்சி என சர்கார் படத்தில் தேர்தலில் வாக்களிப்பின் முக்கியத்துவத்தைக் கூறியுள்ளார்கள். கனடாவின் 2015ஆம் ஆண்டு தேசியத் தேர்தலில் 68% மக்களே வாக்களித்துள்ளனர். இந்தியாவில் 2014இல் இடம்பெற்ற தேசிய தேர்தலில் 65% மக்களே வாக்களித்துள்ளனர். உலகம் எங்கும் இளைஞர் தேர்தலில் வாக்களிப்பது குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்களிப்பதற்காக இலவசமாகப் பொருட்களை வழங்குவதும் மற்றும் வாங்குவதும் தவறு என்றும், ஆட்சி செய்பவர்களை மக்கள் கேள்வி கேட்க வேண்டும் எனவும் இப்படத்தில் இயக்குனர் முருகதாஸ் வலியுறுத்துகிறார். சர்கார் படத்தின் மூலம் இந்திய அரசியலமைப்பில் 49P என்னும் சட்டப்பிரிவைப் பாவித்து அவர்களது வாக்குகள் களவாகப் போடப்பட்டவர்கள் தமது வாக்கை அளிக்கலாம் என மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.


இப்படம் விஜயின் வழமையான பொழுது போக்குப்படம் போல் அல்லாமல் மக்களுக்கு அரசியல் சம்பந்தப்பட்ட பொது அறிவை வழங்கும் படமாக உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் மாசு



விதுசிகா அருள்தாசன்
அகவை -13

## *Plastic Pollution*

நெகிழிப் (பிளாஸ்டிக்) பொருட்கள் விரைவில் உக்கும் தன்மை அற்றவை. பிளாஸ்டிக் கழிவினால் சூழல் மாசடைகின்றது. குப்பையில் இருக்கும் பிளாஸ்டிக் பொருட்களை எரித்தால் காற்றை மாசு படுத்தும், புதைத்தாலும் ஒன்றும் ஆகாது. பிளாஸ்டிக் பொருட்களில் இருந்து வெளியேறும் நச்சு இரசாயனங்களால் மிக ஆபத்தான சுகாதாரப் பிரச்சனைகள் ஏற்படலாம். மனிதருக்கு ஹோர்மோன் பிரச்சனைகள், இனப்பெருக்கம், மற்றும் சிறுநீரகப் பிரச்சனைகள் ஏற்படும். மனிதராகிய நாங்களே அபாயகரமான தீங்குகளை எங்கள் மேலே உருவாக்குகின்றோம். அதாவது பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி (Recycle )க்கு போடாமல் குப்பையுடன் போடுவதால் எங்களுக்கே ஆபத்தாகி விடுகின்றது.

பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் நன்மையைவிட தீமையே அதிகம். ஒரு பிளாஸ்டிக் பொருள் உக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் பல நூறு ஆண்டுகள். கடலில் மிதக்கும் உக்காத கழிவுப்பொருள்களில் பிளாஸ்டிக் சார்ந்த பொருள்களே அதிகம்.

இன்று பிளாஸ்டிக்கால் உருவான பல வகை பொருட்கள் பாவனையில் உண்டு. ஆனால் பிளாஸ்டிக்குக்கு எதிரான போராட்டங்களும், எதிர்ப்புகளும், தடைகளும் அதிகரித்து வருகிறது. பலர் பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளையும், தீமைகளையும், பாதிப்புகளையும் மக்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

பிளாஸ்டிக் கழிவுகள் நீர் நிலைகளுடன் சேருவதால், நீர்வாழ் உயிரினங்கள் பாதிப் படைகின்றன. கடல்வாழ் உயிரினங்கள் இக்கழிவுகளை உண்பதால் அவை பாதிப் படைகின்றன. பிளாஸ்டிக் கழிவில் இருந்து நச்சுப்பொருட்கள் உணவாக மீனினைச் சென்றடைகிறது. கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுப்பொருள்களை மீன்கள் உணவாக உட்கொள்ளும் போது அந்த மீனை மனிதன் உணவாக உண்ணும்போது மனிதனுக்கு மீனின் மூலம் பல்வேறுபட்ட நோய்கள் வருவதாக ஓர் ஆய்வுத் தகவல் தெரிவிக்கிறது. நாம் அன்றாடம் பயன் படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களில் 7 சதவீதம் மட்டுமே மறுசுழற்சி மூலம் திரும்பப் பயன்படுத்த முடியும் தன்மையுடையதாக உள்ளது. அதே மீனினை உணவாக உட்கொள்ளும் பறவைகள் முதல் மனிதர்வரை பாதிப்புக்குள்ளாகின்றனர். இவ்வாறாக பிளாஸ்டிக் பொருட்கள் உணவுச்சங்கிலி முழுவதையும் பாதிப் படையச் செய்கிறது.



பிளாஸ்டிக்கை எரிக்கும்போது அதிலிருந்து வெளியேறும் நச்சுவாயு உயிரினங்களுக்கு மிகமிக ஆபத்தானது. எரிக்கும்போது அதிலிருந்து வெளியேறும் புகையினை சுவாசிக்கும் போது சுவாசக்குழாயினை தாக்குகின்றது. அதனால் மூச்சு திணறல் ஏற்படும்

பிளாஸ்டிக் போத்தல்களில் வரும் தண்ணீரை நீண்ட நாட்கள் வைத்துப் பாவிப்பதால் பிளாஸ்டிக்கில் உள்ள நச்சுத்தன்மை தண்ணீருடன் கலந்து உடலுக்கு பாதிப்பை தரும்.

நாம் அனைவரும் பிளாஸ்டிக் மாசு பாட்டினை தவிர்க்கச் செய்ய வேண்டியவை:

* பொருட்கள் வாங்க கடைக்கு செல்லும்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

VENI CANADIAN IMMIGRATION SERVICES
UTHAYAVENI THURAIRAJA
416-587-6971
2425 Eglinton Ave. East, Suite 211, Toronto, Ontario M1K 5G8, Canada
Email: immigrationconsultant.veni@yahoo.ca
Fully Licenced & Regulated Canadian Immigration Consultant
► Family Class Sponsorship
► Spousal Sponsorship
► Parent and Grandparent Super Visa Applications
► Visitors Visa - Invitation - Statutory Declarations
► Student/Visitor/Worker - Temporary Resident Visas
► Work Permit Applications with Job Offers
► Skilled Worker Application and Employers Hiring Foreign Workers
► Business Applications - Investor/ Entrepreneur/Self Employed
► Provincial Nominee Program
► Refugee Claim
► Live-in caregiver program
► Canadian Citizenship Applications
► Canadian Experience Class
► Permanent Resident Card Renewal
► Removal Order Hearings
► Humanitarian and Compassionate Application and PRRA
► Sponsorship Appeals




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிப்பிக்குள் முத்து உருவான அதிசயம்



சுந்தரம்
இந்திரராஜா

முத்து (Pearl) என்றதும் எமக்கு முதலில் நினைவுக்கு வருவது அரச பரம்பரையின ரையே. ஏனெனில் புரதான காலத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள் முத்தை தமது அணிகலன்களில் ஒன்றாகத் தெரிவு செய்ய முடியாத நிலைமை நீடித்தது. இதன் பெறுமதி உயர்வாகக் காணப்பட்டதால் மகா ராணி, இளவரசி, வசதிபடைத்தவர்களே முத்துக்கள் பதிக்கப்பட்ட நகைகளை அணிந்து வந்தனர்.

விலை மதிப்புள்ள இந்த முத்துக்களை முத்து குளித்தல் மூலமே பெற வேண்டிய நிலை காணப்பட்டது. முத்துக்குளிக்கும் இடங்கள் உலகில் மிகச் சிலவே. பாரசீக வளை குடாவில் உள்ள பாரைன், இலங் கையில் உள்ள சிலாபம், மன்னார் வளை-குடா, ஜப்பானில் உள்ள ரோக்கியோ கடல், இந்தியாவின் தூத்துக்குடி, குக்ஸ் தீவுக் கூட்டம் அமைந்துள்ள கடல் பிரதேசம், அவுஸ்திரேலியாவின் மேற்கு கரை யோரங்கள், கலிபோர்னியாக்கடல், இந்தோ னேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் என்பன ஆதியில் முத்துக் குளித்தலுக்கு உகந்த இடங்களாகக் கருதப்பட்டன.

ஆதியில் முத்துக்குளித்தல் நடைமுறை அபாயம் நிறைந்தது. சுமார் இருபது மீற்றர் ஆழமுள்ள நீர் படுக்கையில் தென்படு கின்ற சிப்பிகளைச் சேகரிக்க என்பது தொண்ணூறு செக்கன்களில் இது நடை பெற்றாக வேண்டும். மூச்சை அடக்கவும் தம்மீது அழுத்தும் நீரின் கனத்தை தாங்கக் கூடியவராக இருத்தல் அவசியம். புதிதாக இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மூக்கிலும் காதுகளிலும் இரத்தம் கசிவது தவிர்க்க முடியாததொன்றாகும். இவர்கள் மனிதனை விழுங்கும் பெரிய சுறா மீன்கள் அண்மிக்கும் வேளைகளில் சமயோசிதமாக தப்பிக்க வேண்டிய நிலையும் உள்ளது. இதற்கு அவர்கள் பாதுகாப்பாக சிறிய கருங்காலி தடிகளை தம்வசம் வைத்துக் கொள்வர். முத்துக் குளிக்கும் ஒருவர் தவறுதலாக நீண்ட நேரம் கடலினுள் தங்கி விட்டால் மூச்சு திணறி இறந்து போவது முண்டு. இந்தப் பணியில் ஈடுபடுபவர்கள் உடல் வலிமையும் அகன்ற மார்பும் கறுத்த நிறமுடையவராகவும் இருத்தல் என்பது பழைய முறை.

முத்துக்கள் நன்னீரில் உருவானவையா, கடல் நீரில் உருவானவையா, அவற்றை உருவாக்கிய முத்துச்சிப்பி வகை, உரு வான பிரதேசம் என்பவற்றைப் பொறுத்து முத்துக்களின் இயல்புகள் வேறுபடுகின்றன. முத்துக்களில் அக்கோயா முத்து, தென் கடல் முத்து, தகித்தியன் முத்து, நன்னீர் முத்து போன்ற வகைகள் உள்ளன. சில வகைகள் அரிதாகவே கிடைக்கின்றன, இதனால் முத்துக்களின் மதிப்பும் அதிகம். சிப்பியிலிருந்து முத்தை பிரித்தல் முட்டை வடிவிலான முத்துக்கள் பொதுவாகத் தென் பட்டாலும் உருண்டையான தோற்றமுடைய முத்துக்களுக்கே (Pearls) மதிப்பு அதிகம். இந்த உலகில் கறுப்பு நிறமுத்துக்களும் மிக அருமையாகத் தென்படுகின்றன. இவ்வகையான முத்துக்களுக்கும் வரவேற்பு அதிகம். பத்து நிறங்களில் முத்துக்கள் கிடைக்கிறது. முத்து பெரும் சொத்து.

இன்றைய நவீன யுகத்தில் நீரினுள் சுவாசிக்கக்கூடிய பிராணவாயு நிரப்பப்பட்ட சிறிய ரக சிலிண்டர்களையும் தலைக் கவசத்தையும் அணிந்த பின்பு கடலினுள் இறங்குவர். சிப்பிகளைச் சேகரிப்பதற்காக இடுப்பைச் சுற்றி வலை ஒன்றையும் கட்டிக்கொள்வர். முத்துக்குளிக்கும் பணி முடிவுற்றதும் சிப்பிகளை கரையில் கொட்டி ஏலத்தில் விற்பனை செய்வர். அதை வாங்கியவர்கள் சில நாட்களின் பின்பு சிப்பிகளைத் திறந்து கழுவி வெளியில் எடுப்பர்.

அவிகுடிலி சிப்பிகளிலும் (Oysters, Clams) யூனியானி என்னும் மட்டிகளிலும் (Mus sels) உற்பத்தியாகும் முத்து இயற்கை முத்துக்களாகும். இந்த முத்துக்கள் சிப்பி யின் உட்புறம் முத்துப்போல் அழகான மெல்லிய பொருள் ஒன்றினால் மூடியிருக்கும்.



### முத்துக்கள் உருவாவது எப்படி?

சிப்பிக்குள் தோன்றும் கெட்டியான பொருளே முத்து எனப்படுகிறது. கடலில் காணப்படும் முத்துச் சிப்பியினுள் மணல் போன்ற சிறிய திண்மப் பொருளொன்று எதேச்சையாகப் புகுந்து விடுகின்றது அல் லது சிப்பியின் வாய் வழியாக புல்லுருவி உள்ளே தவறிச் சென்று விடுகின்றது. அப்போது சிப்பியின் உட்பாகத்தில் ஓர் உறுத்தல் ஏற்பட்டு, எபிதீலியம் என்னும் திரவத்தை அதன்மீது பொழியும். அவ்வாறு பொழியும்போது அந்தப் புல்லுருவி மடிந்துவிடும். அதன்மீது எபிதீலியம் திரவம் பல அடுக்குகளில் படிந்துவிட, அது விலை உயர்ந்த முத்தாக மாறிவிடுகிறது. மனித உடலிலும் கட்டிகள் (Teratoma tumours) வளர்வது திரவப்படிவுகளால் தான்.


அச்சிப்பியில் சுரக்கும் எபிதீலியம் திரவம் மெல்லிய அடுக்குகளாக அந்தச் சிறிய திண்மப் பொருள்மீது படிந்து முத்தாக மாறுகிறது. முத்தில் காணப்படும் பிரதான மூலப் பொருள்களாவன: ஆகனைட் (arag-onite mineral), கொன்சியோலின் புரதம் (conchiolin protein), நீர் என்பனவாகும். இதை நேக்கர் (Nacre) என்பர். முத்து உருவாகும் போது மெல்லிய அடுக்குகள் பொதி யப்படுவதினால் அது ஒளியை உட்பிர வேசிக்கவும் பிரதிபலிக்கவும் ஏற்ற தன்மை யுடையதாகக் காணப்படுகின்றது. இதனால் சாதாரண முத்துக்கள் கூட பார்ப்பதற்கு மிகவும் பிரகாசமாகவும் அழகாகவும் ஒளிர்வுடையதாகவும் தோன்று கின்றன. கறுப்பு நிறமான முத்துக்களும் மிக அருமையாகக் கிடைக்கின்றன.

ஜப்பானியர், சிப்பியின் வாய் வழியாகச் சிறு தானியத்தை உள்ளே தள்ளிவிடுவார்கள். அவ்வாறு உருவாக்கப்பட்ட சிப்பிகளை கூண்டு ஒன்றினுள் வைத்து நீருள் பாது காப்பாக அமிழ்த்தி வைப்பர். நாளடைவில் மணிகள் பொதிக்கப்பட்டு முத்துக்கள் உண்டாகும். உருவத்தில் பெரிய முத்துக் கள் பெறுவதற்கு பல ஆண்டுகள் காத் திருக்க வேண்டும். இவ்வாறு பெறப்படும் முத்துக்கள் பண்பாடாக வளர்த்தெடுக்கப் பட்ட (cultured) முத்துக்கள் எனப்படும். மிமிமாட்டோ என்ற ஜப்பானியர் வளர்த் தெடுக்கப்பட்ட (cultured) முத்துக்களின் தந்தை எனப்படுகிறார். 1893ஆம் ஆண்டு முதல்முறையாக செயற்கை முத்தை வளர்த்து சாதனை படைத்தார். அவ்வாறு தள்ளப்பட்ட தானியத்தின் மீது நேக்கர் (Nacre) படிந்து, நன்கு விளைந்த முத்தாக வெளியில் எடுக்கப்பட்டு, நல்ல விலைக்கு விற்பனையாகிறது. நன்னீர் முத்து பொதுவாக கடல்நீர் முத்தைவிடக் குறைந்த விலையில் கிடைக்கும். சிப்பிக்குள் முத்து உருவாகும் விந்தை இயற்கை தருகின்ற வரப்பிரசாதங்களிளொன்றாகும். சிப்பியில் சிறிய முத்து உருவாக 4 ஆண்டுகளும் பெரிய முத்து உருவாக சுமார் 15 ஆண்டுகளும் ஆகும்.

சில வகை மீன்களின் செதில்களைக் கொண்டு முத்துச்சாறு (Pearl essence) உற்பத்தி செய்யப்படுகின்றது. அதை ஊன் பசையுடன் கலந்து கண்ணாடி மணிகள் மீது அவற்றைப் பூசி போலி முத்துக்கள் (synthetic) தயாரிக்கின்றனர். முத்துக்களின் நிறை அதிகரித்துக் காணப்படுவதற்காக சில தொழில்நுட்ப யுக்திகள் பயன் படுத்தப்படுகின்றன.

மழைத்துளி சிப்பியில் விழுந்து முத்தாகுமா?


(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)

Nallur Kumaran நல்லூர் குமரன் பட்டுச்சேலைகளின் சாம்ராச்சியம்
புதிய முகவரியில்: 83 Dynamic Drive Unit 7 ( Markham & McNicoll க்கு அருகாமையில் McNicoll & Dynamic Dr.) Scarborough ON. M1V 4C8

Grand Opening & 25th Anniversary - Start January 01, 2019
Open 6 Days - 11:00 am to 7:00pm Closed on Tuesdays
• Kanchipuram Silk Sarees • Softsilk Sarees • Cotton Sarees • Designer Sarees
More than 25 million dollar sarees sold, High quality Sarees , Better price Guarantee
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
Tel: 416-285-6797 Cell: 416-414-6738



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலும்புகளை இணைக்கும் மூவகை திசுக்கள்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

உடலில் உள்ள எல்லா எலும்புகளையும் இறுகப் பிடித்திருக்கும் மூவகை திசுக்கள் இல்லையென்றால் எதையும் செய்ய முடியாது. மனித இனம் மட்டுமல்ல எல்லா எலும்புள்ள விலங்குகளுக்கும் இவை பிரதானமானவை. அவையாவன முறையே தசைநார்கள் (Ligaments), தசைநாண்கள் (Tendons), குருத்தெலும்புகள் (Cartilage) என்பனவாகும்.


முதலாவதாக தசைநார்கள் (Ligaments) - இவை மிகவும் உறுதியானவை, வளையக் கூடியவை, இரண்டு எலும்புகளை இணைப்பவை. இவற்றிற்கு பல்வேறு பெயர்கள் இருந்தாலும் செயற்பாடுகள் ஒன்றாகவே இருக்கும். இவற்றை இணைக்கும் திசுக்கள் (Connective tissues) எனவும் கூறலாம். இவை உள்ளே உள்ள உறுப்புகள், எலும்புகள் என்பவற்றை இணைத்து அந்தந்த இடத்திலே வைத்துக் கொள்ள உதவுகின்றன. சில வெள்ளை நிறமாகவும், சில மஞ்சள் நிறமாகவும் இருக்கும். இவை இரண்டும் இழுபடக்கூடிய (Elastic) தன்மை கொண்டவை. விலா எலும்புகளை அப்படியே இறுக்கிப் பிடித்திருப்பவை. இதுபற்றிய கல்வியை 'Desmology' என்பர்.

அடுத்து தசை நாண்கள் (Tendons) - இவை தசைநார்களைப் போன்றதென்றாலும் சிறு வேறுபாடுள்ளவை. தசைநார் என்பது ஓர் எலும்பை இன்னொரு எலும்புடன் இணைப்பது. ஆனால் தசைநாண் என்பது எலும்புகளை தசையுடன் இணைப்பது. எல்லாமே இணைந்துதான் மனித உடல் பாதுகாக்கப்படுகின்றது.

அடுத்து குருத்தெலும்புகள் (Cartilages) - இவை மிக மென்மையான திசுக்கள்தான். இவை மூட்டுக்களைதும் எலும்புகளையும் இணைப்பவைதான். எல்லா மூட்டுக்களிலும் இவற்றை காணலாம்.

பொதுவாக உடலில் நோவு ஏற்பட்டு வைத்தியரிடம் சென்றால் மேற்கூறிய ஏதாவது ஒன்றில்தான் பிரச்சினை இருக்கும் என கூறுவர். இந்த தசைநார்களில்: Articular ligaments. Peritoneal ligaments, Fetal remnant ligaments என்பன மிக முக்கியமானவை. இவற்றுள் முதலாவது வகையான Articular ligaments மிகவும் முக்கியமானவை. எப்படி இவை இழுக்கப்பட்டாலும் பழைய நிலைக்கு திரும்பும் சக்தி படைத்தவை. உதைபந்தாட்டத்தில் எத்தனையோ கோணங்களுக்கெல்லாம் கால்களை பாவிக்கிறோம். இந்த தசை நார்கள் இல்லை என்றால் கால் பழைய நிலைக்கு திரும்பாது. விளையாட்டு வீரர்கள், உடற்பயிற்சியாளர்கள், நடனமாடுபவர்கள், தற்காப்பு கலைஞர்கள் இந்தத் தசை நார்களை அதிகம் பாவிக்கின்றனர். தசைநார்கள் சேதமடைந்து விட்டால் இவற்றை சரிசெய்வது கடினமாகும். சிலருக்கு நன்றாக இழுபடக் கூடிய தசை நார்கள் உள்ளன. எல்லா கிழிந்த தசைநார் களுக்கும் சத்திரசிகிச்சை தேவையில்லை. சிலவற்றை மாற்றிவிடலாம். இதற்கும் மாறானது விட்டால் சத்திரசிகிச்சை தேவை. நீண்டகாலத்தில் ஆதரைட்டிஸ் (Arthritis) எனப்படும் மூட்டுவலி ஏற்படலாம்.

இரண்டாவது Peritoneal ligaments - இவை உள்ளுறுப்புகளில் வளைந்து சென்று உறுப்புக்களை பாதுகாப்பவையாகும். இவை




கல்லீரலை சுற்றிவர உள்ள குருதிநாளப் பகுதியை ( Hepatic portal vein )யும், வயிற்று பகுதியில் உள்ள உதரவிதான பகுதியையும், சிறுநீர் பையை சுற்றியுள்ள பகுதியையும் இணைக்கும் தசை நார்களாகும்.

மூன்றவதான Fetal remnant ligaments என்பவை சில குழாய்களில் உள்ள அமைப்புக்களில் ஒரு இணைப்பாக அமைந்துள்ளது. தொப்புள்கொடிக்கான உட்பகுதி, ஈரலை சுற்றியுள்ள பகுதி, நாடிகளை சுற்றியுள்ள பகுதிகளில் இவை காணப்படும். பொதுவாக தலை,கழுத்து, தொண்டை, இடுப்பு, மணிக்கட்டு முழங்கால் போன்ற பகுதிகளில் தசைநார்கள் அதிகமாக காணப்படும்.

எமது உடலில் உள்ள மிக நீளமான தசைநார் (Anterior Cruciate Ligament) முழங்காலில் உள்ளது. அநேகமாக விளையாட்டுத்துறையில் உள்ளவர்களுக்கு இதில் கிழிவு ஏற்பட்டால் சத்திரசிகச்சை செய்தே மாற்ற முடியும். புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களால் சத்திரசிகிச்சை மூலம் செயற்கையான தசைநார்கள் பொருத்தப் படுகின்றன. இந்த தசைநார்கள் polyacrylonitrile என்ற செயற்கை நார்ப் பொருட்களால் (Synthetic fiber) செய்யப் படுகின்றன. பிரான்ஸ் தேசத்தில் உள்ள விஞ்ஞானிகள் Ligament Augmenta tion and Reconstruction system மூலம் இத்துறையில் பல வெற்றிகளை பெற்றுள்ளனர். எப்படியெனினும் இயற்கையான தசைநார்கள் போல் இவை இருப்பதில்லை. உலலுக்குத் தேவையான சிலவகை ஊட்டப் பொருட்களை செயற்கையான தசைநார்களிருந்து பெறமுடிவதில்லை. எனினும் கூடுதலான பிரச்சினைகள் முழங்கால்களில் ஏற்படுவதால் பல நிறுவனங்கள் இந்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளன. இன்று உல கிலுள்ள விளையாட்டுவீரர்களின் முழங்கால் களில் உள்ள தசைநார்களில் ஏற்படும் விபத்துக்களுக்கு இப்படியான சிகிச்சைகளே




சிறந்த தீர்வாகும்.

இரண்டாவது செயல்பாட்டுவடிவம் தசை நாண் ஆகும். எமது உடலில் உள்ள தசைகளை (Muscles) எலும்புடன் இணைப் பதே தசைநாண்களாகும். இது மிகவும் இறுக்கமான நார்களான திசு என்பதுடன் தசைகளை எலும்புகளுடன் இணைத்து பலத்தை கூட்டுகின்றன. Collagen என்னும் புரதத்தினால் ஆனது. தசைநார் ஓர் எலும்பை இன்னொரு எலும்புடன் இணைப்பது. ஆனால் தசைநாண் தசையை எலும்புடன் இணைப்பதாகும். அத்துடன் எந்த ஒரு அசைவையும் தாங்கக் கூடியது இது. மிகவும் வலிமையும் வாய்ந்தது.

தசை நாண் இழுபடும் தன்மை வாய்ந்தது. குறிப்பாகப் பாதத்தில் உள்ள Achilles Ten don மிகவும் முக்கியம் வாய்ந்தது. இது மிகவும் இறுக்கமானது. எத்தனையோ பயிற்சிகளுக்கும் விளையாட்டுகளுக்கும் குறிப்பாக விண்வெளி வீரர்களுக்கும் இதுவே மிகவும் முக்கியமானது. தசை நாண்களில் பலவிதமான காயங்கள் ஏற்படலாம். இதன்போது தசைநாண் அழற்சியும் தேய்வும், பலவீனமும் அடையும். இறுதியில் தசை நாண் சிதைவுறும். தசைநாண் தேய்வுறுவதால் Collagen சத்துக் குறையும், செல்கள் பாதிப்புறும். இவையெல்லாம் வயது, உடற் பாரம், சத்துகள் என்பவற்றில் தங்கியுள்ளன. இத்துடன் விளையாட்டுகள், பாரம் தூக் குதல், பிழையான பயிற்சிகள், கால நிலை என்பன தொடர்புபடுகின்றன. இக்குறைபாடு Tendinosis எனப்படும்

தசைநாண்களில் முக்கியமான பகுதி பாதத் தின் பின்பகுதி குதியில் உள்ள achilles tendon ஆகும். இது பல தொழிற்பாடு நிறைந்தது. உடலில் மிக நீண்ட தசை நாண் இதுவாகும். இது மிகவும் உறுதியானது. ஆனால் வளையக் கூடியது. இதில் பிரச் சினை வருவது குறைவு. இளைஞர்களையே கூடுதலாக பாதிக்கின்றது. குதியுடன் இது இணையும் பகுதி முக்கியமானது. இது ஓடுபவர்கள், ரென்னிஸ், உதைபந்தாட்டம் செய்பவர்களுக்கே ஆபத்தானது. சிலருக்கு மூட்டு வலியால் பாதிப்புண்டு. இந்த தசை-நாண் காரணமாக நிலத்தில் அழுத்தம் ஏற்படும்போது குதிவலி (Achilles Tendinopathy) ஏற்படலாம். இதற்கு நிழ லுரு (Xray), MRI படங்கள் மூலமாக பிரச்சினைகளை அறியலாம். இதற்கு ஓய்வு, ஐஸ் வைத்தல், அமர்ந்திருக்கும்போது காலை சற்று உயரத்தில் வைத்தல் போன்றவற்றால் ஓரளவு ஆறுதல் ஏற்படும்.

அடுத்துள்ள முக்கிய அமைப்பு குருத் தெலும்பு ஆகும். உடலில் உள்ள எல்லா பாகங்களையும் உறுதிபட வைப்பது குருத்து தெலும்புகளாகும். இது உறுதியான திசு வாகும். எனினும் எலும்பை விட சுலபமாக

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)

ALL LINK
TRAVEL & TOURS INC.



வேறு எந்த விமான பிரயாணச் சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!

இந்த கட்டணங்கள் 2019 ஜனவரி மாதத்திற்குரியவை!

**Cheapest air fares:**
- Colombo $ 1100
- Chennai $ 1060
- Bangalore $ 1040
- Paris $ 490
- London $ 520
- Germany $ 690
- Zurich $ 520


**All-inclusive packages:**
- Cuba $ 569
- Mexico $ 699
- Dominican& Republic $ 899

All these fares are applicable for January 2019

Contact: SUTHA
OFFICE-416 293 8700 CELL- 416 312 2995
ALL LINK TRAVEL & TOURS Inc. SCARBOROUGH. AJAX. BRAMPTON. MISSISSAUGA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




May your New Year arrive with hope and full of blessings.
Have a prosperous and healthy New Year!




New and Experienced Sales reps/Brokers are welcome to join our successful team.

Free Real Estate classes start every week.
• Office open 7 days • 9:00 am - 9:00 pm
• Over 5,000 Sqft. office • Conveniently Located in GTA Square Mall

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

For More info. Call 416.321.6969

HomeLife / GTA Realty Inc.*Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஓர் அழகிய தீவு
# Dominican Republic
## Punta Cana & Puerto Plata



## இங்கு ஒரு சுற்றுலா பிரயாணம்
## வாருங்கள்! பாதுகாப்பான உல்லாச வசதிகள் ஏராளம்!

- அதி உயர் வசதிகளுடன் தங்குமிடம்
- உணவு வகைகள் பானங்கள்
- விமான நிலையத்திலிருந்து போக்குவரத்து (Helicopter , Limousine, SUV)
- 3-12 வயது சிறுவர்களுக்கு அரைக் கட்டணம்
- விமானச் செலவு $475 - $650 உங்களுடையது

- Individual Room / Couple Room
- Group Rooms / Family Resort
- 14 Restaurants
- 12 Bars
- 9 Swimming Pools
- 5 Beaches

## SPECIAL PACKAGES
- HONEYMOON COUPLES
- ANNIVERSARY CELEBRATIONS
- BIRTHDAY PARTIES

மேலதிக விபரங்களுக்கு:

**Raja Nadarajah**

**Cell: 647.404.1671**

email: rajanadarajah@gmail.com website: myvipresort.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Condos For sale – Anto Peter – 647 355 7693



Lake View 2 Br, 80 Western Battery Rd, (King/Strachan /Liberty)

$599,000



2 Br +2 Wr Corner Unit, 710 Humberwood Blvd, (Hwy 427/Rexwood Bvd)

$469,000



Amazing Investment Opportunity close to UOIT & Durham College, Oshawa.

$173,990

## House for Sale



Stunning house in Markham for SALE $ @ Brimley Road & Steels Ave

$799,988

## Rental Properties



House for rent in Markham, 3BR+3WR @Markham/ Elson St

$1,900

## Sale of Business



Mexican Restaurant Franchise for Sale @ Markham Rd.& Sheppard Ave

$358,000.00

"Your dream is my Objective; your satisfaction is my Goal"

HOMELIFE HIGHER STANDARDS

**Anto Peter** *MSc*
Sales Representive
Homelife/Future Realty Inc.
Call 647 355 7693
*Antopeter7693@gmail.com*

# FBM
*Focus Building Maintenance*

சொந்தமாக தொழில் செய்ய விரும்புகிறீர்களா?
உங்களுக்கு வசதியான நேரத்தில் தொழில் செய்யும் வாய்ப்பு
GTA இல் முன்னனி நிறுவனமாகத் திகழும் Focus Building Maintenance
உங்களுக்கு இந்த அரிய வாய்ப்பை வழங்குகிறது

Supervisors
Sub-Contractors
Office and restaurant cleaners
(Part time/Full time)



பதிவு செய்ய நேரில் வர
235 Nugget Ave Unit 21
Scarborough ON



தொடர்புகளுக்கு | 416-276-3136
416-283-2561

www.focuscleaning.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பரியோவான் கல்லூரி 125 ஆண்டு விழா

## நினைவில் நிற்பவை -8



- துறையூரான் -

## St. John's College

மேற்படி விழா நான் கல்லூரியில் 4ஆம் வகுப்பில் சேர்ந்தபோது 1948இல் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இக்கல் லூரி பிரித்தானியா மிஷனரிமாரால் 1823ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்நாட்களில் இப்பாடசாலையின் அதிபர்களாக பிரித் தானியரே இருந்தனர். இதன் முதலாவது அதிபராக ஜோசப் நைற் என்பவரே இருந்தார். இது நல்லூர் ஆங்கில செமினறி என்ற பெயருடன் 7 மாணவர்களோடு அவரது வீட்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1845இல் இது சுண்டிக்குளிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டு சுண்டிக்குளி செமினறி என்ற பெயருடன் இயங்க ஆரம்பித்தது. 1891இல் இது பரியோவான் கல்லூரி St. John's College எனப் பெயரிடப்பட்டது. இது தனியார் கல்லூரியாகவே இயங்கி வந்தது. 1945இல் அரசாங்கம் இலவசக் கல்வித் திட்டத்தை ஆரம்பித்தது. இப்பாடசாலை இத்திட்டத்தில் சேராமல் கட்டணம் வசூலிக்கும் கல்லூரி யாகவே இயங்கியது. அப்போது படிக்கும் வகுப்புக்கேற்ப ஒரு தவணைக்கு ரூபா 25 கட்டியது எனக்கு நினைவிருக்கிறது. இதனால் வசதி படைத்தவர்களே இங்கு படித்தனர். எனினும் கல்வித் தரம் மிகவும் உயர்வாய் இருந்ததால் யாழ். குடா நாட்டிலிருந்தும், அண்டை நகரங்களிலிருந் தும் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித் தனர். பொல்காவலை, குருநாகல், அநுராத புரம், கண்டி, பதுளை போன்ற இடங்களி லிருந்தும் மாணவர்கள் வந்து படித்தனர். என்னோடு இருக்கும் புறா வில்சன் என்ற ஒரு சிங்கள மாணவனும், பெரியசாமி என்ற மலையகத் தமிழ் மாணவனும் படித்ததாக ஞாபகம். அந்நாட்களில் ஆங்கிலமே கற்றல் மொழியாக இருந்ததால் யாவரும் இனமத வேறுபாடின்றி இங்கு படித்தனர்.

ஆங்கில அதிபர்களில் கடைசியாக இருந் தவர் ஹென்றி பீற்றோ. இவர் 1940இல் கடலில் நீந்தச் சென்று இறந்து போனார். இவருக்குப்பின் முதல் தமிழ் அதிபராகப் பதவி ஏற்றவர் வண J.T. அருளானந்தம். இவர் காலத்தில் தான் நான் அங்கு கல்வி கற்றேன். இவருடைய இரண்டாவது மகன் விஜயராஜன் எனது வகுப்பில் 8ஆம் வகுப்பு வரை படித்தார். பின் அவர் ஈராக் நாட்டில் முதலாவது செயலாளராக இலங்கை வெளி நாட்டுத் தானிகர் பணியகத்தில் செயலாற் றியபின், ஓய்வு பெற்றுத் தற்போது கலிபோர்னியாவின் வாழ்கிறார்.

இனி இக்கல்லூரியின் 125ஆம் ஆண்டு விழா பற்றிப் பார்ப்போம். இவ்விழா 4 நாட் களாக வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. பழைய மாணவர்கள் யாவரும் நிதி சேர்த்தும் பிற நிறுவனங்களிடமிருந்தும் நன்கொடைகள் பெற்று 125ஆம் நினைவு மண்டபமாக ஒரு பெரிய அழகான விஞ் ஞான கூடம் கட்டப்பட்டது. முதல்நாள் நினைவாக இக்கட்டிடம் பிரபலமான அரசியல்வாதியும் பழைய மாணவருமான S.J.V. செல்வநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டதென நினைக்கின்றேன் (?)



இதில் பல பழைய மாணவர்களும் ஏராள- மான பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

கனடியப் பணிகள் - மொன்றியலில் தமிழர் ஒளி நிறுவனம் பலவித தமிழ் மற்றும் கல்விப் பணிகளில் ஈடுபட்டிருந்தது. அதனுடன் இணைந்து திட்ட ஒருங்கிணைப்பாளராக இவர் தொண்டாற்றத் தொடங்கினார். தமிழர் ஒளியின் 'தமிழ்த் தென்றல்' வானொலிச் சேவையிலும் தமிழ் ஒளி இளங்கீற்று சஞ்சிகை வெளியீடுகளிலும் இவரது பங்களிப்புகள் அதிகம் இருந்தன.

1990முதல் இவரது எழுத்துப் பணி விண்வெளிக் கப்பலின் வேகங்கண்டது. தமிழருவி, நம்நாடு, தமிழோசை, முழக்கம், உதயன், ஈழநாடு, சுதந்திரன், விளம்பரம், தாய்வீடு ஆகிய பத்திரிகைகளிலும் தமிழர் தகவல், மேகம் (இலண்டன்), கனடா Monsoon Journal ஆகிய சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின.
எழுத்துப் பணிகளின் மத்தியில் ரொறன்ரோ வர்த்தகக் கல்லூரியிற் கற்று பிரயாணமும் உல்லாசப் பிரயாணமும் என்னும் துறையில் 1993 யூலாய் 16இல் டிப்புளோமாப் பட்டமும் பெற்றுக்கொண்டார்.
வெளியிட்ட நூல்கள்:
சிந்தனைப் பூக்கள் 1 - நம்நாடு பதிப்பக வெளியீடு, 1996
சிந்தனைப் பூக்கள் 2 - நம்நாடு பதிப்பக வெளியீடு, 2001
சிந்தனைப் பூக்கள் 3 - நான்காவது பரிமாணம் வெளியீடு, 2010

கலைபயில் கட்டுரையாளர் - பத்மநாதன் அவர்கள் ஒரு கலைத்துவக் கட்டுரையாளர். இவரது கட்டுரைகள் பொருள் ஒழுங்கும் கருத்துத் தெளிவும் உடையன. கூறியது கூறல், மிகைபடக் கூறல், மாறுபடக் கூறல் போன்ற குற்றங்கள் இல்லாதவை. அதனாலோ என்னவோ பலர் இவரது கட்டுரைகளை விரும்பி வாசித்தனர், வாசித்து வருகின்றனர். இலண்டன் பத்திரிகை 'புதினம்' நடத்திய உலகளாவிய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசும் பெற்றிருக்கின்றார் என்பதற்கு மேலாக நான் என்ன சொல்லவிருக்கின்றது. உன்னத பேச்சாளர் கட்டுரையாளர் மட்டுமன்றி உன்னதமான ஒரு சொற்பொழிவாளருமாவர். கலைவிழாக்கள், நூல்வெளியீடுகள் போன்றவற்றில் அவையறிந்து பேசுவார். வானொலிகளிற் பேசுவதென்பது ஒரு தனிக் கலை. இந்தக் கலையிலும் பத்மநாதன் வல்லவர். கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஆசிய வானொலி, கீதவாணி, கனடியத் தமிழ் வானொலி ஆகியவற்றில் பலவித கருத்துரைகளை வழங்கியிருக்கின்றார் நேர்காணல்களும் நடத்தியிருக்கின்றார்.
விருதுகளும் பாராட்டுகளும்
1999 - ஒன்ராறியோ அரசின் தொண்டர் சேவை விருது: 5 வருடம்
2000 - தமிழர் தகவலின் இலக்கிய சேவைக்கான விருது
2001 - ஒன்ராறியோவின் சர்வதேசத் தொண்டர் விருது
2003 - பிரமகுமாரிகளின் உலக ஆன்மிகப் பல்கலைக்கழகத்தின் கனடாக் கிளையின் 'சிந்தனைச் செல்வர்' விருது
2004 - மணிவிழாக் குழுவின் 'சிந்தனைச் செல்வர்' விருது
2007 - ஒன்ராறியோவின் தொண்டர் சேவை விருது: 10 வருடம்
2008 - 15 வருடத் தொடர் சேவை விருது: Securitas Canada
2012 - சமூக முன்னேற்றச் சங்கங்களின் சமாசம் (இலங்கை): 'வித்தியா ஜோதி' விருது
2014 - தமிழர் சேவை நிறுவனம் வழங்கிய 'பொன்மனச் செல்வர்' விருது.
2015 'தூறல்' சஞ்சிகையின் வாழ்நாள் சாதனை விருது.

நிறைவு - இது ஆசிரியர் பத்மநாதன் அவர்களுக்குப் பொன்னாண்டு. அதாவது கடந்த 50 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக எழுத்துலகுக்கு அணியாக இருந்துவருகின்ற எழுத்தாளர். கட்டுரை இலக்கியத்துக்குக் கனதி சேர்த்த மதிப்புக்குரிய கல்விமான். இவரது சிந்தனைகள் கனடாவில் மட்டுமன்றி இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தகைசான்ற தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தொடர்ந்து எழுதி மணியாண்டு மற்றும் பவள ஆண்டையும் காண 'விளம்பரம்' தன்னம்பிக்கையுடன் வாழ்த்துகின்றது!

# பிளாஸ்டிக்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

போது பிளாஸ்டிக் பைகள் பாவிப்பதை



தவிருங்கள்.
* வெளியிடங்களுக்கு செல்லும்போது தண்ணீரை பிளாஸ்டிக் போத்தல்களில் எடுத்துச் செல்லாதீர்கள்.
*அன்றாட வாழ்வில் பிளாஸ்டிக் பொருட்கள் பாவிப்பதனை முடிந்த அளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.
* மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்க வேண்டும்.
* வியாபாரிகள் வாடிக்கையாளர்களுக்கு பிளாஸ்டிக் பைகளில் பொருட்கள் கொடுப்பதை தவிர்க்க வேண்டும்.
* பிளாஸ்டிக் கழிவினால் ஏற்படும் பாதிப்பினை தவிர்க்க ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் நடத்தல் வேண்டும்.

வாசகர்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துடன் பொங்கல் வாழ்த்து
***Happy New Year -2019 & Happy Pongal***

# உழவுத் தொழில்

விவசாயம் இல்லையெனில் என்னாகும் எண்ணிப்பாருங்கள்
விவசாய நிலங்களை அழித்து விணாக்கினால் எங்கு செல்வோம் உணவிற்கு?

மண்ணிலும் சேற்றிலும் உழவன் பாடுபட்டால் தான்
மேதைகளுக்கும் உணவு இங்கு காண்.
உழவுத்தொழில் தாழ்வென எண்ணி
ஊரை விட்டு செல்லவேண்டாம் நகருக்கு
எக்கட்சி ஆளவரினும் உழவுத்தொழிலை
ஏற்றமுறச் செய்வதே முதல் கடமை என்
உணரட்டும் புறநாகரிகம் சோறு போடாது
உழைப்பால் உண்போம், உயர்வடைவோம்.




உழவுத்தொழிலை மேம்படுத்துவோம்
உழவரை ஊக்குவிப்போம் உயர்த்துவோம் - அவரால்
உண்ணும் உணவும் உடையும் வீடும் பெறுவோம்
உளங்கனிந்து வாழ்த்துவோம் அவரை.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கத் தெரியாத மனசு - பாகம் 15

## 'ஒரேற்றர்' சுப்பிரமணியம்



வீணை மைந்தன்

'Orator' எனும் ஆங்கிலச் சொல்லை அடைமொழியாக வைத்துத்தான் அந்தப் பெரியாரை அழைப்பர். Webster's சொல் அதிகாரக் களஞ்சியத்தில் Orator என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'a person who delivers an oration' என்றும் 'an eloquent public speaker' என்றும் விளக்கம் எழுதப்பட்டுள்ளது.

'ஒரேற்றர்' என்றால் இலங்கையில் பெரும் பான்மையோருக்கு உடனே நினைவில் வருபவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் கல்விமானுமாகிய அமரர். சுப்பிரமணியம் அவர்கள்தான்.

இலங்கையின் முன்னை நாள் பிரதம மந்திரிகளுள் ஒருவரான அமரர். எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களும் தனித்துவமான ஒரேற்றர் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எங்கடை ஒரேற்றர் சுப்பிரமணியம் ஐயாவைப் பற்றி எனக்கு என்ன தெரியும். அவர் முதல்வராகப் பணிபுரிந்த கல்லூரியில் படித்தவனுமல்ல. அவருடைய மாணாக்கானாக இருந்தவனுமல்ல.

அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட கடிதத் தொடர்பே அவரை எனது மனசு மறக்கத் தெரியாமல் மரியாதை செய்கிறது. அதற்குமுன் அவர் சுன்னாகம் ஸ்கந்தவரோ-தயாக் கல்லூரியின் முதல்வராகவிருந்த போதும், இளைப்பாறிய பின்பும் இரண்டோ மூன்று தடவை அவருடைய பழைய மாணவன் டாக்டர் இராஜேந்திராவின் வைத்தியசாலைக்கு வந்து போயுள்ளார். டாக்டரிடம் அவருக்கு அளவுகடந்த பிரியம். மிகவும் பணிவுள்ள பழைய மாணவனாகவே, தான் ஒரு வைத்தியர் என்பதையும் மறந்து டாக்டர் ஒரேற்றர் ஐயாவுடன் சம்பாஷிப்பார். நானும் கொஞ்சம் தூரத்திலிருந்து இருவரும் உரையாடுவதைப் பார்த்து பிரமிப்புடன் இரசிப்பேன்.

வெள்ளைவேட்டி - வெள்ளை நாஷனல் - வெள்ளை நிறப் பெரிய சால்வை அணிந்து கையெழுத்துக் கும்பிடக்கூடிய தமிழனாக வருவார். அவருடைய ஊரான கட்டுடையிலிருந்து காங்கேசன்துறை ஈஸ்வரி வைத்தியசாலைக்கு வருவார். ஒருமுறை அவருடைய மகளுடன் வந்ததாக ஞாபகம். "உனக்கென்னை வேலை வைத்திய-சாலையில்" என்று நீங்கள் கேட்கலாம்.

நான்தான் டாக்டருடைய முதலாவது மருந்து கலவையாளர். Dispenser என்றும் ஓடலி என்றும் சொல்வார்கள். சுமார் 12 ஆண்டுகள் டாக்டர் ஐயாவுடன் பணிபுரிந்த காலத்தில்தான் இலங்கையின் பல்வேறு துறை சார்ந்த பெரிய மனிதர்களையும் மிகப் பெரிய சிங்கள தமிழ் அரசியல் பிரமுகர்களையும் கலைஞர்களையும் சண்டியர்களையும் சந்திக்கவும் பேசிப் பழகவும் வாய்ப்புக் கிட்டியது.



அது ஒரு காலம். சரி, இனி நான் 'ஒரேற்றர்' ஐயாவை இக்கட்டுரை மூலம் 'நாவலர்' என்று அழைக்க விரும்புகிறேன். அதற்கு முன் இவருடைய பெயர் ஆங்கில C. சுப்பிரமணியம் என் தான் இருக்கும். C. சுப்பிரமணியம் என்றவுடன் இவருடன் சேர்த்து இன்னும் இரண்டு பிரமுகர்கள் எனக்கு நினைவுக்கு வருவார்கள். ஒருவர் தமிழகத்தில் கர்மவீரர் காமராசர் ஆட்சியில் நிதி அமைச்சராகவும் நேருஜியின் அமைச்சரவையில் உணவு மந்திரியாகவும் இருந்த பெரியார். சி. சுப்பிரமணியம் இன்னொருவர். யாழ்ப்பாணத்தில் பொதுவுடமைக் கட்சி மூலம் பிரபல்யமான காலஞ்சென்ற எம்.சி. சுப்பிரமணியம் ஆக சுப்பிரமணியம் எனும் பெயரில் புகழ் பூத்த மூவர் பற்றி நான் அறிந்துள்ளேன் என்பது எனது மறக்கத் தெரியாத மனசில் புதைந்துள்ள புதினமாகும்.

இனி எங்கடை 'நாவலர்' சுப்பிரமணியம் ஐயாவுக்கு அல்லது அவருடைய பெயரின் முன் 'ஒரேற்றர்' என்ற பெயர் எப்படி ஒட்டிக் கொண்டது? மறைந்த அதிபர் அமரர் பொ. கனகசபாபதி எழுதிய 'எம்மை வாழ வைத்தவர்கள்' என்ற நூலில் அதிபர் அவர்கள் ஒரேற்றர் என்ற அடைமொழி எப்படி வந்தது என்பது பற்றி விரிவாக விபரித்துள்ளார்.

சுருக்கமாக அதிபர் எழுதிய நூலிலிருந்து உங்களுக்குத் தகவல் தருகிறேன். அப்போது அவர் யாழ். இந்துக்கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த காலம். இந்துக் கல்லூரிக்கு அப்போது அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர் அதிபர்களின் சிங்கம் என வர்ணிக்கப்பட்ட திரு. நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள். பாடசாலையில் ஒரு நாள் மாணவர் மன்றக் கூட்டம் நடைபெற்றது. மன்றத்தின் பொறுப்பாசிரியர் அன்று வரவில்லை. அதிபர் நெவின்ஸ் அகஸ்மாத்தாக

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

## EDUCATION

### Review Questions19-1

➤ **BIOLOGY 11**

1. State viruses are not considered in any of the five-kingdom system.
2. Heart rate of person decreases as his/ her fitness increases. Give a reason.

➤ **BIOLOGY 12**

(i) Explain how does mammalian red blood cells derive energy

(ii) Glucose can be obtained from the conversion of glycogen for ATP production. Do the liver glycogen and muscle glycogen supply the same amount of ATP to the muscles.

(iii) Define the term transpiration. How transpiration assists the photosynthetic process in plants?

(iv) Explain when and how mRNA is modified in the nucleus and the purpose.

➤ **PHYSICS 11**

A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment?

➤ **PHYSICS 12**

A thin film coated on one side of a glass lens to reduce reflection from lens surface. Determine the minimum thickness of the coating that eliminates the reflection. Assume the index of refraction of the coating material 1.32, and glass 1.5., wavelength of light ~550nm, light approximately perpendicular to the lens surface.

➤ **PHYSICS 12**

A peanut on top of a half spherical bowl as shown in the following figure slides down . The radius of the spherical bowl is 12 cm.



Determine the vertical distance of the peanut when its leaves the bowl. Assume no friction between peanut and the surface of the bowl.

➤ **ADVANCED FUNCTIONS 12**

Prove:

$(i) \cos^2 x.\cos^2 y + \sin^2 x.\sin^2 y + \sin^2 x.\cos^2 y + \sin^2 y.\cos^2 x = 1$

$(ii) \sec^2 x - \sec^2 y - \tan^2 x - \tan^2 y$

(iii)

If $\tan x = 1$ and $\sin y = \frac{24}{25}$

with $x$ and $y$ interval $\left(0, \frac{\pi}{2}\right)$, evaluate

(a) $\csc(x+y)$ (b) $\sec(x-y)$

➤ **CALCULUS & VECTORS 12**

(A) Find $\lim_{n\to\infty} \frac{\sqrt{x^4+1} - 2x^2 - 1}{x^2}$

(B) Given that, $\vec{P} = \hat{i} - 2\hat{j} + 3\hat{k}$

$\vec{Q} = 2\hat{i} - 3\hat{j} + \hat{k}$

(i) Find the unit vector in the direction of

$2\vec{P} - 3\vec{Q}$

Answer key
19 -1 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராணியின் பதக்கம்...

- அ. அன்ரனி மனோகரன் -

கடந்த சில வருடங்களுக்கு முன், ஊரில் இருக்கும் எனது சகோதரியுடன் ஒரு நாள் கதைத்தபோது, அவள் ஒரு விசித்திரமான செய்தியை சொன்னாள். சில வாரங்களுக்கு முன் அம்மாவின் இரண்டாவது சகோதரி - எங்களது ஆசைஅம்மா காலமாகி விட்டார், தான் அவரின் இறுதிச் சடங்குக்கு, அம்மாவின் ஊருக்கு போய் வந்ததாகவும் அங்கேதான் இந்த விசித்திரம் நடந்தது என்றும் கூறினாள். ஆசை அம்மாவின் மூத்த மகள் லண்டனில் இருந்து மரணச் சடங்குக்கு வந்திருந்தாராம். ஆசைஅம்மாவின் உடலை ஐம்பது வருடங்களுக்கு முன் காலமான அவரின் கணவரின் கிடங்கில் தான் அடக்கம் செய்ய வேண்டும் என்றும் லண்டன் அக்கா அடம் பிடித்தாவாம். அது ஒன்றும் விசித்திரமாக எனக்குப் படவில்லை. ஒரே குழியில் அடக்கம் செய்வது வழமையான விடயம் தானே. ஆனால் விசித்திரம் என்னவென்றால் லண்டன் அக்கா சவக்காலைக்கு போய், கிடங்கு வெட்டுபவர்களுடன் நின்று, அவர்கள் தோண்டிக் குவித்த மண்ணில் எதையோ தேடினாவாம். என்னத்தை தேடினார் என்று என் தங்கை சொன்னபோது, லண்டன் அக்கா செயலில் நியாயம் இருப்பதுபோல் எனக்கு புரிந்தது. அவரின் அப்பா அதாவது எங்களது ஆசை அப்பாவுக்கு அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் மகாராணி ஏதோ பதக்கம் ஒன்று கொடுத்தார்களாம். அதைத்தான் ஆசை அப்பாவின் கிடங்கிற்குள் லண்டன் அக்கா தேடிப் பார்த்தார் என்று ஆக்கள் கதைத்தவையாம்.

ரூபவாகினியில் பழைய சிங்கள நாடகங்களை, அண்ணி அந்தக் காலத்திலை இலங்கையில் இருக்கும்போது பாத்திருப்பார்போல. அதிலை வாற ஊர் நாட்டமைகள், பல பதக்கங்களை தங்களுடைய கோட் பொக்கேற்றுக்கு மேல கொளுவி, தலையிலை சீப்பை செருகி கம்பீரமாக நடந்து வாறதை கற்பனை பண்ணியிருப்பார். அப்பிடித்தான் ஆசைஅப்பா சாகேக்கை, அவரையும் வெளிக்கிடுத்தி பெட்டிக்கை வளர்த்தி இருப்பினம், பிறகு அடக்கம் பண்ணும்போது பதக்கத்தை எடுக்க மறந்து விட்டிருப்பினம் என்று அவ நினைத்து, கிடங்கில் பதக்கத்தை தேடி இருக்கலாம் அல்லவா? லண்டன் அக்கா பழைய கிடங்கில் பதக்கத்தை தேடினது சரி என்றுதான் எனக்குப் பட்டது. லண்டன்காரருக்குதான் தெரியும், அவர்களின் மகாராணியால் கொடுக்கப்பட்ட பழைய பதக்கம் ஒன்று, அவர்களது வீட்டில் இருந்ததால் எவ்வளவு மதிப்பாக இருக்கும் என்று. ஆனால், அந்தப் பதக்கம் அந்தக் கிடங்கில் இல்லை என்ற விடயம், அம்மாவை தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது போனதுதான் எங்களுக்கு பெரிய ஆச்சரியமாக இருந்தது.

அம்மாவின் அப்பா பிரிட்டிஸ்காரர் காலத்தில், அவர்களின் ஊரில் றெஜிஸ்தாராக இருந்தவர். நாங்கள் சின்னப் பிள்ளைகளாக இருந்தபோது, அம்மா தனது அப்பாவைப்பற்றி அடிக்கடி எங்களிடம் பெருமையாகச் சொல்லி சந்தோஷப்படுவார். திருமணப் பதிவுக்காக அப்போதெல்லாம் திருமணச் சோடிகள், சுற்றத்தாருடன் றெஜிஸ்ராரின் வீடு தேடி வந்து, திருமணப்பதிவு செய்து கொள்வார்களாம். அவர்களின் வீட்டு முற்றத்துக்கு முன்பு அமைந்திருக்கும், குட்டிச் சுவர் கொண்ட அந்த சிறு மண்டபத்தில்தான், பதிவு சம்மந்தமான எல்லா நிகழ்வுகளும் நடக்குமாம். அம்மா தனது நாலு சகோதரிகளுடன், அறை ஜன்னல்சீலையை மெதுவாக விலக்கி, கள்ளமாக பொம்பிளை மாப்பிள்ளையை பார்த்து தங்களுக்குள் நமட்டு சிரிப்பு சிரித்துக் கொள்வார்களாம்.

நாங்களும் சிறுவயதில், பாடசாலை விடுமுறை காலங்களில் அம்மாவின் ஊருக்குப் போய் அந்த மண்டப சுவர்களில் ஏறி விளையாடுவோம். அம்மாவின் ஊரை நினைக்கும் போதெல்லாம், எனக்கு அவ்வூர் மணல்தான் ஞாபகம் வரும். லொறி லொறியாகக் கொண்டுவந்து கொட்டியதுபோல்,ஊர் முழுவதும் மணலால் நிறைந்து எப்போதும் வெள்ளையாகக் காட்சியளிக்கும். கடற்கரை ஒன்றும் பெரிதாக அருகாமையில் இல்லை, அப்படி இருக்க எப்படி இவ்வளவு மணல் என்று அறியாப் பருவத்தில் நான் இதை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொள்வேன். படலையில் இருந்து, முற்றத்தைத் தாண்டி, வீட்டுப் படிஏற, போதும் போதும் என்றாகி விடும். செருப்பு கால்களுடன் மணலில் புதைந்து புதைந்து நடப்பது, அவ்வயதில் பெரிய கஷ்டமாக இருக்கும். அநேகமாக செருப்பைக் கழற்றிக் கையில் கொண்டு நடந்து சென்றதுதான் எனக்கு ஞாபகம். 'எப்படித்தான் அவ்வூர் மக்கள் ஒவ்வொரு நாளும் நடக்கிறார்களோ' என்று நான் ஆச்சரியப் பட்டுக்கொள்வேன்.

யாழ்-கண்டி வீதியை அண்மித்த, தென்னம் தோப்புக்களால் நிறைந்த அந்த ஊரின் அடையாளமாக இருப்பது, வீதிக்கு ஒரு பக்கத்தில் அமைந்திருக்கும் இரண்டு புகையிரதப் பெட்டிகளைக் கொண்ட உப புகையிரத நிலையம், வீதிக்கு மறுபக்கம் உயர்ந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை கொண்ட கத்தோலிக்க ஆலயம், அதை விட அந்த சந்தியில் இருக்கும் இரண்டு கடைகள்... எனது அப்பா கூட சில வேளைகளில் அம்மாவை வேண்டுமென்றே கிண்டல் செய்வார். "கடவுளாலை கைவிடப்பட்ட ஊரடி உன்ரை ஊர், கை நீட்டினாலும், பஸ் நிற்காது' என்று சொல்லி கெக்கட்டமாக சிரித்து அம்மாவை கோபப்பட வைப்பார். அநேகமாக கடுகதி பஸ்கள் அந்த சந்தியில் நிற்பாட்டுவதில்லை. அயல் நகரத்தில் இறங்கி வேறு பஸ்ஸோ,



வாடகை கார் பிடித்தோ, அல்லது சைக்கிள் வாடகைக்கு எடுத்துத்தான் வர வேண்டும்.

தென்னம் தோப்புக்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் வீடுகளில் ஒன்றுதான் எனது அம்மா வாழ்ந்த வீடு. நாங்கள் போனதும், எமக்கு முதலில் கிடைப்பது, தென்னம் தோப்பில் உடனே பறித்த இளநீர்தான், அதை குடித்தபின் அண்ணன்மார்களிடம் கெஞ்சி, அதை இரண்டாகப் பிளந்து, வழுக்கையை சாப்பிடுவதே ஒரு தனி ருசிதான். தோப்பில் ஓடித்திரிந்து அந்தக் குட்டையான மரங்களில் இருந்து காட்டுக் கொய்யாப் பழங்களைப் பிடுங்கித் தின்பதும், பதிவான கிளைகளில் நிறைந்து தொங்கும் பாண்டி மாங்காய்களை பிடுங்கி கடித்து, பின்பு புளி என்று வீசுவதிலும், எமது விடுமுறையின் பெரும் பகுதி கழிந்து விடும். கிழமை சந்தை நாட்களில் தோப்பில் பறித்த தேங்காய்களை உரித்து, வண்டில் கட்டி அருகில் உள்ள நகரத்தில் கூடும் வாரச் சந்தைக்கு அண்ணன்மார்கள் கொண்டு போவார்கள். நாங்களும் உற்சாகமாக வண்டிலில் ஏறி சந்தைக்குப் போய் வருவோம். வீதிக்கு சமாந்தரமாக ஓடும் புகையிரதப்பாதையில், புகையிரதம் இரைந்து வரும்போதெல்லாம், வண்டிலை நிறுத்தி, யாராவது இறங்கிப்போய், வண்டில் மாடுகளின் மூக்கிணாம் கயிற்றை பிடித்துக் கொள்வார்கள், இல்லா விட்டால் மாடுகள் திமிறி ஓடத் தொடங்கி விடும்.

அம்மாவின் மற்ற சகோதரிகளின் வீடுகள் பக்கத்து பக்கத்து வேலியுடன் இருந்ததால், நாங்கள் எல்லா வீடுகளிலும், மாறிமாறி தங்கிக் கொள்வோம். அந்த மண்டபத்து குட்டிச் சுவர்களில் அமர்ந்திருந்து அவர்களின் பழைய கதைகளை கேட்போம்.

அம்மா கலியாணம் முடிக்க முன்பே, அவரின் அப்பா காலமாகிவிட்டார். அவரின் றெஜிஸ்ரர் பதவியை அவரின் இரண்டாவது மருமகன், எங்கள் ஆசைஅப்பா தொடர்ந்தார். பிறகு அம்மா கலியாணம் முடித்து, எனது அப்பாவுடன் ஊரை விட்டு வந்துவிட்டார். அதன்பின் பாடசாலை விடுமுறைகளைக் தவிர, பெரிதாக நாங்கள் அங்கு போவதில்லை. ஆனால் அம்மா,

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

## ஒட்டுமொத்தத் தமிழர்களும் கரமிணைத்துப் போராடி அடிமைவிலங்குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே!




போரோய்ந்து ஆண்டுபல ஆனாலும் சிங்களத்துப்
பொல்லாத பேரினத்தார் உள்ளமின்னும் இளகவில்லை
வேரறுத்துத் தமிழினத்தைச் சாய்த்தபோதும் வீழ்ந்தழியும்
வெந்தவரைத் தேற்றுகின்ற நல்லுள்ளம் தோன்றவில்லை
சீர்குலைந்து தடுமாறி உருக்குலையும் தமிழர்களும்
சேர்ந்தொன்றாய்த் திரண்டெழுந்து விடியலுக்காயுறுதியுடன்
சோர்வுநிலை யகற்றியுள்ளத் துடிப்போடு போராடி
அடிமைவிலங் குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே

சுயநலத்தின் வேரறுத்து கரமிணைத்து ஒன்றிணைந்து
மனிதநேயம் வளர்தெடுத்து மனோதிடத்தில் தளர்ந்திடாது
கயவர்களின் சதிவலைக்குள் வீழ்ந்திடாத வலிமையுடன்
கர்மவினை தகர்த்தெறிந்து தார்மீக நெறிசுமந்து
பயமகற்றி அடக்கியாளும் ஆட்சியாளர்க்கு இறுங்காது
பகையெதிர்க்கும் மானமுள்ள விலைபோகாத்தலைமையின்கீழ்
வியக்குமொரு சக்தியாகத் திரண்டெழுந்து போராடி
அடிமைவிலங்குடைத் தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே

தேசியத் தலைமகனின் இறுங்காத ஆண்மையுடன்
தேசத்தின் விலங்குடைக்கப் பேரவையின்பலம்பெருக்கி
தேசியம் காக்குமொரு தன்னாட்சித் தீர்வுக்காய்
தமிழினத்தார் நாமொன்றாய்த்தயங்காது திரண்டெழுந்து
நீசர்களின் இனமழிக்கும் செயல் தகர்த்துத் தாயகத்தில்
நிர்க்கதியாய் இடுக்கண்ணுறும் உறவுகளை மீட்டெடுக்க
பாசத்தின் துடிப்போடு உறவுகள்நாம் போராடி
அடிமை விலங்குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே

இராணுவத்தின் இறுக்கத்தில் தாயகத்து உறவுகளும்
நிலமிழந்து, மனையிழந்து, உறவிழந்து, வாழ்விழந்து
வேரறுந்த மரமாகச் சாய்ந்தங்கு சரிகையிலே
புலம்பெயர்ந்த உறவுகளுக்குள் பிரிவினைக்கு இடங்கொடாது
சர்வதேச ஆதரவுக் கொருமனதாய் குரலெழுப்பி
சந்ததியின் நலனுக்காய்த் தன்னாட்சி மீட்டெடுக்க
ஒட்டுமொத்தத் தமிழர்களும் கரமிணைத்துப் போராடி
அடிமைவிலங்குடைத்தெறிய இதழவிழ்ப்பாய் புத்தாண்டே

- மாரீசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கத்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

(திடீரென) அங்கு போனார். என்ன செய்யலாம் என எண்ணியவருக்கு குயுக்தியாக ஒரு எண்ணம் ஏற்பட்டது. சில தலைப்புகளை பேப்பர் துண்டுகளில் எழுதிச் சுருட்டிப் போட்டவர், மாணவர்கள் எவரை-யேனும் வந்து அதில் ஒரு துண்டை எடுத்து அதில் உள்ள தலைப்பின்படி ஆங்கிலத்தில் பேசுமாறு பணித்தார். சுப்பிரமணியம் என்ற பையன் மிடுக்குடன் எழுந்து ஒரு துண்டை எடுத்தான். அவனது அதிஷ்டம் அவனுக்குப் பிடித்தமான விடயமே தலைப்பாகவிருந்தது. 'கரும்பு தின்னக் கூலியா வேண்டும்.'
வாழ்வின் இலட்சியங்கள்' என்ற தலைப்பில் அவன் பேச வேண்டியிருந்தது. அவன் இந்தியாவில் கல்வி கற்ற பொழுது அவனுக்கு அது தொடர்பான அறிவு பெறமுடிந்தது. அதுபற்றி 'அன்னிபெசன்ற்' அம்மையாரின் எழுத்துக்களை முன்பே வாசித்தறிந்துள்ளான். வெளுத்து வாங்கினான். ஆங்கிலத்தில் செவிமடுத்தவர்கள் வாயைப்பிளந்து நின்றனர். 'ஐமாய்த்து' விட்டான். நமது மாணவன் சுப்பிரமணியன். அதிபர் நெவின்ஸ்சுக்கோ பரவசம் என்ற பரவசம். 'இவன் ஒரு ஒரேற்றரடா' என்றார் மலைப்புடன். 'வசிஷ்டர் வாய்ப் பாராட்டு' அன்று முதல் அவனது நாவன்மை மேடைகள் தோறும் முழங்கிற்று.

சி. சுப்பிரமணியம் அன்று முதல் 'ஒரேற்றர்' சுப்பிரமணியம் ஆனார். இவ்விதம் புகழ்பெற்ற நாவலர் சுப்பிரமணியம் அவர்கள் ஓய்வுபெற்ற பின் சிலகாலம் இலண்டனில் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். அச்சமயம், மொன்றியல் நகரில் எனது தலைமையில் கனடா தமிழ் கலாச்சாரச் சங்கம் (1992) எனும் அமைப்பு இயங்கி வந்தது. எங்கள் அமைப்பு ஆண்டு தோறும் நடத்தும் 'வாணி விழா'வில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டு நமது கலைஞர்களையும் கௌரவிப்போம். சிறப்பு மலருக்கு இலண்டனில் வாழும் நாவலர் சுப்பிரமணியம் ஐயாவிடமிருந்து வாழ்த்துச் செய்தி ஒன்றைத் பெற்றிருந்தோம். விழா இனிது நிறைவேறியதும் மலரின் பிரதியொன்றை ஐயாவுக்கு நன்றியுடன் அனுப்பி வைத்தோம். இது ஒரு சம்பிரதாய-மான விடயம். ஆனால் பெரியவர்தான் என்றும் 'சான்றோன் என்பதை உறுதி செய்யும் விதத்தில் எனக்கொரு பதில் எழுதியிருந்தார். இவ்வளவிற்கும் அவருக்கும் எனக்கும் எந்தவித ஆத்மார்த் தமான தொடர்பும் இருந்ததில்லை. ஆனால் அவர் எழுதிய பதில் மடலை இன்றுவரை பொக்கிஷமாகக் காத்து வருகிறேன்.

'அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்', எனும் வள்ளுவ வாக்கிற்கொப்ப ஐயா அவர் களுடைய மானசீகமான வாழ்த்து என்னை தமிழ் கூறும் நல்லுலகில் அடையாளம் காண வைத்துள்ளது என நம்புகிறேன்.
இதோ ஐயாவின் பதில் மடல்...

அன்பிற்குரிய உயர்திரு. சண்முகராசா அவர்களுக்கு வணக்கம். உங்கள் அன்பான கடிதம் பெற்றேன். வாழ்த்துச்செய்தி அனுப்பியதற்கு நன்றி தெரிவித்தீர்கள். வாணிவிழா சிறப்புமலர் அனுப்பியதற்கும் அவற்றை பாராட்டி எழுதிய அன்பான கடிதத்திற்கும் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அருமையான மலர். ஒவ்வொரு பக்கமும் அறிவு பொதிந்த கட்டுரைகள், அறிவுக்களஞ்சியம். உங்கள் தலைமைக்குள் கனடா தமிழ் கலாச்சார சங்கம் எங்கள் அருமையான கலைகளை வளர்த்து மற்றைய இனத்தவர்களுக்கு அவற்றின் மேன்மையை வருடாவருடம் காட்டுவது பெரும்பணி. இந்த அரும்பணியை தொடர்ந்து என்றும் சிறப்பாகச் செய்ய இறைவன் உங்களுக்கும் உங்கள் அங்கத்தவர்களுக்கும் எல்லா ஆசிகள் தரவேண்டும். கலைமகள் உங்கள் உற்சாகப்படுத்த வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.



வணக்கம் அன்புள்ள
சி. சிவசுப்பிரமணியம்

# மகாராணி...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

தனது அப்பா தனக்கு விட்டுச்சென்ற சொத்து என்று சொல்லி இரண்டு பதக்கங்களை, சின்ன அலுமாரியின் அடித் தட்டை, நகைகள் எடுக்க திறக்கும் போதெல்லாம், எடுத்துக்காட்டி சந்தோசப் படுவார். இரண்டு வட்டவடிவான வெள்ளிப் பதக்கங்கள் பிரிட்டிஸ் மகாராணியால் கொடுக்கப்பட்டதாம். ராணியோ ராஜாவோ யாருடைய முகம் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சிவப்பு நிற பட்டியுடன் தனியாக இணைக்கப்பட்ட இரண்டு பதக்கங்கள். ஒன்று அம்மாவின் அப்பாவின் சேவையை பாராட்டி கொடுக்கப்பட்டது. மற்றது ஆசைஅப்பாவுக்கு கொடுக்கப்பட் டது. அம்மாதான் கடைசி மகள் என்ற படியால் ஆசைஅப்பா, தனது பதக்கத்தை யும், அப்பாவின் பதக்கத்துடன் சேர்த்து தனக்கு கலியாணப் பரிசாகத் தந்ததாக அம்மா பெருமையாகச் சொல்லி, எங்களுக்கு காட்டிவிட்டு, மீண்டும்அலுமாரி யின் அடித்தட்டில் மறைத்து வைத்துக் கொள்வார். பிற்காலத்தில் இரண்டு பதக்கங் களும், என் தம்பியின் கண்களில் பட்டு, அவன் விளையாடத் தரும்படி அம்மாவிடம் அடம்பிடித்து அழ, அவை அலுமாரியை விட்டு வெளியே வரத்தொடங்கின. பின்பு யாரும் தேடுவாரற்று, அங்கும் இங்கும் கிடந்ததுதான் எனக்கு ஞாபகம். அம்மா எடுத்து அலுமாரியில் வைத்தாவோ என்னவோ, அவற்றை நான் அதற்கு பிறகு வீட்டில் காணவில்லை.

அப்பா வவுனியாவில் வேலை செய்யும் காலத்தில் எங்களது வீட்டுக்கு அடுத்த வளவில் பெரிய அரிசி ஆலை ஒன்று இருந்தது. ஓர் ஆழமான பெரிய கிணறு தான் இரண்டு வளவுக்கும் பொதுவானது. நெல்லு ஊறப் போடுவதற்கு பெரிய நான்கு தொட்டிகளில் அவர்கள் நீரை இறைக்க, கிணற்று நீர் மட்டம் அடிக்கு போய்விடும். எங்களுடைய வீட்டுக்குப் பின்புறமாக இருக்கும் வயலில் வருடத்துக்கு ஒருமுறை நெல்லு விதைப்போம். மழை பெய்யா விட்டால் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சு வோம். கிணற்று நீர் அடிமட்டத்திற்கு போகும்போதெல்லாம் அப்பாவுக்கும் மில் முதலாளிக்கும் ஒரே பிரச்சினைதான். கிணறு ஆழமாக இருந்தபடியால், நீர் இறைக்கும் இயந்திரத்தை இரண்டு படி களில் வைக்க வேண்டும். மாரி காலத்தில் நீர்மட்டம் உயரும்பொழுது, இயந்திரத்தைத் தூக்கி, மேல் படியில் வைக்க வேண்டும், பிறகு நீர் மட்டம் குறைந்தபின் கீழே இறக்க வேண்டும். அனேகமாக நான்தான் அதை ஏற்றி இறக்குவேன். அப்போதெல் லாம் எனக்கு உதவி செய்பவர் பக்கத்து மில்லில் வேலை செய்யும் சில்வா என்பவர். இவர் மலைநாட்டுப் பகுதியில் இருந்து வந்து மில்லில் வேலை செய்தார். அடிக்கடி எங்களுக்கு உதவி செய்யவந்து பிற்காலத் தில் அவர் எங்களுடன் நெருக்கமாகப் பழகி, வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார்.

நாட்டுப் பிரச்சினை தொடங்கியபின், ஊரில் ஆங்காங்கே குண்டுவெடிப்புகள் நடை-பெறும், அப்படிபட்ட நாட்களில் சில்வாவை காண முடியாது. வீட்டுப்பக்கம் வரமாட்டார், மில்லில் ஒதுங்கி விடுவார். சில நாட்கள் கழிய தலையைக் காட்டுவார். நாங்கள் பகிடி பண்ணுவோம். அப்போதுதான் மலையகப் பகுதிகளில் ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கு எனது அக்காவும் விண்ணப்பித்திருந்தார். கேகாலை நகருக்கு பரீட்சைக்கு வரும்படி அக்காவுக்கு ஒரு நாள் கடிதம் வந்தது. அது சில்வாவின் ஊருக்கு அருகில் இருந்தபடியால், சில்வா தான் கூட்டிப் போவதாக சொன்னார். நானும் அக்காவும் சில்வாவுடன் யாழ்தேவியில் பயணப்பட்டு, பொல்காவெலவில் இறங்கி பஸ் பிடித்து, இரவு நடுச்சாமம் அவரின் ஊரில் இறங்கி, ரப்பர் தோட்டத்துக்கு ஊடாக அவரின் வீட்டுக்குப் போனதாக ஞாபகம்.

அடுத்த நாள் காலையில் எழுந்து, கேகாலைக்குப் போக, தயாராகி முன் ஹோலுக்கு வந்த போதுதான், அங்கிருந்த ஸோகேசில் அழகாக அடுக்கி வைக்கப் பட்ட பொருட்கள் எனது கண்ணில் பட்டன. எனக்கு பழக்கப்பட்ட சில பொருட்களும் அந்த ஸோகேசில் இருந்தன. அவற்றில் சில எங்கள் வீட்டில் இருந்த யேசு பாலன் பிறப்பு சுருவங்கள், சிறு பொம்மைகள்..... அத்துடன் அம்மாவின் இராணியின் பதக்கங்கள் இரண்டும். நான் ஒன்றும் அவரிடம் கேட்கவில்லை. பரீட்சை முடிய நாங்கள் பேசாமல் வீட்டுக்கு வந்து விட்டோம்.

நாங்கள் வீட்டுக்கு வந்து அங்கு கண்டதை சொல்லி சிரித்தோம். சில்வாவுக்கு சில்லறை களவு செய்ற பழக்கம் இருக்கிறது போலும் என்று அப்பா சொன்னார். அப்படிப்பட்டவர் களுக்கு ஒரு குறைபாடு. தங்களுக்கு விருப்பமான சிறு பொருட்களை கண்டவுடன் எடுத்துக்கொண்டு போவதுதான்.எங்களுக்கு அது ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை ஏனெனில் அவர் எங்கள் வீட்டிலிருந்து நகையோ காசையோ எடுக்கவில்லை. வீட்டில் ஆங்காங்கே சும்மா கிடந்த பொருட்களைத்தான் எடுத்துச் சென்றிருக்கி றார். அதன்பின் நாட்டுப் பிரச்சினை விசுவரூபம் எடுத்து தலைவிரித்தாட, ஊருக்கு போன சில்வா திரும்பி வர வேயில்லை. அதன்பின் அவருடனான தொடர்புகள் முற்றாக அற்றுப்போனது.


லண்டன் அக்கா சின்னப்பிள்ளையாக இருக்கும்போது அந்த பதக்கங்களை பற்றி அவரின் அம்மாவிடம் இருந்து கேள்விப் பட்டு இருப்பார் போல. வீட்டிலை பதக்கத்தை காணதபடியால், அவரின் தந்தையுடன்புதைக்கப்பட்டிருக்கலாம் என்று இவ்வளவு காலமும் எண்ணியிருக்கலாம்.

ஏறத்தாள ஐம்பது வருடங்கள் காத்திருந்து, சந்தர்ப்பம் கிடைத்தபோது, புதை குழியில், தேடி இருக்கிறார்கள் என்றால் அந்தப் பதக்கங்களின் மதிப்பும் மரியாதையும் எவ்வளவு பெரிதாக இருந்திருக்க வேண்டும். அக்கா ராணியின் பதக்கத்தைத் தேடி லண்டனில் இருந்து வந்திருக்கிறா என்பதை நினைக்கும் போதுதான், எனக்கு அதன் பரிமாணம் எவ்வளவு என்று புரிந்தது.

எவ்வளவு பெரிய பொருளை அதுவும் அம்மா பெருமையாகக் கொண்டுவந்த மிகப்பெரிய ஞாபகச்சின்னத்தை கவனக் குறைவால் தொலைத்து விட்டோமே என்று நினைக்கும் போதெல்லாம், கவலை தொண்டையை அடைத்து விடும்.

நான் அந்த ரப்பர் தோட்டத்து சந்தியில் நிற்பது போலவும், இருளில் நின்று வழி தெரியாது தடுமாறுவது போன்ற காட்சிகள் எனது கனவில் அடிக்கடி வந்து போயின.





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# மூலிகை உணவு மருத்துவம்



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9776

இவ்வுலகில் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்கள் பெரியோராவர். நோய் வந்தபின் சிகிச்சை அளிப்பதிலும் பார்க்க, நோய் வராமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பின் பற்றுவதே ஆரோக்கிய வாழ்வுக்குச் சிறந்ததாகும்.

சித்த மருத்துவமானது ஓர் இயற்கை மருத்துவமாகும்.

ஒருவர் தனது உணவுப் பழக்கங்களைச் சரிவரப் பின்பற்றுவதன் மூலம் நோயற்ற வாழ்வு வாழமுடியும். நோய் ஏற்பட்ட நிலையில் தகுந்த உணவுகளைப் பத்தியா பத்தியங்களைப் பின்பற்றி வந்தால் நோயிலிருந்து விடுபட முடியும். நமது வீடுகளில் சமையல் அறையில் அன்றாட உணவில் பாவிக்கப்படும் சில பொருட்கள் உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தலாம்.

ஒரு காலத்தில் தமிழர் வாழ்வில் அஞ்சாரப் பெட்டி அல்லது அஞ்சறைப்பெட்டி முக்கிய இடத்தைப் பெற்றது. இது பனை ஓலையால் இழைக்கப்பட்டு ஐந்து அறைகள் உடையதாக இருக்கும். இதனை தமிழர் மருத்துவத்தின் 'முதலுதவிப்பெட்டி' (First aid box) என அழைத்தனர். குறிப்பாக வீட்டிலுள்ள பெண்கள் முதலுதவி மருத்துவம் தெரிந்திருக்க வேண்டும் எனக்கருதி அஞ்சறைப் பெட்டி மருத்துவ முறையை குடும்ப வழி முறையாகப் போதித்து வந்தனர். இதனையே 'பாட்டி வைத்தியம்' என்றும் 'அடுக்களை வைத்தியம்' என்றும் கூறுவர்.

இந்த அஞ்சறைப்பெட்டியில் முக்கிய மருத்துவ சரக்குகளாக மிளகு, மஞ்சள், கடுகு, மல்லி, சீரகம் என்பன இடப்பட்டிருக்கும். சிலர் இவற்றுடன் பெருங்காயம், கடுக்காய், சுக்கு போன்றவற்றையும் சேர்த்து வைப்பதுண்டு. அதற்கேற்ப அஞ்சறைப் பெட்டியில் அறைகளின் எண்ணிக்கை கூடிக் காணப்படும். தேவையான பொருட்கள் தவறாது இருப்பதைப் பார்த்துக் கொள்வர். இவற்றில் தேவையானவற்றை உடனே எடுத்து வைத்திய நிலையில் பாவிப்பர். மேலும் சமையலுக்கும் எடுத்துக் கொள்வார்கள். பெரும்பாலும் சிறுசிறு வருத்தங்களுக்கு உடன் எடுத்து பாவித்து ஓரளவு படிந்து முதலுதவியாக கை வைத்திய மருந்துகளாகவும் பயன்படுத்துகின்றனர். பின்பு வைத்தியர்களிடமோ, வைத்தியசாலைக்கோ கூட்டிச் செல்வதுண்டு.

எனவே எமது சமையல் அறையில் இருக்கும் உணவு, மருந்துப்பொருட்கள்



பற்றி பார்ப்போம். வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம் - இதன் தன்மையைப் பார்த்தால் இவை எமது அன்றாட வாழ்வில் இடம்பெறும் உணவுப் பொருட்களாகும். வெங்காயம் , வெந்தயம் பெருங்காயம் என்பன சேர்த்துச் சமைக்கப்படும் குழம்பு வெந்தயக்குழம்பாகும். அசீரணத்தைப் போக்கவல்லது. மேல் கூறப்பட்ட பொருட்களின் பயனை சீரக ரசம் பாவிப்பதனாலும் பெற்றுக் கொள்ள முடியும். உடலானது வயதாகி தளர்ச்சி அடைந்து வாடிவதங்கி உடல் பலவீனம் அடைந்து தளர்வுறும் முன்னரே சீரகம் (சீர்+அகம்) அகத்தைச் சீராக்குவதினால் முன்னிலை வகிக்கின்றன.

மேலும் வெங்காயத்தின் மகிமையைப் பார்ப்போம். இதன் தாவரவியல் பெயர் Allium Cepa குடும்பம் Alliaceae ஆகும். வெங்காயத்தில் 'சின்னவெங்காயம்' சாலச் சிறந்தது. வெங்காயம் உணவுக்குச் சுவையைக் கொடுப்பதுடன், இலகுவில் சீரணமடைய உதவுகின்றது. புதுத்தம்பதியர் இரவில் வெங்காயக் குழம்பு, சாம்பாறு உணவுடன் உட்கொள்வதினால் தாம்பத்திய உறவில் ஆர்வத்தைத் தூண்டும். சிறு நீர் எரிச்சல், சிறுநீர்கட்டு என்பவற்றை அகற்றும். சிறுநீர் நன்கு வெளியேறும். வெங்காயம் + தேங்காய்ப்பால் + கற்கண்டு என்பவற்றைச் சேர்த்துச் சட்டியில் இட்டுச் சூடாக்கி கெட்டியான பதத்தில் இறக்கிக் கொள்வதை 'வெங்காயப்பாணி' என்றும் கூறலாம். இதனைக் கொஞ்சம் கொஞ்சமாக வாயில் இட்டு உமிழ்ந்து சாப்பிடுவதினால் நாட்பட்ட இருமல், இருமல் + சளிநிலை யாவும் குணமாகும்.

வெங்காயத்தை பச்சையாக தினமும் சாப்பிட்டு வந்தால் மூட்டுவாத நோய்கள் தணிவடையும். வாயவியல் அகலும். மோருடன் வெங்காயம் சேர்த்துப் பாவித்து வந்தால் தாகம், உடல்சூடு தணியும், குளிர்ச்சியுண்டாகும், வயிற்றுநோய், குடல் புண் மாறும்.

'வெங்காயம் உண்போர்க்கு தம்காயம் பழுதில்லை' எனவும் கூறுவர். மேலும் மயக்கம் அடைந்தவருக்கு உணர்வை வரச்செய்யும் முதலுதவிச் சிகிச்சையில் வெங்காயத்தை நன்கு கசக்கி உணர்வு இழந்தவரின் நாசிக்குக் கிட்டப் பிடிப்பது வழக்கம். இந்த வெங்காயத்தைக் கசக்கும் போது வெளிவரும் 'அமோனியா' நாசியில் உள்ள சளிச்சவ்வுகளையும், நரம்புகளையும் தூண்டுவதாக நம்பப்படுகின்றது.

மேலும் பீனிசம், தலையில் நீரேற்றம் (Sinusitis) போன்ற நோய் நிலையில் வெங்காயச்சாறு 2, 3 துளி நாசியில் நசியமாக விடப்படுவதும் உண்டு. பீனிச நோய், குழந்தைகளுக்குப் பாவிக்கும் கிரந்தி எண்ணைகளிலும் வெங்காயச்சாறு, வெங்காயம் சேர்ப்பதுண்டு. இது குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, நீரேற்றம் ஏற்படாது தடுக்கும் தன்மையுடையது.

தொடரும்...)

- நோயை விட அச்சமே அதிகம் கொல்லும்.
- சில சமயங்களில் இழப்புத்தான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- ஓடுவதில் பயனில்லை. நேரத்திற்கு புறப்படுங்கள்.
- எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.
- நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாய்வாய்.
- யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.
- ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.

### ஈருடலும் ஓருயிரும் ஆயினர்
### கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை தம்பதியினர்



**இரங்கற் பா**

நீடித்த நாட்கள் வாழ்ந்தார் நிலவுலகில் எவருமிலர்
ஆடி அடங்கிடும் வாழ்வில் அகவை நூறாம்
தேடிய செல்வங்கள் யாவும் சிதைந்து போகும்
கூடிநிற்கும் உயிர் இறை சக்தியிடம் இதுவே உண்மை

சுற்றமாய் வாழ்ந்த வாழ்க்கை உறவினர் கூடி
பற்றுடனே உடம்பை வழி அனுப்புவார்கள்
மற்றுப்பற்றின்றி மதிசூடிய பெருமான் தன்னை
உற்றதுணையாய் கொண்டால் உய்தி உண்டா!

'கப்டன்' வானதியை நாட்டுக்கு ஈந்தார்கள்
கண்ணியமாய் ஆசானாய் நற்சேவை செய்தார்
உற்றவர்க்கும் ஊரவர்க்கும் உதவி செய்தார்
உள்ளத்தால் மனிதனாய் உதாரணமாய் வாழ்ந்தார்

அன்றில் பறவைகள்போல் அகிலமதில் வாழ்ந்தார்கள்
அகத்திலே அன்பாலே ஒன்றி நின்றார்கள்
அம்மா சென்ற நாளாறில் துணைவரை
அழைத்துக் கொண்டார், ஈருடலும் ஓருயிருமாயினார்கள்

கவிஞனாய் மேடையெலாம் திகழ்ந்திருந்தார்
கந்தனையும் நாகம்மாள் இருவரையும் பாடிநின்றார்
விடிவுபெற தமிழினம் மேன்மை கொள்ள
வேண்டு மென தாகம் கொண்டிருந்தார்கள்


அன்புத் தம்பியார், ஆசை மைத்துனர்
நாக. சிவராமலிங்கம்

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School
ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகசனம் பயிலுவீர்



நா. க. சிவராமலிங்கம்

உடல் உறுதியாகவும், உற்சாகமாகவும், வனப்பாகவும் இருப்பதற்கும், நீண்டநாட்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் உடல் அமைப்பையும் சுக நலத்தையும் தரவல்ல மருந்துகளும் சிகிச்சை முறைகளும் இருந்தாலும் இவற்றிற்கு மேலாக செலவில்லாமல் எளிய முறையில் கைகொடுத்து உதவுவன யோகாசனப் பயிற்சிகளாகும். உடல் உறுப்புகளை அமைதியான முறையில் இயக்கி அதன் மூலம் நுரை ஈரலை உயிர்காற்றால் நிரப்பி, இதயத்தை வலிமையாக்கி இரத்தத்தை விரைவுபடுத்தி, கழிவுப் பொருள்களை விரைவாக வெளியேற்றி உடம்பை தூய்மைப் படுத்தி அத்துடன் மென்மைப்படுத்தவும் மெருகேற்றவும் மேற்கொள்ளப்படும் பயிற்சிகளே யோகாசனப் பயிற்சிகளாகும்.

வயிற்றில் வளரும் கொழுப்பினைக் கரைத்து, குறைத்து, வெறுமையாக்கி வளமையான தசைத் திசுக்களை உண்டாக்குவதே யோகசனப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். பிரணாயாமம், யோகாசனம், இயற்கை உணவு இவை உடல் நலத்திற்கு உகந் தவை. யோகசனம் பயில்வதால் ஏற்படும் நன்மைகள் பின்வருமாறு:

1. உடலுக்கு மிகுந்த பலத்தைத் கொடுக்கின்றது.
2. சோர்வையும் சோம்பலையும் ஒழிக்கின்றது.
3. உடலை அழகாக வனப்புறச் செய்கின்றது.
4. உடலின் நோய்த் தடுப்பு சக்தியை அதிகரிக்கின்றது.
5. பிணிகளைக் குறைக்கின்றது.
6. நோயற்ற வாழ்வுக்கு வழிசெய்கின்றது.
7. மனதை நல்வழியில் செலுத்துகின்றது.
8. மனதிற்கு சாந்தியைத் தருகின்றது.
9. முகத்திற்கு களையும் மூளைக்கு பலமும் தருகின்றது.
10. ஞாபக சக்தியை அதிகரிக்கின்றது.
11. இதயத்தையும் சுவாச உறுப்புக்களையும் வீரியமாக்கின்றது.
12. இரத்த ஓட்டத்தை ஒழுங்கு செய்கின்றது.
13. உடலுறுப்புக்களை முறுக்கேற்றுகின்றது.
14. அதிகம் படிக்கவும் சிந்தனை செய்யவும் ஊக்கம் தருகின்றது. இவற்றால் அறிவாற்றல் பெருகி வாழ்வில் வெற்றிபெற உதவுகின்றது.
15. சளைக்காது வேலை செய்ய உதவுகின்றது.




16. ஆண்மையை அதிகரிக்கச் செய்கின்றது.
17. கொடுந்துயர் தீரவும் அதை மறக்கவும் வழி செய்கின்றது.
18. கோபத்தை மாற்றி சாந்தப்படுத்துகின்றது.
19. உடலில் ஊளைச்சதை பற்றாது தடுக்கின்றது.
20. எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கச் செய்கின்றது.
21. என்றும் இளமையோடு இருக்க வழிசெய்கின்றது.
22. ஆயுளை அதிகரிக்கச் செய்கின்றது.

வில்லைப் போன்று உடலை வளைக்கும் கலையை அறிந்தால் எல்லையில்லாத ஆற்றல் பெருகி நல்ல உடல்வாகுடன் சொல்ல வொண்ணாச் சுகத்தில் திளைக்கலாம்.

# இயற்கையான முறையில் தடிமலை ஒழித்தல்

**Fight Off Colda This Winter Naturally**

**- Dr. ஜோர்ஜ் ட்ரெயிட்ரெஸ் -**

தடிமல் மற்றும் சளிச்சுரம் ஏற்படுகின்ற காலத்தில் நாம் பிரவேசிக்கின்ற இவ்வேளையில், உங்கள் நோய் தடைக் காப்பு இயற்கையாகவே அதிகரிப்பதையிட்டு கரிசனைக் கெடுங்கள். "Superbugs"ஐ (பெருமளவு வகையிலான ஒட்சியெதிரிகளுக்கு தாக்கு பிடிக்கின்ற பக்ரீயாவின் திரிபுகளே Superbugs ஆகும்.) ஒழிப்பதற்கு உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் உதவுவதற்காக பெருமளவு உணவுகளும், எளிய தொழில்நுட்பங்களும் உள்ளன. ஆரோக்கியமானதும், மகிழ்ச்சிகரமானதுமான குளிர் காலமொன்றை அனுபவிப்பதற்காகப் பின் வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்:

• விட்டமின் C மற்றும் துத்தநாக குறைநிரப்பிகள் (zinc supplements) உட்பட தரமான உணவொன்றைச் சாப்பிடுங்கள்.

• கிரமமாகதே காப்பியாசங்கள் செய்யுங்கள். வீட்டுக்கு வெளியே நாயொன்றுடன் நடவுங்கள், உங்கள் குழந்தைகளுடன் சறுக்கு விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள் அல்லது அயலில் உள்ள உடற்பயிற்சி நிலையத்திற்கு சென்று வாருங்கள்.

• சாப்பிடுவதற்கு முன்னரும், ஓய்வு அறையைப் பயன்படுத்திய பின்னரும் அல்லது மாசுபடுத்தக்கூடிய பொருட்களைத் தொட்ட பின்னரும் உங்கள் கைகளைக் கழுவுங்கள்.

• புண்களைச் சுத்தமாகவும், மூடிய நிலையிலும் வைத்திருங்கள். புண்கள் சரிவர குணமடையாவிட்டால் மருத்துவக் கவனத்தை நாடுங்கள்



•ஈரமானதும், வியர்வையில் நனைந்ததுமான உடுப்புக்களை உடனடியாக மாற்றுங்கள்.

• தேகாப்பியாச மையத்தில், உங்கள் சொந்த யோகா பாயையும், எழு விழுகளையும் (flip-flops) பயன்படுத்துவதுடன், உடல்நலத்தகுதி உபகரணங்களை தொற்று நீக்குங்கள்.

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மீதான மேலதிகத் தகவலுக்கு ஒன்ராரியோ மூட்டு கையாள்கைச் சிகிச்சைக் கழகத்தின் இணையதளத்தைப் பார்வையிடுங்கள்:

www.chiropractic.on.ca அல்லது 1877-327-2273 என்ற தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள். டாக்டர் ஜோர்ஜ் ட்ரெயிட்ரெஸ் (Dr.George Traitses), 416-499-5656 / www.infinite-health.com









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவைத் தொடர் 388

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்




கலகலப்பான ஆங்கில புது வருட வாழ்த்து.
பொங்கல் வாழ்த்து.
ஓ.கே. தங்கியூ. நானும் அன்னம்மாக்காவும் வாறம். ஓ.கே. தங்கியூ மீனா...என்றபடி போனை வைத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



நீண்ட நேரம் கதைத்த களையில் நீண்ட பெருமூச்சு விட்டபடி சொன்னா... ராசம்மாக்கா பிறிம்லி மீனாவின் மகன் மதன் அல்பேட்டாவிலை செற்றிலாகி விட்டானாம்! என்ன கதைச்சாலும் உலகப்பு சொன்னது உலகப்பு சொன்னது என்றுதான் கதைப்பானாம்.

பிறிம்லி மீனா இப்ப அல்பேட்டாவிலை அமசோன்.கொம்மிலை ஆனைக்கோட்டை பொங்கல் பானை ஓடர் பண்ணியிருக்கிறாவாம்.
தற்சமயம் வரப்பிந்தினா... அது பரவாயில்லை அங்கை கன மாட்டுப்பண்ணையள் இருக்கு. பொங்கல் பானையைக் கொண்டு போய் பொங்கிப் போட்டு வரட்டும் எனச்சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.
அப்பளம்.கொம், ஒடியல்கூழ்.கொம் எத்தினை .கொம்கள்



வீடு வீடாகப் பொருட்களைக் கூவி வித்த காலம் போய் வீட்டுக்குள் இருந்து கொண்டு கோல் பண்ணி பொருட்கள் வாங்கும் காலம் இது.

'இலங்கை ஜனாதிபதி 4 நாள் பயணம் மேற்கொண்டு வெளிநாடு பயணம்' என்ற செய்தியை சிறுவர் பாடசாலை மாணவர்களைப் போல் எழுத்துக்கூட்டி மெல்லமாக வாசித்தா ஆட்டிலறி அன்னம்மா.

சிரித்துக் கொண்டு ஐபொட் அகிலாண்டேஸ்வரி சொன்னா...றோம் நகரம் பற்றி எரியும்போது றோம் பேரரசர் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாராம்.



ஆட்டிலறி அன்னம்மாவுக்கு ஆத்திரம் அடக்க முடியவில்லை. எதற்கெடுத்தாலும் வெளிநாட்டு உதாரணம்தான்.

கூகிள் கோகிலா விடவில்லை. பட்.. உண்மையிலேயே அந்த நூற்றாண்டிலே பிடில் வாத்தியம் இருக்கேல்லை. சித்தார் வாசித்திருக்கலாம் என பக்கப்பாட்டு வாசித்தா கூகிள் கோகிலா.




அதுசரி, கொழும்பு அரசியல்லை எத்தினை பிரச்சினை? அதைக்கவனிக்காமல் ஜனாதிபதி மைத்திரி ஏன் வெளிநாடு போறார்? என எதிர்க்கட்சி கூட கேட்காத கேள்வியை கேட்டா ஆட்டிலறி அன்னம்மா.

அன்னம்மாக்கா கொழும்புக்கு போனா பாதுகாப்பு அமைச்சர் பதவி கிடைச்சாலும் கிடைக்கும் என வட்ஸ்அப் வரதன் காதில் முணுமுணுத்தா செக்கண்புளோர் செல்லம்மா.

ஆட்டிலறி அன்னம்மா தொடர்ந்து ஆவேசத்தைக் கொட்டினா. ஒரு நாளைக்கு 2 பிரதமர். இப்ப புதிய பிரதமர் என்று சொல்லி முடிக்கமுன் வட்ஸ் அப் வரதன் பழைய பிரதமர் தான் இனிப் புதிய பிரதமர் எனக் குழப்பினார்.



இதற்கிடையில் ஐபொட் அகிலா... யு நோ...வை..... உங்களுக்கு தெரியுமோ. பிகோஸ் ஒவ் பொலிரிகல் பிறசர். அவருக்கு டிப்பிறசன் மைன்டிலை பீஸ். ஐ மீன் அமைதியில்லை. அதுதான் வெளிநாடு போறார். இதேவேளை கூகிள் கோகிலா பிறேக்கிங் நியூஸ் கொடுத்தா...ஸ்ரீ லங்கா பிறசிடென்ற் தாய்லாந்து போயிருக்கிறார்.

ஏன் டிப்பிறசன், மென்ரல் புறப்பிளம் எண்டா...கொழும்பிலை திறமான அங்கொடை ஆஸ்பத்திரி இருக்கு. ஏன் தாய்லாந்து போறார் எனக் கேள்வியை கேட்டுவிட்டு பேசாமல் இருந்தா. அரசியல் பிரச்சினையாலை கன எம். பி.மார் அங்கொடைக்கு போயிருப்பினம்.

உலகர் சிந்தித்துப் பார்த்தார்.
துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ...
இன்பம் சேர்க்க மாட்டாயா. - பாரதிதாசன்
அப்படியானால்... உலகரின் மூளை அரசியல், சரித்திரம், கற்பனை காவியம் எல்லாவற்றையும் முன்பின்னாக வேலை செய்தது.

முன்னாள் ஜனாதிபதி, இன்று பிரதமர் பதவிக்கு முன்பின் அலைந்து ஏமாந்த மகிந்த ராஜபக்சாவிற்கு கலைஞர் கருணாநிதி, கனிமொழி மூலம் திருக்குறளை அன்பளிப்பு செய்தவர்.
அது ஜனாதிபதி மாளிகையில்தான் இருக்கும். ராஜபக்ச காசு



பணம் சொத்துக்களைத்தான் சுருட்டிக்கொண்டு போயிருப்பார். குறிப்பாக எத்தனையோ அதிகாரம் துஸ்பிரயோகம் செய்பவர்களுக்கு திருக்குறள் 133 அதிகாரமும் படிக்க எங்கே நேரம்?

உலகர் தனக்குள் நினைத்து சிரித்தார். மைத்திரி ஒருவேளை இதனைப் படித்துவிட்டுத்தான் மன அமைதிக்காக வெளிநாடு போனாரோ?

ஞாபகம் இருக்கிறதா? 01-01-2019 - 14-01-2019




1. ஆங்கில புத்தாண்டு 01-01-2019.

1. சி.வை. தாமோதரம்பிள்ளை நினைவு தினம் - 1832-1901. பல அரிய தமிழ் நூல்களை அச்சிட்டவர். ஆங்கிலேயர் பலருக்கு தமிழ் போதித்தவர். வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் பதவி வகித்தவர்.



2. கண்டி கடைசி அரசன் கீர்த்தி சிறீ ராஜசிங்கன் -1782.


3. குமார் பொன்னம்பலம் நினைவுதினம் -2000.



7. யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியானது - 1841.

8. ராகு கேது (சிம்ம ராகு - கும்ப கேது) பெயர்ச்சி.

10. 4ஆவது உலகத்தமிழாராச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் 11 தமிழ் மக்கள் பொலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர் 1974.



14. தைப்பொங்கல்

14. ஸ்ரீ சபரிமலை ஐயப்பன மகர ஜோதி.




# பொலிந்துவிட வா!

இரண்டாயிரத்துப் பத்தொன்பதே
இன்முகத்துடனே எழுந்தோடிவா
இயலாமை போக்கிட எழுச்சியொடு வா
வறுமையொடு பிணியகல வரம்கொண்டு வா
வளங்கொளிக்கும் வாழ்வுவர மனங்கொண்டு வா
அறியாமை இருளகல அறிவொளியாய் வா
அரக்ககுணம் அழித்துவிட அஸ்த்திரமாய் வா
நிலையாக தர்மமெங்கும் நிறுத்திவிட வா
நிம்மதியாய் வாழ்வுவர நீநினைந்து வா!




சாதிமதச் சண்டையினை சம்கரிக்க வா
சமாதானம் குலைப்பார்க்கு சவுக்காக வா
நீதியொடு சமாதானம் நிலைநிறுத்த வா
நிட்டூரம் செய்வாரை குட்டிவிட வா
வாதமிட்டு வம்புசெய்வார் வாயொடுக்க வா
வாழ்வென்றும் வசந்தம்வர மனம்சிரித்து வா!

சாந்தியுடன் சமாதானம் கொண்டுநீ வா
சச்சரவு ஒழித்துவிடும் தீர்வுடனே வா
காந்திபோல பலமனிதர் பிறக்கவெண்ணி வா
கசடெல்லாம் கழன்றோட காத்திரமாய் வா
பூந்தோட்டமாய் உலகு பொலிந்துவிட வா
புதும்தெம்பு வாழ்வெல்லாம் புறப்படநீ வா!

ஆட்சிபுரி உள்ளங்கள் மாறவேண்டும்
அவர்மனதில் அறவுணர்வு தோன்றவேண்டும்
அதிகாரம் காட்டுவார் திருந்தவேண்டும்
அமைதிபற்றி அவர்மனது நினைக்கவேண்டும்
காட்டுத்தனம் நாட்டைவிட்டு நீங்கவேண்டும்
கருணைபற்றி யாவருமே எண்ணல் வேண்டும்
நாட்டினிலே நலன்கள்பல பெருகுதற்கு
நன்மைதரும் ஆண்டாக வருவாய்நீயும்!

உன்னைவரவேற்க உவப்புடனே இருக்கின்றோம்
முன்னைக் கவலையெலாம் முழுதாகபோக்கிவிடு
அன்னை எனநினைத்து ஆவலுடனிருக்கின்றோம்
அரவணைத்து ஆதரிக்கும் ஆண்டாகநீவருக!



எம். ஜெயராமசர்மா -
மெல்பேண், அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம மந்திரி ஜஸ்டின் ரூடோ அவர்களும்,
லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும்
தமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றார்கள்.



# Happy Thai Pongal



From Prime Minister Justin Trudeau & Liberal MPs
as we celebrate Tamil Heritage Month across Canada



**Rt. Hon. Justin Trudeau**
Papineau



**Omar Alghabra**
Mississauga Centre
905.848.8595



**Gary Anandasangaree**
Scarborough – Rouge Park
416.283.1414



**Hon. Navdeep Bains**
Mississauga – Malton
905.564.0228



**Hon. Bill Blair**
Scarborough Southwest
416.261.8613



**Shaun Chen**
Scarborough North
416.321.2436



**Hon. Kirsty Duncan**
Etobicoke North
416.747.6003



**Iqra Khalid**
Mississauga – Erin Mills
905.820.8814



**Kamal Khera**
Brampton West
905.454.4758



**Hon. John McKay**
Scarborough – Guildwood
416.283.1226



**Hon. Bill Morneau**
Toronto Centre
416.972.9749



**Hon. Mary Ng**
Markham – Thornhill
905.479.8100



**Jennifer O'Connell**
Pickering – Uxbridge
905.839.2878



**Hon. Jane Philpott**
Markham – Stouffville
905.640.1125



**Yasmin Ratansi**
Don Valley East
416.443.0343




**Ruby Sahota**
Brampton North
905.840.0505



**Deb Schulte**
King – Vaughan
905.303.5000



**Hon. Judy A. Sgro**
Humber River – Black Creek
416.744.1882



**Sonia Sidhu**
Brampton South
905.846.0076



**Geng Tan**
Don Valley North
416.443.0623



**Jean Yip**
Scarborough – Agincourt
416.321.5454



**Salma Zahid**
Scarborough Centre
416.752.2358



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for*
*1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

*Some conditions apply


MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org